325

# ஜகன்மோகினி



325

OFFICE OF THE REGISTRAR
19 AUG 1942
MADRAS

...ம்

அ 2 ணா

ஜூலை '42
ஆனி

JL
211,N225m
N42.19.7
183869

வை. மு. கோதைநாயகி அம்மாள்

# அடுத்த இதழில்

## புதிய கதை ஆரம்பம்

வாத்ஸல்யத்தைத் தாங்கிவரும் மோகினியிடம் உங்களுக்குள்ள வாத்ஸல்யத்தைக் காட்டுங்கள். 5 இதழ்களில் முடியும் அற்புதமான இனிய நவீனம். உண்மை வாழ்க்கைச் சித்திரம். தொடர்ந்து படியுங்கள்.

*   *   *

என்ன ! வாத்ஸல்யமா ! யாரிடத்தில் ? ஆஹா ! வாக்குதத்தமா ! எவரிடம்? எதற்காக? மனித ஜென்மம் எடுத்த ஒவ்வொருவரும் தம் மனிதத் . தன்மையை அறிந்து, கடமையை உணர்ந்து, சத்தியத்திற்கும், தர்மத்திற்கும் கட்டுப்பட்டு நடப்பதுதான்உண்மையான மனிதப்பிறவியாகும்.

*   *   *

* வாத்ஸல்யம் அல்லது வாக்குதத்தம் *

59-வது "மோகினி" பிரசுரம் "வாத்ஸல்யம்" ஆரம்பத்திலிருந்து ஒரு வருட சந்தா செலுத்துவோருக்கு 31-7-42 வரையில் கலாநிலயம் 12 அணா வீதம் கொடுக்கப்படும். ரு 2—4—0 மணியார்டர் செய்தால் "மோகினி" அடுத்த ஜூலை வரையிலும், "கலாநிலயம்" (துப்பறியும் நவீனம்; 11 படங்களுடன் கூடியது.) ஒரு பிரதியும் தபால் செலவின்றி அனுப்பப்படும். ஏற்கெனவே 1942 முடிவு வரை சந்தா செலுத்தியவர்கள் இதுவரை கலாநிலயம் வாங்கியிராவிடில், உடனே 14 அணா மணியார்டர் செய்யவும். 31-7-42 வரைதான் இந்த குறைந்த விலை. தபால் செலவு இனும்.

## உடனே முந்துங்கள்.

---

அடுத்த இதழில் "வாத்ஸல்யம்" தொடர் நாவல் தவிர, வழக்கம்போல பிரபல எழுத்தாளர்களின் ரஸமான கட்டுரைகளும், அழகிய படங்களும் வெளிவரும். விலை 2 அணாதான். ஆனால் மற்ற பத்திரிகைகளைவிட அதிகமான விஷயங்களடங்கிய பக்கங்கள் உடையது.

---

4 புதிய சந்தாதாரர்களை 31-8-42க்குள் சேர்த்துக் கொடுப்போருக்கு ஒரு வருஷ சஞ்சிகை அல்லது ரு 1-8-0 விலையுள்ள மோகினி பிரசுரங்கள் இனாமாக அளிக்கப்படும். ரு 6 மணியார்டர் மூலமாகவே அனுப்பவும். புதிய நேயருக்கு ஞானதீபம் ஆரம்பம் (ஜனவரி ·42) முதல் வேண்டுமா அல்லது வாத்ஸல்யம் ஆரம்பம் (ஆகஸ்ட் ·42) முதல் வேண்டுமா என்பதைத் தெரிவிக்கவும்.

ஸ்ரீராமஜெயம்.

# ஜகன்மோகினி

ஆசிரியை: வை. மு. கோதைநாயகி அம்மாள்

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. -திருவள்ளுவர்.

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து. -ஸ்ரீ. வீரராகவ கவி.



| மலர் | சித்ரபானுஸு ஆனிமீ | இதழ் |
|---|---|---|
| 19 | ஜூலை 1942 | 7 |



## பெரியாழ்வார் அருளிச் செய்தவை

சோர்வினால்பொருள்வைத்ததுண்டாகில் சொல்லுசொல்லென்றுசுற்றுமிருந்து
ஆர்வினவிலும்வாய்திறவாதே அந்தகாலம்அடைவதன்முன்னம்
மார்வமென்பதோர்கோயிலமைத்து மாதவனென்னும்தெய்வத்தைநாட்டி
ஆர்வமென்பதோர்பூவிடவல்லார்க்கு அரவதண்டத்தில்உய்யலுமாமே.

* * * * *

துப்புடையாரை அடைவதெல்லாம் சோர்விடத்துத்துணையாவரென்றே
ஒப்பிலேனாகிலும்நின்னடைந்தேன் ஆனைக்குநீஅருள்செய்தமையால்
எய்ப்புஎன்னைவந்துநலியும்போது அங்குஏதும்நானுன்னைநினைக்கமாட்டேன்
அப்போதைக்குஇப்போதேசொல்லிவைத்தேன் அரங்கத்தரவணைப்பள்ளியானே!

---

### விஷய அட்டவணை



| | | |
|---|---|---|
| "ஜகன்மோகன கோபாலன்" (ஆழ்வார்கள்கண்ட அருந்தெய்வம்) | | |
| 2. அழகின் பரிபூர்ண அவதாரம் | ஸ்ரீ. | 2 |
| ஸ்ரீமதி டாக்டர் முத்துலக்ஷுமி ரெட்டி | எஸ். அம்புஜம்மாள் | 9 |
| சக்தி | ஸ்ரீ ஞானம்மாள் | 14 |
| ஆனியின் சிறப்பு | "குகப்ரியை" | 16 |
| வனிதாமண்டலம் | வை. மு. கோ. | 20 |
| ஞானதீபம்-(முடிவு) | வை. மு. கோ. | 193-228 |



மேலட்டை படம்: ஸ்ரீமதி டாக்டர் முத்துலக்ஷுமி ரெட்டி.

183069

---

எமது தற்போதைய விலாசம்

**ஜகன்மோகினி ஆபீஸ்,**

**சிங்கப்பெருமாள் கோவில் போஸ்ட்,**

**(செங்கற்பட்டு ஜில்லா.)**

மேற்படி விலாசத்திற்கே நேயர்கள் தங்கள் கடிதங்கள், ஆர்டர்கள், மணியார்டர்கள் முதலியவற்றை அனுப்பும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறோம். போஸ்டல் ஆர்டர்களோ, செக்குகளோ, பாங்க் டிராப்டுகளோ அனுப்பாது மணியார்டர் மூலமாகவே அனுப்பவும்.




## (ஆழ்வார்கள் கண்ட அழகுத் தெய்வம்)

### 2 அழகின் பரிபூர்ண அவதாரம்

இரவு: அறியாமையையும், விபரீத ஞானத்தையும், துஷ்ட ராட்சஸ சக்திகளையும் ஞாபகப்படுத்தும் இருட்டு. இருளுக்கிடையே ஒருவாறு வழிகாட்ட எத்தனையோ நட்சத்திரங்கள் மினுக்கு மினுக்கென்று மிளிர்கின்றன—வானத் தெருக்களில் ஏற்றிவைத்த வைர மணி விளக்குகளைப்போலவே. சந்திரனும் இருளின் திரையை விலக்கிக்கொண்டு கைவிளக்கு எடுத்துக் காட்டுகிறது. எனினும் இந்த பக்தமணிக்கு அழகிய காலைப் பொழுதிலும் சூரியோதயத்திலும் அபாரமான பிரியம். “இரவு விடியும்: நாளை நான் புதுமையாகத் தொடுத்த பூமாலையும் பாமாலையும் சூட்டி ஆசைதீர என் இஷ்ட மூர்த்தியை வழிபடுவேன்” என்று எதிர்பார்த்திருப்பார். இருளை ஓட்டும் மங்களமான சூரிய தீபத்தைக் கிழக்கே உதய கிரியிலே கண்ணுற்றதும், உள்ளத்தின் ஆழத்திலிருந்து ஞானசூரியனை இஷ்ட மூர்த்தியும் உதயமாகிறன், தன் இயற்கையான ஒளியுடனும் சௌந்தரியத்துடனும்!

### அழகான காலைவேளை

தாமரை முதலிய மலர்கள் மலர்கின்றன. அந்த மலர்ச்சி பக்தருடைய முகத்திலும் அகத்திலும் ஒருங்கே காணப்படுகிறது. அந்த மலர்கள்தான்,—அந்தச் செடி கொடிகள்கூட,—இப்போது எவ்வளவு அழகாய் ஜொலிக்கின்றன! அவ்வளவு அழகும் இவருள்ளத்திலும் ஜொலித்து முகத்திலும் பிரதிபலிக்கிறது.

அம்மலர்களை ஆசைதீர அளைந்துவரும் காலைக் காற்று எவ்வளவு உத்ஸாகமாக வீசுகிறது! பசுஞ் சோலைகள் சுடர்மயமாய் ஜொலிக்க, அக் காற்று அச் சோலைகளிலேயுள்ள மலர்களின் பரிமளத்தோடு, இப்போது கமுக மரங்களின் மடல் விரிந்த பாளைகளிலே மோதி, அந்த மணத்தையும் முகந்துகொண்டு மிகுதியாக வீசுகிறது. பட்சி ஜாலங்கள் தங்கள் அழகிய சிறகுகளிலே படிந்திருந்த பனித்திவலைகளை உதறிக்கொண்டு ஆரவாரம் செய்கின்றன; பாடுகின்றன: அவ்வளவு குதூகலமாய் வரவேற்கின்றன காலைக் கதிரவனை.

சோலைக்குள் மாத்திரமா? வெளி நிலமான வயற்காடுகளிலும் பாட்டு. பட்சிகள் மாத்திரமா? குளங்களிலுள்ள பூக்களிலும் வண்டுகள் மதுஉண்டு பண்பாடுகின்றன. பக்தருள்ளமும் அந்த அடித் தாமரைகளுக்கு வண்டாகிப் பண்பாட ஆசைப்படுகிறது.

### இசைத் தமிழின் அவதாரம்

இவர் கடலிலும் சூரியோதயம் பார்த்திருக்கிறார். கடலிலே முளைத்த அந்த மங்கள தீபத்தைக் கண்டதும், ஆனந்தமாக அலையெறிந்து முழங்குகிறதாம் அந்தக் கடல், மங்களவாத்திய கோஷங்களோடு அந்தக் காட்சியை வரவேற்பதுபோலே. அத்தகைய அலை கடல்போல அதிர்கின்றன முரசு முதலான மங்களவாத்தியங்கள், ஸ்ரீரங்கநாதனுடைய சந்நிதியிலே.

இத்தகைய ஆனந்தமான காலைவேளையில்,—இயற்கையும் செயற்கையும் ஒரே பாட்டாக இசைந்து பிரகாசிக்கும்போது,—தும்புரு நாரதர்களும் ஸ்ரீரங்க ராஜாவுக்குப் 'பள்ளியெழுச்சி'பாடுகிறார்களாம். யட்ச ஸித்த சாரண கின்னர கந்தர்வாதிகளும் திக்கெல்லாம் நிறைந்து தேவகானம் செய்கிறார்களாம். அந்த இசைகளோடு தம்முடைய இசையையும் சேர்த்துத் தேவாதி தேவனும் ராஜாதி ராஜனுமான ஸ்ரீரங்கநாதனுக்குத் 'திருப்பள்ளியெழுச்சி' பாடுகிறார் நமது பக்தமணி. இவர் யார்?—என்று சொல்லவும் வேண்டுமா?

கோழி அழைப்பதன் முன்னமே காவேரியில் நீராடிக்கொண்டிருந்த பெண்மணிகள் கூந்தலைப் பிழிந்து உதறிக்கொண்டு கரையேறுகிறார்கள். அதே சமயம் துளசி மாலையும் கழுத்துமாய்ப் பூக்குடலை பொலிந்து தோன்றும் தோளுடன் சன்னிதியை நோக்கிய தொண்டரடிப்பொடியாழ்வாரைக் கேள்விப்பட்டிராத தமிழனும் உண்டா? இவர் பாடிய 'திருப்பள்ளியெழுச்சி' என்ற இசைத் தமிழைப் பூபாள ராகத்திலே பாடிப் பாடி அனுபவிக்கவேணும்; அல்லது பாடிப்பாடிக் கேட்கவேணும்.

### தொண்டரடிப்பொடியாழ்வாரும் கிருஷ்ணாவதாரமும்

இந்தப் பாடல்கள், காலைப் பொழுதின் தெய்விக அழகை அற்புதமாகக் காட்டுகின்றன. ஆழ்வார் பக்திக் கண்ணால் பார்த்து அனுபவிக்கிறார். இயற்கை யழகுகளையும் செயற்கை யழகுகளையும், மேய்ச்சலுக்காக எருமைக் கன்றுகளைக் கட்டவிழ்த்துவிடும் ஆயர்களும், 'ஆயர்தம் கொழுந்தே!' என்று இவர் அழைக்கும் ஸ்ரீரங்கநாதனது கிருஷ்ணாவதாரத்தை ஞாபகப் படுத்துகிறார்கள். மாடுகளும் அவற்றின் பின்னேபோன பெருமானின் எளிமையை ஞாபகப்படுத்துகின்றன. எருதுகளின் கழுத்திலே கட்டிய மணியோசைகளோடு கலந்து திசையெங்கும் பரவி வருகிறதாம், அந்த ஆயர்கள் ஊதுகிற புல்லாங்குழலோசை. அந்த இசைகளின் வழியே வந்து ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவின் புல்லாங்குழலிசையும் இவர் காதில் விழுந்திருக்கவேணும்!

தொண்டரடிப் பொடியாழ்வார் ஸ்ரீரங்கநாதனை ராமாவதாரத்திலும் வழிபடுகிறார்; கிருஷ்ணாவதாரத்திலும் வழிபடுகிறார். ராமபிரான் ஸ்ரீரங்கநாதனுடைய வீரத்தின் வெற்றி: கன்று மேய்த்த கண்ணனே அன்பின் வெற்றி; எளிமையின் வெற்றி; அழகின் வெற்றி. புருஷோத்தமனுடைய தோள்களின் வெற்றி ராமன்: கண்களின் வெற்றி கண்ணன். ராமசந்திரன் வீரசௌந்தரியத்தின் பூர்ண அவதாரம்: ஞான சூரியனான கிருஷ்ணனே ஸாட்சாத் ஸௌந்தரியமே!

ஸ்ரீரங்கநாதனைத் தொண்டரடிப்பொடியாழ்வார்,

> ''பச்சைமா மலைபோல் மேனி,
> பவளவாய், கமலச் செங்கண்
> அச்சுதா! அமரர் ஏறே!
> ஆயர்தம் கொழுந்தே!...''

[கமலச் செங்கண்—செந்தாமரை மலர்போன்ற கண்கள். அமரர் ஏறே!—தேவர்களுக்கு ஆண் சிங்கம்போன்றவனே!]

என்று அழைப்பதைப் பாருங்கள். 'அமரர் ஏறே!'—அதாவது, 'தேவர்களுக்கு ஆண் சிங்கம் போன்றவனே!'—என்று பாராட்டி அழைத்தும் அந்த வீரசௌந்தரியத்தாலும் திருப்தி அடையாத உள்ளம், ஆசைதீர 'ஆயர்தம் கொழுந்தே!'—அதாவது, 'மாடுமேய்ப்பவர்களின் குலக் கொழுந்தே!—என்று கொஞ்சி அழைக்கிறது. பச்சை, பவளம், மலர், மலை முதலான அழகுகளுக்கெல்லாம் சிகரமான தெய்வ அழகே, உலகத்திற்கெல்லாம் கண்ணும் கண்ணாளனுமான கண்ணனாக வந்ததென்பது குறிப்பு.

## கிருஷ்ணாவதாரமும் திருப்பாணாழ்வாரும்

தொண்டரடிப்பொடியாழ்வாரைப்போல் திருப்பாணாழ்வாரும் ஸ்ரீரங்கநாத பக்தர்தான். இவருக்கும் பச்சைமலை, முடிவில்லாத அழகு வாய்ந்த—பெருமைவாய்ந்த—நிலை கலங்காத—கண்ணையும் நெஞ்சையும் ஒருங்கே குளிர்விக்கும்—திருமேனியை ஞாபகப்படுத்துகிறது. மலைபோன்ற மேனி, நீலமலர் போலவும் காண்கிறதாம்: அழகின் மாட்சியோடு அழகின் மென்மையும் மலர்ச்சியும் அப்படி விளங்குகின்றனவாம். நீருண்ட மேகமாகவும் காண்கிறதாம்: ஆம்; தாழ்ந்தார், உயர்ந்தார் என்ற வித்தியாசமில்லாமல் அனைவரும் உய்யும்படி கருணை பொழியும் காளமேகமல்லவா? தாமரைப் பூ, இவரை விசேஷமாய் ஆட்கொண்ட அந்த அடித்தாமரையாகவே காண்கிறதாம்.

அந்திவானத்தையே பீதாம்பரமாக உடுத்துக்கொண்ட அழகனாகிய ஸ்ரீரங்கநாதன், ஆகாசத்திலிருந்தும் ஆலயத்திலிருந்தும், மேகத்திலிருந்தும், மலையிலிருந்தும், மலரிலிருந்தும், மலர்போன்ற இவர் நெஞ்சிலிருந்தும் இவரைக் கண்டு அருள் சுரந்து வசீகரித்துவிட்டான்! 'தாழ்ந்த வகுப்பைச் சேர்ந்தவர்' என்று ஒதுக்கப்பட்டிருந்த தமக்கும் கருணைக் காட்டிய அந்த ஸ்ரீரங்க ராஜாவின் எளி

மையை இவர் முடிவில் 'வெண்ணெய் உண்ட' கண்ணனாகவும் காண்கிறார். இதனால்தான் திருப்பாணாழ்வாரை ஸ்ரீவைஷ்ணவ ஆசாரியர்கள் 'கண்ணனையே கண்டுரைத்த கடிய காதல்—பாண் பெருமாள்' என்று போற்றுகிறார்கள்.

## குலசேகரரும் கிருஷ்ணனும்

குலசேகராழ்வார் ஸ்ரீராம பக்தர் என்பது பிரசித்தம். இவரும் இயற்கை யழகுகளில் தம்முடைய இஷ்ட மூர்த்தியைக் கண்டு காதலித்தவர். திருப்பதி மலையின் அழகுகளும், பூஞ்சோலைகளும் சுனைகளும் இவருள்ளத்தை விசேஷமாய்க் கவர்ந்தன. சூரியன் முதலான சுடர்களெல்லாம் இவரது சித்தாகாசத்திலே ராமன் என்ற அரும்பெருஞ் சுடரை ஜொலிக்கச் செய்திருக்கவேண்டும். இத்தகைய ராம பக்தரும் கிருஷ்ணனை மறந்துவிடவில்லை. கழுத்தளவும் நீர் பருகிய மேகக் குழந்தைபோன்ற கண்ணனை எப்படித் தான் மறக்கமுடியும்? மேகக் கூட்டத்திலே அந்தக் குழந்தையைக் கண்டார். அந்தத் தெய்வக் குழந்தையின் சக்ராயுத ஒளியை மின்னலில் கண்டார். பூர்ண சந்திரன், அந்த முகவட்டத்தை ஞாபகப்படுத்தியது: அஷ்டமி சந்திரன், குழந்தைக் கண்ணனின் நெற்றிபோல ஒளிர்ந்தது. இளந்தளிர் அந்தத் தளிர்க்கைகளையும், மலர்கள் அந்தக் கண் மலர்களையும் நினைப்பூட்டின: நீல மலர் மாலை அந்த மேனிபோல மிளிர்ந்தது. கடல், அலைக் கையால் அந்த அழகுக் கடலைச் சுட்டிக்காட்டியது.

மயில் இறகு, அந்த அழகன் சூடிக்கொள்ளப் படைக்கப் பட்டதுபோல் தோன்றியது. புல்லாங்குழல் அந்தக் கண்ணன் வாசிக்க அமைக்கப்பட்டதுபோலவே தோன்றியது, ராமபக்தரான குலசேகரர் கண்களிலும். ஆம்: அந்த வீரசௌந்தரியத்திற்காவது கோதண்டம் என்ற வில் வேணும்: இந்தப் பரிபூர்ண சௌந்தரியத்திற்குச் சக்ராயுதம்தான் எதற்கு? அந்தப் புல்லாங்குழல் போதுமே, பூமியையும் வானத்தையும் ஜயிப்பதற்கு!

## கிருஷ்ணனும் திருமங்கையாழ்வாரும்

குலசேகரரையும் மோகிக்கச் செய்த மோகன சக்தி திருமங்கை மன்னனைச் சும்மா விட்டுவிட்டதா? உலகம், மலை, கடல், சுடர்கள் இவற்றையெல்லாம் உண்டு, 'நிறையவில்லையே!' என்ற வயிறு, வெண்ணெயும் உண்டதென்று ஈடுபடுகிறார். மண்ணையும் உண்டு வெண்ணெயும் உண்ட மாயன், பட்சபாதமில்லாமல் கள்ளர் குலத்திலே தோன்றிய தம்மையும் பக்தகுல மன்னராக்கி முடி சூட்டி வைத்தானும்.

அவனுடைய 'அலைகடல்' போன்ற அழகுகளைத் திருமங்கையாழ்வார் அவன் அவதரித்த வட இந்தியாவிலும் கண்டார்; அவன் அபிமானித்த தென் இந்தியாவிலும் கண்டார். வடநாட்டின் கம்பீரமான இயற்கை யழகுகளிலே, 'பேராயிரமுடைய பெருமான்'

'ஞானத்தின் ஒளியுரு'வாகக் காட்சி யளித்தான்; 'சுடரும் இருளு மாய்'க் காட்சி யளித்தான். அசுர சக்திகளுக்கு நஞ்சாகிய அதே சக்தி, இந்த ஆழ்வாருக்குக் கல்லும் புதரும், முள்ளும் முரடுமான அரணியங்களிலும் தரிசனம் கொடுத்தது. அதே சக்திமயமான அழகனை இவர் தென்னாட்டின் சாந்தமயமான இயற்கை யழகுக ளிலும் கண்டார்.

தமிழ் நாட்டின் இயற்கை யழகுகளிலும், முக்கியமாக அந் நாளில் தமிழ் நாட்டின் பகுதியாயிருந்த 'சேரநாடு' என்ற மலை யாளப் பிரதேசங்களின் இயற்கை யழகுகளிலும், திருமங்கையாழ் வாரின் உள்ளம் ஊறிக்கிடந்தது என்று சொல்லலாம்.

ஆனி மாதம் சாரல் கட்டுகிற காலத்தில், குற்றாலப் பக்கக்களி லும் மலையாளப் பக்கங்களிலும், மலைகளிலும் சாரல்களிலும், நீராவி நிறைந்து கருமேகங்கள் கட்டி நிற்பதையும், மழைபொழிவதையும், தூற்றலும் தூவானமுமாயிருப்பதையும், மலைகள் அருவிக் கூட்டங்க ளால் பொலிந்து விளங்குவதையும், சில சமயங்களில்இளஞ் சூரியன் தன் சுடர்க் கரங்களால் அம்மலைகளுக்கும் அருவிகளுக்கும் பொன் முலாம் பூசுவதையும் இவர் பார்த்துப் பார்த்து அனுபவித்திருக்க வேணும், தமது பக்திக் கண்களால். இவற்றையும் பார்த்து அந்த மேற்குக் கடலையும் பார்த்திருக்கவேணும், காற்று நன்றாக வீசும் போது: 'ஆஹா! முத்துக்களால் அலங்கரிக்கப்பெற்ற ஒரு மெத்தைப் பாயை உதறிப் போடுவதுபோலிருக்கிறதே அலைமேல் அலையெறியும் இந்தக் கடல்!' என்று ஆனந்தித்திருக்கவேணும்.

இப்போது பாருங்கள் இவர் வாக்கிலே பாட்டும் பகவானும் வருவதை:

> ''பருவக் கருமுகில் ஒத்து,
> முத்துடைமா கடல்ஒத்து,
> அருவித்திரள் திகழ்கின்ற
> ஆயிரம்பொன் மலைஒத்து''

வருகிறானும் கண்ணன் ஆய்ப்பாடித் தெருவிலே,

குற்றாலத்தின் சாரல் மேகங்கள்தான் இப்படி வடிவெடுத்து நடந்து வருகின்றனவோ?—என்று சொல்லத் தோன்றுகிறது ஒரு சமயம். கண்ணன் வருவதைப் பார்க்கும்போது முத்துமாலை முத லிய ஆபரணங்களை அணிந்துகொண்டு ஆபரணங்களுக்கும் ஆபரண மாய் வருகிறானும்: அந்த அழகைப் பார்த்தால், அது முத்துக்க ளோடு கூடிய ஒரு நீலக் கடலாகவே நிமிர்ந்து பொங்கி அலை யெறிந்து கொண்டிருக்கிறதாம். ஒரு சமயம் அசைந்து அசைந்து வருகிறான்; ஒரு சமயம் ஓடி வருகிறான்; ஆடி வருகிறான்; ஒரு சம யம் கொஞ்சிக் கூத்தாடி வருவதுபோல் வருகிறானும், விளையாடிக் கொண்டே. அப்போதெல்லாம் ஆயிரம் அருவிகள் திகழ ஆயிரம் பொன் மலைகள் அப்படியெல்லாம் அழகு காட்டி வருகின் றனவோ?—என்று பிரமிக்கும்படி யிருக்கிறதாம்.

இத்தகைய அழகுகளைக் கண்டது ஆய்ப்பாடியில் அல்ல; வடநாட்டில் அல்ல; தமிழ் நாட்டிலே சிதம்பரத்தில்—என்கிறார். 'தில்லைச் சித்திரகூடம்' என்ற சிதம்பரத்திலே கோவிந்தராஜப் பெருமாளைத் தரிசிக்கும்போது, தெற்கே இவர் பார்த்திருந்த மலையழகுகளும் அருவி யழகுகளும், மேகக் காட்சிகளும் கடற் காட்சிகளும் ஒருங்கே கலந்து, கண்ணன் என்ற அழகுத் தெய்வத்தைக் கண்முன் தோற்றுவித்தன வென்று ஊகிக்கலாம்.

## நம்மாழ்வாரும் கண்ணனும்

திருமங்கை மன்னன், குலசேகரர் என்ற இரண்டு ராஜ ரிஷிகளும் ராஜகோபாலனை 'அழகின் ராஜா'வாகவும் ராஜாதி ராஜனாகவும் தரிசித்தார்கள். ரிஷிகளுக்கெல்லாம் மேலான 'ராஜ ரிஷி' யென்று மதிக்கப் பெறும் நம்மாழ்வாரோ கிருஷ்ண பக்தியில் விசேஷமாக ஆழ்ந்துபோனவர். இவரும் பச்சை மலையில் அவனுடைய பச்சை மேனியைப் பார்க்கிறார். இவருக்கும் பவளம் அவனது 'பவளச் செவ்வாய்'க்கு அறிகுறி. சூரிய சந்திர நட்சத்திரங்களெல்லாம் அவனுடைய பலவித ஆபரணங்கள். மேகம், கடல் முதலியன இவருக்கும் கண்ணனை ஞாபகப்படுத்துகின்றன. நீலமலர்களும் அந்த நீலமேனியை நினைப்பூட்டுகின்றன; செந்தாமரையோ கண், திருவடி முதலியவற்றை நினைப்பூட்டுகின்றன. உண்மையில், இவருக்கு எல்லாம் கண்ணன்; எங்கும் கண்ணன்!

முத்தும் மாணிக்கமும் வயிரமும் அவன்: 'உண்ணும் சோறு, பருகும் நீர், தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன்' கண்ணனே! விண்ணும் அவன்; மண்ணும் அவனே! ஒளியும் அவன்; இருளும் அவன் மேனியே! 'அழகுள்ள சுவர்க்கமும் அவன்; அழகில்லாத நரகமும் அந்த அழகுத் தெய்வமே!' என்கிறார் நம்மாழ்வார், தத்துவ சிகரமாகிய தமது 'எவரஸ்டி'ல் இருந்துகொண்டு. கிருஷ்ண பக்தியே நம்மாழ்வாராக உருவெடுத்து நிற்கிறதென்று சொல்வதுண்டு.

## அழகின் பரிபூர்ணம்

எனினும் பெரியாழ்வாரையும் ஆண்டாளையுமே கிருஷ்ண பக்தியின் உயிர்நிலையென்று சொல்லவேண்டும். ஆண்டாளுடைய பக்தி, காதலியின் பதிபக்தி: பெரியாழ்வாரின் கிருஷ்ணபக்தியோ தாயன்பு. ஆண்டாளுக்குக் கண்ணன் காதலன்; பெரியாழ்வாருக்குக் குழந்தை. பெரியாழ்வாரும் இயற்கை யழகுகளிலே தமது குழந்தைக் கண்ணனைக் கண்டார்: அதே அழகனை ஆண்டாள் காதலனாகக் கண்டாள்.

பெரியாழ்வாருக்குக் கண்ணன் என்ற தெய்வக்குழந்தை,

"குன்றாடு கொழுமுகில்போல்,
குவளைகள்போல், குரைகடல்போல்,
நின்றாடு கணமயில்போல்"

[குன்றாடு-(குன்று+ஆடு)-குன்றிலே ஆடுகிற, அசைகிற. கொழுமுகில்-நீரை முகந்த மேகம். குவளை-நீலமலர். குரைகடல்-

கோஷிக்கும் கடல். நின்ருடு-(நின்று+ஆடு)-நின்று ஆடுகிற. கண மயில்-மயில்களின் கூட்டம்.]
காட்சி கொடுக்கிறது. ஆண்டாளோ,

"பெய்யு மாமுகில் போல்வண்ணு!"

[மாமுகில்-பெரிய மேகம்.]
என்றதும், காதலியாகித் தன் கண் வட்டத்திலே அவனை அப்படியே நிறுத்திக்கொள்ள முயல்கிருள்.

ஆழ்வார்களெல்லாம் இயற்கையழகனுகிய கண்ணனை இயற்கை யழகுகளிலும் கண்டார்கள்; உள்ளத்தின் ஆழத்திலும் கண் டார்கள்; அவதாரமாகவும் கண்டார்கள். நம்மாழ்வார், தத்துவ சிகரத்திலிருந்து தரிசித்தார், அனுபவித்தார், அழகின் இந்தப் பூர்ண அவதாரத்தை. 'அதுவே வீடு!' என்று கலந்து நின்ருர். இத்தகைய பூர்ணத்திற்குமேல் என்னதான் இருக்கமுடியும்? எனினும் கண் ணன் என்ற அழகின் பரிபூர்ணத்தோடு காதலியாகிக் கலந்துநின்ருள் ஆண்டாள் என்றும், அந்தப் பரிபூர்ண அவதாரத்தைத் தாயாகித் தழுவிக்கொண்டார் பெரியாழ்வார் என்றும் சொல்லலாம்.

இந்த அவதாரம் இரவிலே நிகழ்ந்ததென்பதும், இருளின் சக்தி களான அசுர சக்திகளையும், அஞ்ஞானம் முதலியவற்றையும் அழிக்கவே ஸ்ரீகிருஷ்ணன் என்ற அழகு மயமான-சக்தி மயமான- ஞான சூரியன் உதயமாயிற்றென்பதும், சிறைச்சாலையில் கண்ணன் பிறந்ததும் தாய்தந்தையர்களின் விலங்கு முறிந்து விழுந்ததென் பதும், ஒருத்தி மகனுய்ப்பிறந்து ஒருத்தி மகனுய் ஒளித்து வளர்ந்த இக் கண்ணன் உலக மக்களின் விலங்குகளெல்லாம் முறிந்து விழவும் வழி காட்டினன் என்பதும் புராணப் பிரசித்தமான விஷயங்கள்.

அடுத்த கட்டுரையில், ஆழ்வார்கள், முக்கியமாகப் பெரியாழ் வார், கண்ட 'கண்ணன் பிறப்பை' நாமும் கண்டு களிக்க முயல்வோம்.

---

## இடம் மாறும் நேயர்கள் கவனிக்கவும்

ஒவ்வொரு மாதமும் **28**-ந் தேதிக்குள் தமது புதிய விலா சத்தை தெரிவிக்காவிடின் அடுத்த இதழ் பழைய விலாசத்திற்கே அனுப்பப்படும். அதனுல் தவறிவிடின் அதற்கு நாம் ஜவாப் தாரியல்ல.

விலாசம் மாறுவோர் தமது சந்தா நம்பர் அல்லது பழைய விலாசம் ஒன்றும் குறிப்பிடாமல், "எனது தற்போதைய விலாசம்; ராஜம்மாள், சுந்தராம்பாள்" என்று எழுதிவிடின் அதைத் தேடமுடிவதில்லையாகையால், விவரமாக எழுதக் கோருகிருேம்.

ஸ்ரீமதி. எஸ். அம்புஜம்மாள்

# ஸ்ரீமதி டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி

1932-ஆம் வருஷம் தேசியப்போராட்டம் வலுத்திருந்தகாலம். மார்கழித் திங்கள் முப்பதும் நாள் தவறாமல் விடியற்காலை எழுந்து திருவல்லிக் கேணி ஸ்ரீபார்த்தஸாரதி சன்னிதியைச் சுற்றி 'பிரபாத் பேரி' 'காலைபஜனை' நடத்திவந்தோம். நாங்கள் சென்னைச் சுதேசி லீகைச் சேர்ந்த தேச ஸேவி கைகள். அப்போது நாங்கள் பாடிவந்த பல தேசிய கீர்த்தனைகளுள் எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சியும் உத்ஸாகமும் அளித்து வந்தது பாரதியாரின் பிரசித்திபெற்ற 'விடுதலை'ப் பாட்டு:

''பறையருக்கும் தீயருக்கும் புலையருக்கும் விடுதலை;<br>
...........................................................<br>
...........................................................<br>
...........................................................<br>
மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்;<br>
வைய வாழ்வு தன்னில் எந்த வகையிலும் நமக்குளே;<br>
தாதரென்ற நிலைமை மாறி, ஆண்களோடு பெண்களும்<br>
சரிநிகர் சமானமாக வாழ்வம் இந்த நாட்டிலே:<br>
விடுதலை; விடுதலை; விடுதலை''

இந்த அடிகளைப் பாடியவுடன் சதா வசைமொழிகளைக் கேட்டு உள்ளுக்குள்ளே சலித்துக் குன்றிப்போயிருந்த எங்கள் இதயம் "நாம் இத்தேசியப் போராட்டத்தில் கலந்துகொண்டது ரொம்பவும் சரி: சில பழம்பேர்வழிகளும் பாட்டிமார்களும் சுட்டிக்காட்டிச் சொல்லி வருவதுபோல இது பெண்குலத்திற்கு அவமானம் விளைவிக்கக்கூடிய யாதொரு அடாத செயலன்று'' எனத் தெளிந்து பூரித்துப்போகும். எங்களுடைய பாட்டு அந்தத் தெரு வீடுகளின் 'அடுக்குள்'ளே புகுந்து கிடக்கும் இளம் நாட்டுப் பெண்களின் காதில் இனிமையாகத் தொனிக்கவும், வாசலிலே வேடிக்கை பார்க்க வந்து நிற்கும் மாமிமார்களின் காதுகளைத் துளைக்கவும் செய்வதாக உச்சஸ்தாயியில்எழும்பி, கணீரென்று ஒலிக்கும். அப்போதெல்லாம்எனக்குச் சிறிய மேனியும் சிறிது நரைத்த தலையும், சதா யோசனையில் ஆழ்ந்துள்ள அன்புகனிந்த பார்வையும், சற்றுக்கீச்சென்றிருக்கும்குரலோசையும்உடைய ஓர் அம்மையாரின் ஞாபகம் அடிக்கடி உண்டாவது வழக்கம். அவர்தான் டாக்டர் மிஸஸ் முத்துலட்சுமி ரேட்டி.

சென்னையில்அவர் பெயரைக்கேட்டறியாதவர் இல்லை; மிகுந்த பரோபகார சிந்தையும் பரந்த தாயுள்ளமும் படைத்தஅம்மணி.

நம்மூரிலே தாழ்த்தப்பட்ட வகுப்பினரைப்போல அடக்கப்பட்ட வகுப்பினரும் உண்டு. அவர்களையும் கைதூக்கி விடுவது அவசியமே. அதற்கும் ஒருவர் பாடுபடத்தான் வேண்டியிருக்கிறது. எது பாடுபடாமல் நிறைவேறுகிறது? 'மயிலே! மயிலே! இறகுபோடு' என்பதிலேயே காரியம் ஜயமாகி விடுமா? எதற்கும் மசோதா, சட்டம், விதி, விலக்கு என்றிருந்தால் தானே தம் நன்மைக்கேயானாலும், கட்டாயப்படுத்தினாலன்றி, நம் ஜனங்கள் உடன்படுகிறதில்லை. இது நிதர்சனமாகக் கண்ட விஷயம்.

''அம்மா! இந்த கதர்ச் சீட்டியைப் பார்! எவ்வளவு நேர்த்தியாக இருக்கிறது? இதில் ஒரு துண்டாவது ரவிக்கைக்கு வாங்கக்கூடாதா? அந்த

ஒயிட்ரோஸ் வினோலியா எதற்கு ? இந்த மைசூர்ச் சந்தனஸோப்பை வாங்கினால் தேசத்திற்குப் பெருத்த லாபமாச்சே ?'' என்று சுதேசி விற்பனையின் போது வீடுதோறும் சென்று பெண்களுக்கு எடுத்துக் கூறினால், "அது என்னமோம்மா! எங்களுக்கு என்ன தெரியும் ? எங்காத்தில் அவர்கள்தான் எங்களுக்கு வேண்டியதை வாங்கித் தருவார்கள். எங்கள் கையில் காசேது ? இவைகள் எல்லாம் நன்றாகத்தான் இருக்கிறது: அவாள் சம்மதித்தால் தானே வாங்கமுடியும் ? சாயங்காலம் வாருங்கள். ஆத்துப் புருஷாள் ஆபீஸிலிருந்து வந்திருப்பார்கள்'' என்ற பதில்தான் கிடைக்கும் பல வீடுகளிலும். நாலணா சீட்டிக்கும் இரண்டணா ஸோப்புக்கும்கூட தம்வீட்டுப் புருஷன் தயவை எதிர்பார்த்திருக்கும் மனைவிமார் எத்தனை பேரில்லை நம் நகரில் ! கற்றறிந்த பெரிய கண்யமான குடும்பங்களிலும் யாதொருசுதந்திரமுமின்றி அடிமைபோல வாழும் பெண்கள் அநேகர் இருக்கின்றனரே !

ஆகவே இவர்களுக்குக் குடும்பம், சமூகம், தேசியம், பொருளாதாரம் ஆகிய இத்துறைகளில் தமக்கான உரிமைகளையும் கடமைகளையும் எடுத்துப் போதிப்பது கற்றவர் கடமையாகிறதன்றோ ?

மகாத்மா காந்தி அடிகளின் அருள்மொழிகளும் தேசீய இயக்கமுமே, நம் தேசத்துப் பெண்களுக்கிருந்த குறைபாடுகளைத் தீர்த்தது. பெண் குலத்தையே பலவிதத்திலும் உயர்த்தியது. எனினும், முத்துலட்சுமி ரெட்டியார் போன்ற சமூக சீர்திருத்தக்காரர் பல வருஷங்களாகப் பாடு பட்டு முயன்று செப்பனிட்டு வந்ததின் விளைவே அது—என்று சொல்லும்படி இருக்கிறது.

"என் தகப்பனார் நல்ல ஆஸ்தி படைத்தவர்தான் ! ஆனால் ஸ்திரீகளுக்கேது சொத்துரிமை ? அண்ணன் தம்பிமார் வைத்துக் காப்பது என்ன சாச்வதம் ?'' என்று அங்கலாய்க்கும் அருமைப் புதல்விகளும்;

"பெண்ணுக்கு 12 வயது முடியுமுன் எப்படியாவது விவாகம் செய்தாக வேணுமே ! நல்ல வரன் கிடைக்கவில்லையே! இந்தப் பாழும் சாஸ்திரம் என் பால்ய விவாகத்தை வற்புறுத்துகிறது ?'' என்று மனம் புழுங்கும் தந்தையரும்;

"கடன்பட்டு இரண்டாயிரம் கொட்டிக்கொடுத்துக் கல்யாணம் செய்து வைத்தேன்: பெண்ணுக்கு இப்போது ருதுசாந்திக்கு 'ஆயிரம் கொண்டுவா' என்கிறார்கள். எங்கே போவேன் ? இந்த வரதட்சிணைக் கொடுமை நீங்க வழியில்லையா ?'' என்று கதறும் பெற்றோரும் ;

"நாங்கள் தாசியினத்தைச் சேர்ந்தவர்கள்: ஆனாலும் நாங்களும்—ஏன் குலமகளைப்போல் கௌரவமாக வாழக்கூடாது ? உங்கள் கோவிலில் பொட்டுக்கட்டுகிற வழக்கம் இருப்பதினால்தானே நாங்கள் கெட்டுப்போகிறோம் ?'' என்று சுட்டிக்காட்டும் தேவதாசி குலத்தோரும்;

"என் கணவன் தன் தாயார் பேச்சைக் கேட்டுக்கொண்டு என்னை விலக்கிவிட்டு மறு கல்யாணம் செய்துகொண்டுவிட்டான். இனிமேல் நீங்கள்தான் எனக்கு அடைக்கலம். 'நர்ஸ்' வேலையாவது கற்றுப் பிழைக்கும்படி வழி காட்டவேணும்'' என்று வரும் அபலைகளும்;

"என்னையும் என் இந்த இரண்டு குழந்தைகளையும் ஆதரிப்பார் யாருமில்லை. உங்கள் ஆசிரமத்தில் ஏதாவது வேலை கொடுங்கள்; செய்கிறேன். எப்படியாவது நீங்கள் இந்தக் குழந்தைகளைக்காப்பாற்றிவிடவேணும்'' என்று இறைஞ்சும் இளம்விதவைகளும், டாக்டர் முத்துலட்சுமியாரின் இனிய ஆதர

வையும் பேரன்பையும் பெற்றுக் கடைத்தேறி உள்ளார் என்பது சென்னை அறிந்த விஷயம்.

ஏன்? வரதட்சிணைக் கொடுமையை நீக்குவதற்காகவும், பால்ய விவாகம், பல தார விவாகம் இவைகளைத் தடுப்பதற்காகவும், கோவிலில் பொட்டு கட்டும் துர்வழக்கத்தை நிறுத்துவதற்காகவும், ஸ்திரீகளுக்குச்சொத்துரிமை கிடைப்பதற்காகவும் நாடெங்கும் கிளர்ச்சி செய்து கூட்டங்கள் போட்டும், பத்திரிகைகளில் எழுதியும், இவ்விதம் ஓயாது பெண்களுக்காகப் பாடுபட்டு வரும் இவர் பெயர் நம் இந்திய தேசத்தில் மட்டுமன்றி, அயல் நாடுகளிலும் பரவிப் பிரசித்தி பெற்றுள்ளது எனலாம்.

இவ்வாறு பெண்கள் விடுதலைக்காக துவஜம் கட்டிப் பல வருஷங்களாக வேலை செய்துவரும் நமது அருமைத் தலைவி முத்துலட்சுமி ரெட்டியாரின் ஞாபகம் அடிக்கடி எழுவது சகஜந்தானே பெண்களாகிய நமக்கு?

முத்துலட்சுமி ரெட்டி பிறந்த ஊர் புதுக்கோட்டை. அவர் தந்தை புதுக்கோட்டை மஹாராஜா காலேஜ் பிரின்ஸிபல். தாய் கற்றவர் இல்லை. ஆனாலும் பண்டைக் காலத்துப் பெண்களுக் கொப்ப தெய்வ பக்தியும் அனுபவ ஞானமும் நிரம்ப உடையவர். அவருக்குச் சுதந்திர உணர்ச்சியுமுண்டு. தாய் தந்தையர் காதல் மணம் பெற்றவர். ஆகையால் அவர்களுடைய மனமொத்த இல்வாழ்க்கை, தம்புதல்வியும் பின்னால் காதல் மணத்தையேநாடும்படி தூண்டுவதாயிற்று. முத்துலட்சுமி முதலில் சென்றது ஒரு திண்ணைப் பள்ளிகூடம்தான். அவர் தாயார் விருப்பத்திற்கும் மாறாகஅவர் உயர்தரக் கல்வி கற்க இயன்றதற்குஅவருடையஅபாரஆற்றலைக் கண்டு மெச்சிய தலைமை உபாத்தியாயரின் பலத்த சிபார்சே காரணமாகும்.

அவர் மெட்ரிக்குலேஷன் பாஸ் செய்ததும் அவருக்கு விவாகம் செய்ய விரும்பினர் தாயார். ஆனல் அப்போது விவாகத்தை வெறுத்து மறுத்து விட்டார் முத்துலட்சுமி.

அந்தக் காலத்தில் பெண்களுக்கென்று தனிப்பட்ட உயர்தரக் கலாசாலை கிடையாது. முத்துலட்சுமி புதுக்கோட்டை மகாராஜா காலேஜில் சேர விரும்பினர். அதற்கு ஊராரும் காலேஜ் ப்ரொபெஸர்களும் பலமாக ஆட்சேபித்தார்கள். வீட்டுப் பெண்கள் வசை மொழிகளை கணக்கில்லாமல் சொரிந்தார்கள். ஆனாலும் விடாப் பிடியாக இருந்து மகாராஜாவின் சிபார்சையே பெற்று எப்படியோ காலேஜில் சேர்ந்துவிட்டார். அங்கே படிப்பு முடிந்ததும், புதுக்கோட்டை சமஸ்தானத்தின் உதவிச் சம்பளம் பெற்று மதராஸ் மெடிகல் காலேஜில் சேர்ந்து படிக்கலானர். தென்னிந்தியாவில் டாக்டர் பரீட்சைக்குப் படித்துத் தேறிய இந்தியப் பெண்மணிகளில் இவர் தான் முதன்மை ஸ்தானம் வகிப்பவர். பரீட்சை முடிந்ததும் சென்னையிலுள்ள பலஆஸ்பத்திரிகளில் ஹவுஸ் ஸர்ஜனாக இருந்து வேலை பார்த்தபின், சுயமாக வைத்தியத் தொழில் பார்க்க ஆரம்பித்தார்.

பொதுஜனங்கள் தம் இனத்தாரை மதியாமல் ஆங்கிலேயர்களிடத்திலேயே அதிக விசுவாசமும் நம்பிக்கையும் கொண்டிருந்த காலம் அது. ஆனாலும் சென்னையில் வைத்தியத் தொழிலில் இவருக்கு நல்ல பெயரும் கீர்த்தியும் சீக்கிரம் உண்டாக, பலசெல்வச் சீமாட்டிகளும்தமக்குப் பிரசவம் பார்க்க இவரை அழைக்கலாயினர். மாதம் ஆயிரம் இரண்டாயிரம் என்றும் கிடைக்கலாயிற்று. எனினும் அப்பொழுதுமுதற்கொண்டே முத்துலட்சுமி, ஏழை பணக்காரர், என்ற வித்தியாசமின்றி, அழைத்தவர் இல்லந்தோறும் சென்று பெண் குலத்திற்கு அரும் சேவை செய்துவந்தார். பின்னடி

பொதுஜன ஊழியத்தில் அதிகம் ஈடுபடுவதற்காகத் தம் தொழிலையும் தியாகம் செய்துவிட்டார்.

முத்துலட்சுமி 1914ம் வருஷம், சென்னை மெடிகல் ஸ்கூல் ப்ரொபெஸர் ஸ்ரீமான் டாக்டர் சுந்தரம் ரெட்டியாரை மணந்துகொண்டார். அப்போது இவருக்கு வயது 26. இவருடைய விவாகம் தாய்தந்தையரின் சம்மதத்தின்பேரில் நடந்தேறியதாயினும், தமக்கு வாய்க்கப்போகும் கணவருடன் ஒரு வருஷம் பழகி நன்கு அறிமுகமானபிறகே இவர் அவ் விவாகத்திற்கு உடன்பட்டார். மேலும் மணமகனிடம், தாம் செய்யப் போகும் பொதுவேலைகளுக்கு யாதொரு தடையும் கூறுமலிருப்பது மட்டுமன்றி தம்மால் இயன்ற உதவியும் செய்வதாக ஒரு வாக்குறுதியையும் பெற்றுக்கொண்டார். அதன்படியே இந்நாளிலும் முத்துலட்சுமி அவர் செய்துவரும் பொதுஜன ஊழியங்களுக்குத்தாம் அனுமதி தந்து வேண்டிய உதவிகளையும் புரிந்து வருகிறார் டாக்டர் சுந்தரம் ரெட்டியார்.

"என் கணவர் மனமுவந்து புரிந்துவந்த உதவியினுலும், அன்றூடம் கூறிவந்த யோசனைகளினுலுமே, நான் மேற்கொண்ட பல வேலைகள் இம் மட்டும் வெற்றிகரமாக ஈடேறி வந்தன என்பேன். நான் விவாகமின்றி ஒண்டியாக இருந்து உழைத்திருப்பேனேயானுல், இவ்வளவு தூரம் என் மனேரதம் ஈடேறி யிருக்குமா?—என்பது சந்தேசம் தான்'' என்று பல முறை சொல்லியிருக்கிறுர் முத்துலட்சுமி ரெட்டி.

1917-ம் வருஷம் சென்னையில் அனி பெஸன்ட் அம்மையாரால் 'இந்திய மாதர் சங்கம்' என்ற ஸ்திரீகள் சங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. கல்வி, பொருள், தொழில், சமூகம், அரசியல் ஆகிய பல துறைகளிலும் இந்திய மாதர்களுக்குக் கிடைக்கவேண்டிய உரிமைகளைத் தேடிக் கொடுப்பதே இதன் முக்கிய லட்சியம். மிஸஸ், அனிபெஸன்ட் அம்மை, மிஸஸ் ஜினராஜ தாஸா, மிஸஸ். கஸின்ஸ் இவர்கள்தான் முதல் முதல் இந்திய மாதர்களின் முன்னேற்றத்தில் அக்கரை கொண்டு வேலை செய்யப் புகுந்தவர்கள். முத்துலட்சுமியும்அவர்களுடன் சேர்ந்து மேற்படி சங்கத்தின் சார் பாகத் தீவிரமாய் உழைக்கலாஞர். இவருடைய வேலைத்திறனும், இவருக்குச் சமூகத் தொண்டிலிருந்த ஆற்றலும் இவரை அந்நாளில் நமது நகரிலே ஏற்பட்டிருந்த பலபொதுஸ்தாபனங்களிலும் முக்கியஸ்தானம்வகிக்கும்படி செய்துவிட்டது.

இவர் ஜாதிமத வேற்றுமையற்ற மனப்பான்மை யுடையவர். சுதந்திர உணர்ச்சி மிகுதியாக உடையவர். தைரியசாலி. ஒவ்வொரு விஷயத்தையும் கூர்ந்து ஆராய்ந்து பார்க்கும் ஆற்றல் கொண்டவர். சுகாதாரம், கல்வி, பெண்கள் உரிமை இவை சம்பந்தமான பலவிஷயங்களையும், சட்டங்களையும் நன்கு]கற்றறிந்தவர். மேலும், சில நவநாகரிகப் பெண்கள்போலில்லாமல் ஆடம்பரமற்ற எளிய வாழ்க்கையிலும், தெய்வ வந்தனை வழிபாடுகளிலும் நம்பிக்கை கொண்டவர். இவர் ராஜாராம் மோஹன்ராய், ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர், ஸ்ரீசாரதாமணி தேவி இவர்களைத் தெய்வப் பிறவியெனக் கருதி வழிபடுகிறவர். ஆதலால் இவர் சம்பந்தம் பெற்ற பல பொது ஸ்தாபனங்களும் சீக்கிரம் முன்னேற்றமடைந்து, நன்கு செழித்தோங்கலாயின.

அவற்றுள் முக்கியமானவை: சேவாசதனம், இந்திய மாதர் சங்கம், டாக்டர் வரதராஜுலுநாயுடு அனதை விடுதி, அவ்வை ஆசிரமம், All India Women's Conference, Childrens Aid Society, Madras Vigilance Society ஆகியவை.

1925-ல் இந்திய சர்க்காரின் உதவிச் சம்பளம் பெற்று இங்கிலாந்துக்குச் சென்று அங்கே ஸ்திரீகளின் வியாதி சம்பந்தமான விசேஷக் கல்வி பயின்றுவந்தார். இங்கிலாந்திலிருந்து திரும்பிவந்ததும், இந்திய மாதர்சங்கத்தின் சார்பாக சென்னைச்சட்டசபை அங்கத்தினர் பதவிக்குத்தேர்ந்தெடுக்கப்பட்டார். சட்டசபை அங்கத்தினரான இவருடைய சகாக்களின் வேண்டுகோளுக்கிணங்கி, சட்டசபை உபதலைவர் ஸ்தானத்தையும் வகிக்கலானார்.

பெண்களுக்குள் முதல்முதல் சட்டசபை ஸ்தானம் பெற்றவரும், உபதலைவர் பதவி பெற்றவரும் இவர்தான். இவர் சட்டசபையிலிருந்தபோது பொதுஜன நன்மைக்கான பல மசோதாக்களைக் கொண்டுவர உதவினார். இவருடைய சட்டசபை வேலைத் திறனைக்கண்டு மெச்சிய நண்பர்கள் இவரை 'ஹர்டாக்' கமிட்டியிலும் இருக்கும்படி தூண்டினார்கள்.

முத்துலட்சுமி ரெட்டி, மகாத்மா காந்தியை மிகவும் போற்றுகிறவர். அவருடைய அஹிம்ஸா முறையில் பக்தி விசுவாசம் கொண்டவர். மகாத்மாவின் கதர் இயக்கம் முதலிய நிர்மாண திட்டங்களில் பூரண நம்பிக்கையுண்டு. ஆனாலும், தான் கவனித்துப் பரிபாலித்துவந்த பொதுஸ்தாபனங்களின் வேலையை விட்டுவிட்டு, தேசீய இயக்கத்திற்காக ஜெயிலுக்குப் போக விரும்பவில்லை. அப்படிச் சென்றால், தாம் இதுகாறும் செய்துவந்த வேலையின் பலன்கள் யாவும் வியர்த்தமாகிவிடும் என்று நம்பினார். ஆசையால் ஜெயிலுக்குப் போகாமலே தேசீய இயக்கத்திற்கு ஆதரவு அளித்துக் கதர் கட்டினார். மதுவிலக்கு, சுதேசீயம் இவைகளுக்காகப் பிரசாரம் செய்தார். கோவில்களை ஹரிஜனங்களுக்குத் திறந்துவிடும்படி கிளர்ச்சி செய்தார். அப்பால் சர்க்கார் காந்திஜியை சிறைப்படுத்த, அதைப் பலமாக ஆட்சேபித்து சட்டசபை ஸ்தானத்தை ராஜினமா செய்துவிட்டார்.

All India Women's Conference சார்பாக, ராஜகுமாரி அமிருத கௌரி, மிஸஸ் ஹமீது ஆலீ, இவர்களுடன் முத்துலட்சுமி ரெட்டியும் இங்கிலாந்தில் லோதியன் கமிட்டியினிடம் சாட்சியம் கூற அழைக்கப்பட்டார்.

இங்கிலாந்திலிருந்து, சிக்காகோவில் நடந்த 'International Congress of Women' கூட்டத்திற்குச் சென்று, அக்கூட்டத்தார் முன் இந்தியாவைப் பற்றியும், இந்தியப் பெண்மணிகளின் குணாதிசயங்களைப்பற்றியும் வெகு அழகாக எடுத்துப் பேசினார்.

இவ்வாறு முத்துலட்சுமி இந்தியாவில் மட்டுமன்றி வெளிநாடுகளுக்கும் விஜயம் செய்து பல கூட்டங்களை நடத்தி, பெண்களுக்குச் சொத்துரிமை, ஓட்டுரிமை, சுதந்திரம், இவைகள் கிடைப்பதற்காகக் கிளர்ச்சி செய்து ஆங்காங்கே ஸ்திரீ ஸ்தாபனங்களை ஏற்படுத்தி வந்துள்ளார். கடைசியில் காங்கிரஸின் சார்பாக சென்னையில் கார்ப்பரேஷன் கௌன்ஸிலிலும் Alderwoman ஆக இருந்து சேவை செய்துள்ளார்.

இப்போது இவர் தேகம் துர்ப்பலமடைந்திருந்தபோதிலும், பொதுஜன ஊழியத்தில் உள்ள ஆற்றல் இன்னும் குறைந்தபாடில்லை.

தற்சமயம் அடையாரில் "அவ்வை ஹோம்" என்ற ஓர் விடுதியை ஏற்படுத்தி அதில் வந்து சேரும் அனாதைப் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் உண்மைத்தாயாகஇருந்து, அருமையாக அவர்களைக் கண்காணித்துவருகிறார்.

இப்பொழுதும் சென்னையில் நடக்கும் பெண்கள் கூட்டங்களுக்கு இவர்தான் தலைமை ஸ்தானம் வகிக்கிறார்.

பெண்கள் சம்பந்தமாக ஏதாவது குறைபாடு இருந்தால், அதைத் தைரியமாக எடுத்துச் சொல்லுவதற்கு இன்னும் இவரைத்தான் சென்னை வாசிகள் எதிர்பார்க்கிறார்கள்.

'பத்திரிகை நிருபர்களே! நீங்கள்-புருஷர்கள்-எமது கூட்டத்தில் இருக்கிறீர்கள் என்று நாங்கள் சற்றேனும் பயப்படப்போவதில்லை. புருஷர்கள் செய்யும் அநியாயங்களை வேண்டிய மட்டும் கண்டித்துத்தான் பேசுவோம். நீங்கள் எங்கள் உபன்யாஸத்தை வாக்கியம் ஒன்றுகூட விடாமல் பிரசுரிக்க வேண்டும். பெண்கள்தானே பேசுகிறார்கள்; சும்மா பேசட்டும் - என்று அலட்சியமாக இருந்துவிடப்போகிறீர்கள்!'' என்று பத்திரிகை நிருபர்களுக்கு இன்றும் தாக்கீது கொடுத்துவருகிறார். முத்துலட்சுமியவர்களிடம் பத்திரிகை நிருபர்களுக்குச் சற்று பயமென்றே சொல்லவேணும்.

இதுபோலத் தைரியமாகஸ்திரீகள் சார்பாகப் பேசக்கூடியவரும், சதா பெண் குலத்தைச் சிறப்பிக்கக்கூடிய வழிகளைத் தேடியிருப்பவருமான ஓர் அம்மையார் நமக்கு இருக்கும்வரை, நம் தேசத்து ஸ்திரீகளுக்கு என்ன குறை இருக்கமுடியும்?

ஒவ்வொரு பெண்ணும் முத்துலட்சுமி அவர்கள்போலத் தன் விவாகத்தின்முன் மணமகனிடம் சமூக சேவைக்கான வாக்குறுதி ஒன்றைக் கேட்டுப் பெற்று இல்லறம் நடத்தத்தொடங்குவளேயானால், அது உண்மையில் ஓர் நல்லறமாகித் தன் பிறந்த நாட்டின் பெருமையை எங்கும் பரவச் செய்வதாக மட்டுமின்றி, தன்னை மணந்த கணவனுக்கும் பெருங் கீர்த்தியை விளைவிப்பதாகும்.

டாக்டர் தம்பதிகள் நீடூழி வாழ்க! மனமொத்துப் பொதுஜன சேவையில் ஈடுபட்டிருக்கிற இவர்களைப் போன்ற பல தம்பதிகளைக் கடவுள் நம் தேசத்துக்கு அளிக்குமாறு அவரை நாம் பிரார்த்திப்போம்.

---

# சக்தி

## ஸ்ரீ. ஜானம்மாள்

இவ்வுலகினில் ஒருவன் உயிர் வாழ்வதின் லக்ஷ்யம் என்ன? கேவலம் வயிற்றை நிரப்பிக்கொண்டு காட்டில் சுயேச்சையுடன் திரியும் மிருகாராஜனைப்போல வசிப்பதற்கா அல்லது மதுபானங்கொண்டு உன்மத்தனாய்ச் சிற்றின்பப் புதரில் சிக்கிக்கொண்டு பல் வரிசைகளைக் காட்டி இளித்து களிப்படைவதற்கா? இல்லாவிடின் இருட்டறையில் புதைந்து கிடக்கும் நடையில்லா செல்வத்தை கண்களில் விளக்கெண்ணெயை விட்டுக்கொண்டு அல்லும் பகலும் பூதத்தைப்போல் காத்துக்கொண்டு தொந்தியை பெருக்கச் செய்யும் ஆசையிலா? இல்லை; இல்லை. மனிதனுடைய லக்ஷ்யம் இதைவிட எவ்வளவோ மேலானது, பவித்திரமானது. அறிவிலும் ஆற்றலிலும் சிறந்த மனிதன் மிருகங்களைப்போல கேவலம் தன் சுகத்தின் பொருட்டே உயிர் வாழ்வதற்காக படைக்கப்பட்டவனல்லன். இயன்றமட்டும் பிறருக்கு நன்மை அளித்து தனக்கும் ஒரு பெரிய கீர்த்தியை ஸம்பாதித்துக்கொள்பவன்தான் தன்யன்; அதற்கு முக்கியமான துணை அவனுக்கு சக்தியேதான்.

சக்தி என்னும்போது சுயநலமே மேலிட்ட ராக்ஷஸ சக்தியை நான் இங்கு குறிப்பிடவில்லை. மனிதனுக்கு அஸாத்தியமென்று தோன்றக்கூடிய

காரியங்களை ஸாதிக்கும் திறமையைக் கொடுக்கும் இச்சா சக்தியையும், உலகத்தின் நன்மைக்காக எத்தகைய துயரங்களையும் சகிக்கக்கூடிய ஆத்மசக்தியையும்பற்றியே சொல்ல விரும்புகிறேன்.

மனிதனுக்கு எவ்விஷயத்திலும் வெற்றி பெறுவதற்கு இச்சா சக்தி அத்தியாவசியமானது இச்சை உண்டானால்தான் காரியம் செய்யமுடியும் மனிதனை முன்னுக்குக் கொண்டுவருவதும் அதுவே. ஆசையானது மனதில் வந்து உட்கார்ந்தால்தான் ஊக்கம், உழைப்பு, திடம் முதலிய ஊழியர்கள் விளம்பரம் செய்யாமல் ஸ்வாமிக்குத் தக்கபடி காரியங்களைப் பூர்த்திசெய்து வைப்பதில் துணை அளிப்பர். ஆனால் பொறாமை, துராசைகொண்டு குறுகிய புத்தியினால் பக்ஷீஸ் கொடுத்து காரியத்தை ஸாதித்துக்கொள்ளும் சக்தியிலே அநேக விஷக்கிருமிகள் நிறைந்திருக்கின்றன. மிகவும் கேவலமான செய்கை அது. நாளடைவில் அது மனிதனை உயிருடனேயே வதைப்பதற்கு ஆரம்பித்துவிடும். மேலும் அவனை பயங்கொள்ளி யென்றும், கையாலாகாத பேடியென்றும் உலகம் நிந்திக்கும். தவிர, ராக்ஷஸ சக்தி யுள்ளவன்கூட அவ்வதனைப் பார்த்து ஏளனம் செய்வான். நேர்முகமான சக்தியில்தான் ஒளியும், வீர்யமும் மறைந்திருக்கிறது. அந்த சக்தியைதான் ஜனங்கள் சம்பாதிக்க முயலவேண்டும்.

இப்புவியில் மூன்று ஆசைகள் ப்ரவித்திபெற்றவை. அவைகள் மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை, அம்மூன்றிலும் நன்மை, தீமை இரண்டும் கலந்து மனிதனை மயக்கிக்கொண்டிருக்கிறது. மேற்கூறிய ஆசைகளை நேர்வழியில் உபயோகிக்கும்பக்ஷத்தில் உலகம் அவனால் சிறப்பை அடையும். இச்சையானது மனிதனின் சிறந்த பூஷணம். ஆசையில்லை என்றால் அவனை அசேதனன் என்றுதான் சொல்லவேண்டும். சுருசுருப்புடனும், ஊக்கத்துடனும் ஒரு வேலையில் தூண்டி மனிதனை இறங்கவைக்கும் சக்தி ஆசைக்குத்தான். ஜலத்தினால் கொடி, செடிகள் எப்படி செழிப்படைகிறதோ, அதைப்போலவே மனசான கொடி, இச்சை என்ற தண்ணீரால் ஓங்கி வளர்ந்து நாளடைவில் அதன் பலனைக் காண்பது திண்ணம். பகீரதன் கங்கை நீரால் தன் பிதருக்கள் புனிதமாகவேண்டும் என்ற தீவ்ரமான இச்சா சக்தியினால் பூலோகத்திற்கு கங்காநதியைக் கொண்டுவந்து தன் முன்னோர்களுக்கு மட்டும் அல்லாது, நமது பாரத நாட்டிற்கே பெரிய நன்மையை செய்திருக்கிறார். இதனால் இச்சா சக்தியினால் எந்த காரியமும் வெற்றிகரமாக செய்யமுடியும் என்பதை காணலாம்.

இச்சா சக்தியுடன் பேராசை, பொறாமை முதலிய துர்க்குணங்கள் சேர்ந்தால் அதுவே ராக்ஷஸ தன்மையுடையதாயும், பரோபகார சிந்தனையும், த்யாக புத்தியும் சேர்ந்தால் அதுவே தெய்வீக சக்தியாயும் மாறுகிறது.

ராக்ஷஸ சக்தி வாஸ்தவத்தில் ஒரு சக்தியே அன்று. அது ஹ்ருதயத்தின் பலஹீனத்தை பளிங்குபோல் காட்டுகிறது. அதற்கு துராசையும், பொறாமையுமே ஆணிவேர். அந்த சக்தி மனிதனை தன் வசமாக்கிக்கொண்டு ஆயுள் பரியந்தம் அவனை அடிமையாக வைத்துக்கொள்ளும் ம்ருக பலத்தை யுடையது. அச் சக்தியானது வேலைகளை துவக்குமாகில் உலகிற்கு பல அனர்த்தங்களை விளைவித்து ஜனங்களை பலவிதத்திலும், துன்புறுத்தும், ஆகையால்தான் அச் சக்தியை நமது பெரியோர்கள் துச்சமாகக் கூறியுள்ளார். ராக்ஷஸ சக்திக்கு அழிவு உண்டு. ஆனால் ஆத்ம சக்திக்கு அது \ கிடையாது. இதுதான் இவ்விரண்டிற்கும் உள்ள வித்தியாஸம், புயல், பூகம்பம், ப்ரளயம் முதலியவைகள் உலகை க்ஷணிகத்தில் அழித்து அபரிமித

சேதத்தைத் தந்து பிறகு அவைகள் இருந்த இடம் தெரியாமல் மறைவது போலவே ராக்ஷஸசக்தியும்ஒருநாள் திடீரென்று, தற்கொலைபுரிந்துகொண்டு மறையும் சுபாவத்தையுடையது. ராக்ஷஸனாகிய இரண்யகசிபு தன் மைந்தன் ப்ரஹலாதனுடைய ஆத்மபலத்தால் அழிவுற்றது இதற்கு உதாரணம்.

"பூஜ்யனான எனது தம்பி பரதன் முடிசூட்டிக்கொள்ளட்டும். மாதா பிதாவின் வாக்ய பரிபாலனம் செய்வது மூத்த மகனான எனது கடமை" என்று மொழிந்து மனப்பூர்வமான இச்சையுடன் மாற்றாந்தாய் கைகேயினால் கொடுக்கப்பட்ட தவ உடையை அணிந்து கானகம் கடந்து சென்றார் ராமபிரான். அதைத்தான் நாம் இன்றும்ஆத்மசக்தியென்று போற்றுகிறோம்.

ஆத்மசக்தியினால் மனிதன் தன் இந்திரியங்களை அடக்கி ஆளும் சக்தியுடையவன். இன்பம், துன்பம் இரண்டையும் ஒன்றாக பாவித்து தன் கடமையாகச் செய்யும் ஆற்றலை அடைகிறான். அச் சக்தியை பூர்ணமாய் பெற்றவர் பல நூறு ஆண்டுகளுக்கு ஒருவரே. ஒரு அரிச்சந்திரன், ஒரு புத்த பகவான், ஒரு காந்தி இம்மாதிரி அபூர்வமாய் உலகத்தின் மங்களத்தின் பொருட்டுத் தோன்றுவர். அவர்களைத்தான் நாம் ஈச்வராம்சம் பொருந்தியவர்களென்றுபோற்றுகிறோம். நம்பாரதியார் சக்தியைப்பற்றிதெரிவிக்கிறார்.

வாழ்வு பெருக்கு மதியே சக்தி மானிலம் காக்கும் வலியே சக்தி
தாழ்வு தடுக்கும் சதியே சக்தி சஞ்சலம் நீக்கும் தவமே சக்தி
வீழ்வு தடுக்கும் விரலே சக்தி விண்ணை யளிக்கும் விரிவே சக்தி
ஊழ்வினை நீக்கும் உயர்வே சக்தி உள்ளத் தொளிரும் விளக்கே சக்தி

அப்பேர்க்கொத்த தெய்வீக சக்தியைத்தான் நாம் போற்றுகிறோம். சக்தியானது பலவிஷயங்களிலும் எல்லாத் துறைகளிலும் சகல கலைகளிலும் இருக்கிறது. சக்தியின் கலைகளையே தெய்வங்கள் என்கிறோம். அதனையே வழிபடுகின்றோம். பயிர்களைக் காக்கும் மழை என்றும், நம்மை போஷித்து சதா வளர்க்க எண்ணிய உயிர் என்றும் உடலில் தோன்றி உணவுகொண்டே வளர்ந்தோங்கும் அச் சக்தியை ஓதுவோமாக. வந்தேமாதரம்!

## குகப்ரியை

# ஆனியின் சிறப்பு

ஆனி மாதத்துப் பூர்ணிமை; கோயிலில் ஏகக் கூட்டம். நகாராவின் ஒலி காதுகளைச் செவிடுபட முழங்கிக்கொண்டிருக்கிறது. மேளம் வெகு அற்புதமாய் வாசிக்கிறான். நடராஜப் பெருமான் சந்நிதி. தொம் தொம் என்று ஆனந்தத் தாண்டவம்.

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில்
இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் பால் வெண்ணீறும்.

என் மனதைக் கொள்ளைகொண்டது. நந்தி மத்தளம் தாக்க, நாரதர் யாழ் தாக்க, பொன்னம்பலத்திலே ஆனந்த நடனம் நடைபெறுகின்றது. நந்தன் கேட்ட அந்தக் கண்டாமணியின் ஒலி "ஓம்! ஓம்!! ஓம்!!!" என்று இசைத்துக்கொண்டிருந்தது. ஒருபுறம் தீக்ஷிதர்களின் கூட்டம்; வேத பாராயணம் மற்றொருபுறம் "தில்லைநகர் திருச்சித்ர கூடந்தன்னில்" என்ற கோஷத்தோடு பகவத் கோஷ்டியின் புறப்பாடு. இடையில் எங்கிருந்தோ

ஒரு இனியகானம். ஒரு வயது முதிர்ந்த பெண்மணி தன் இனிய சாரீரத்தினால் "கொட்டு முழக்குடன் கூத்தாடுவதும் இங்கே, குறட்டைவிட்டுத் தூங்குகின்றதும் இங்கே. தில்லையம்பலத்தானை கோவிந்தராஜனை தெரிசித்துக்கொண்டேனே" என்று சுரட்டி ராகத்தில் வெகு அற்புதமாய்ப் பாடுகிறாள். தென்னிந்தியாவிலே சைவ வைஷ்ணவச் சண்டைகள் முன்பு இருந்திருந்தால், கோவிந்தராஜப் பெருமாள் இங்கே பள்ளிகொண்டிருப்பாரா? என்று என்னையே கேட்டுக்கொண்டேன்.

ஆடும் கடவுளும் உறங்கும் கடவுளும் ஒன்றாய்க் காட்சியளிக்கின்ற அந்த அற்புதத்திலே, மெய்மறந்து திகைத்து நின்றுவிட்டேன். "என்ன விசேஷம்?" என்றொருவர் கேட்கிறார். "அடாடா! இதுகூடத் தெரியாதா? இன்று ஆனித் திருமஞ்சனமல்லவா? ஆனித் திருமஞ்சனம் காணாத கண்கள் இருந்தென்ன?" என்று யாரோ சொல்லுவது என் செவிகளில் வீழ்ந்தது. அதை ஆமென்று ஆமோதிப்பதுபோல, 'டணார், டணார்'என்று மணியோசை முன்னேவர, அதன்பின் மேகம்போல் கருத்த பெரிய யானை அழகிய சிவந்த பட்டினால் தைத்த போர்வை, பொன்னும் மணியும் பொதிந்த முகபடாம், பாகன் சங்கிலியைக் கையிற் பிடித்து முன்னே வர யானை அசைந்து அசைந்து வருகின்றது. அழகிய பொற் குடத்தில் மாவிலைக் கொத்தோடு கூடிய திருமஞ்சனம் கழுத்தில் ருத்ராக்ஷங்களும் மேனியில் வெண்ணீறும் இலங்க குருக்கள் அந்தப் பொற்குடத்தைப்பற்றியவராய் யானையின்மீது வருகிறார். சிவபெருமானுக்கு அர்ப்பணம் செய்யப் பெறும், அந்தப் புனிதமான நன்னீரைக் கண்ட உடனே பக்தர்களுடைய மனமும் கரமும் குவிகின்றன. "ஹரஹர மகா தேவா!" என்ற கோஷம் அந்த மண்டப முழுவதும் சிலையோடிற்று.

* * * *

"அடாடா! இது என்ன மண்ணுலகமா அல்லது விண்ணுலகமா?" என்று அதிசயிக்கிறார் பக்தர், எத்தனை நிறங்கள், என்னென்ன பூக்கள், எதைப் பார்த்தாலும் எம்பெருமானின் ரூபசௌந்தர்யமேதான் தோன்றுகிறது. பார்க்குமிடமெங்கும் அவனே, அவனது திருமேனியைப் போன்ற நீலமலர்கள், திருவடிகளையும் முகத்தையும் கரங்களையும், பவளச் செவ்வாயையும் நினைவூட்டும் செந்தாமரைகள். ஆ! எம்பெருமானது சௌந்தர்யம்தானென்ன? குன்றின்மேல் படிந்த நீலமேகங்கள் உன் திருவுருவையே காண்கிறேன். நீலத்திரை கடலின் பேரொலியும் அந்த நீல நிறமும் உன்னையே காட்டும். அதுவும் போகட்டும். ஆடுகின்ற அந்த மயில் கூட்டத்தைக் கண்டவுடன் நீல மயில்மீது செஞ்சுடரோ? பக்தர் அதிசயிக்கின்ற அழகனுக்கு மாமனான உன்னையே காண்கிறேன். அப்பனே நான் உனக்கு அடிமை; உனக்குப் பூ மாலையோடு பாமாலையும் சாத்துகிறேன்.

குன்றொடு கொழுமுகில்போல் குவளைகள்போல் குரைகடல்போல்
நின்றாடுகணமயில்போல் நிறமுடைய நெடுமால்.

என்றெல்லாம் துதித்தாலும் என் ஆவல் அடங்கவில்லை. உனக்கு எதைத்தான் செய்வது, எதைச் செய்தாலும் போதாது. மீண்டும், மீண்டும், உன் புகழைப்பாடி, உன்னையே தொழுது தொழுது...அதற்கும் மேலாக என்ன செய்யமுடியும்? என்னையே உனக்குக் கொடுத்தேன். அதுவும் போதாது. என் பெண்ணையே உனக்குக் கொடுத்தேன்" என்று பெருமை பேசுகிற இவர்யார்? பொன்னிறமான அந்தத்திருமேனியிலே பன்னிருதிருமண்காப்பு. தோளிலே குடலை, கையிலே மலர்கள், கண்களில் ஆனந்தபாஷ்பம். அவர்

வாயினின்று எழுந்து காற்றிலே மிதந்து வருகின்ற அந்த தேவகானம் நமது செவிகளிலே அமுதத்தைச் சொரிகின்றது. இவர் யாரென்பதைப் பற்றிச் சொல்லவேண்டுமா? இவர்தான் பெரியாழ்வார். ஆனி மாதத்து ஸ்வாதி. இவரது திரு நட்சத்திரம். இவரது விழா, கோயில்கள் தோறும் மிக மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. சூடிக்கொடுத்த சுடர்க்கொடியைப் பெற்ற பெருமையைவிட இவருக்கு வேறொன்றைச் சொல்லவும்வேண்டுமோ?

* * * * *

"கருப்பு நாயை வெள்ளை நாயாக ஆக்கிவிடுவேன்" என்றான் தெனாலிராமன், அவனையும் தோற்கடித்துவிட்டார் ஒரு பெரியவர். அவராக வேறொன்றும் செய்துவிடவில்லை. குதிரை வாங்குவதன்பொருட்டுப் பாண்டியனிடம் பொன்னைப் பெற்றுப்போனார். ஆனால் பொருள் போன வழி வேறு. கூசாமல் எடுத்தெடுத்து சிவனடியார்களுக்கு வழங்கிவிட்டார். வந்துவிட்டது அரசன் ஆணை. ஓடினார் மதுரைக்கு, "குதிரைகள் எங்கே?" என்று சீறினான் பாண்டியன். 'இதோ' என்று ஓடினார் ஆதவூரார். சிவபெருமான் சங்கதிதெரியாதா? குய்யோ! முறையோவென்று அழுதார். பக்தனைக் காக்க வேணுமென்று எழுந்தார் சொக்கநாதர். குதிரை வியாபாரியாய் மதுரையை நோக்கிநடந்தார். அற்புதமான குதிரைகள் வீதிவழியே செல்லுகின்றன. 'பார்க்கப்பதினாயிரங் கண்கள்வேணும்' என்று அதிசயித்தார்கள் மதுரை மகா ஜனங்கள். அரசனிடம் கோள்சொன்னவர்கள் அடிப்பங்கரையில் அடைக்கலம் புகுந்தார்கள். குதிரைகளின் அழகையும் காம்பீர்யத்தையும் அவைநிற்கின்றநிலையையும்கண்டு அயர்ந்துபோனான் அரிமர்த்தனபாண்டியன்.

பணிவுள்ள வியாபாரியான எம்பெருமான் தம் முழு சாமர்த்தியத்தையும் உபயோகித்து பேரம் பேசுகிறார். முடிவென்ன? நொடியில் பரிகள் நரிகளாகி ஊளையிட்டுக்கொண்டு ஓடுகின்றன. அரசனுக்கு ஞானோதயமாகிறது. இந்த அற்புதமான திருவிளையாடலுக்குக் காரணம் யார்? அவர்தான் மாணிக்கவாசகர், இவரது வாசகத்தின் பெருமையால், ஆதவூரார் என்கின்ற இயற்பெயர் மறைந்து மாணிக்கவாசகர் என்றாயிற்று. "திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்" என்னும் பழமொழியே இவரது மேன்மைக்குச் சாட்சி. இவரை நமக்கு அளித்ததும், ஆனிதான்.

கில்லாப்பண்டி, கீப்பண்டி, மாப்பண்டி, மல்லிகைமொக்கு, பாப்பா கையிலே என்ன அப்பச்சி, முறுக்கு அப்பச்சி" என்று ஒரு சிறு குழந்தை சொல்லும். சின்னஞ்சிறு குழந்தைகள் வட்டமாய் உட்கார்ந்து தமது மெல்லிய சிறு கைகளைத் தரையிலே ஊன்றி விளையாடுவதை நாம் தினமும் பார்க்கிறோம். அவைகளின் உற்சாகத்தைக் காணும்பொழுது நாமும் மெய் மறந்து வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டு நின்றுவிடுகிறோம்.

ஆடித் திரிதல் கண்டால் உன்னைப் போய்
ஆவி தழுவுதடி.

என்று பாரதியார் சொன்னதுபோல் அந்தச் சின்னஞ் சிறு கிளிகள் மழலை முற்றா இளஞ் சொல்லால் குறிக்கின்ற அமுத மொழிகளைக் கேட்கும் பொழுது, நமது உடல் அந்த விளையாட்டின் இடையே புகுந்து உற்சாகத்தைக் குறைத்து வாரித் தழுவ முயல்வதில்லை. மனம் மட்டும் அதிலேயே ஈடுபட்டு நிற்கிறது. மறுபடி இன்னொரு குழந்தை சொல்லுகிறது. "முன் ஆனி மாம்பழம் தின்றவனே, ஆனி மாம்பழம் தின்றவனே,—காலைவைத்து கையை மடக்கு" என்கிறது. அர்த்தமற்ற வெறும் விளையாட்டிலே ஆனி மாம்பழத்திற்கு ஒரு ஸ்தானம் எதற்கு?

ஆம்! ஆனி மாம்பழம் சுவை மிகுந்தது. அதன் பொருட்டு ஒரு பேதைப் பெண்ணைச் சோதிக்கின்றார் சிவபெருமான். பரமதத்தன் ஒரு செட்டிப் பிள்ளை. கடையிலிருந்து வரும்பொழுது இரண்டு மாங்கனிகளைக் கொணர்ந்து கொடுத்து, ஆற்றிற்குப் போகிறான். சொல்லி வைத்தாற் போல வருகிறார் ஒரு சிவனடியார். பழுத்த பழம், தொண்டுகிழம், "பசி: பசி! எதையாவது கொடு" என்று கெஞ்சுகிறார்,

பேதைப் பெண் அந்தப் புனிதவதி ஆம்! அவள் பெயரே புனிதவதி தான். தன் பங்கிற்கு ஒரு மாங்கனி உண்டல்லவா? அதை இவருக்குக் கொடுப்போமே என்று நினைக்கிறாள். இந்த எண்ணம் அன்றுமட்டுமல்ல. இன்றும் நம் பெண் குலத்திற்கே உரிய ஒரு தனிச் சிறப்பு. தனக்குரிய ஒரு பழத்தைக் கொடுக்கிறாள். அடியார் வாழ்த்திக்கொண்டே செல்லுகிறார்.

ஆயிற்று இலைபோட்டுப் பரிமாறுகிறாள். மாங்கனியின் சுவையிலே ஈடுபட்ட அவன் இன்னொரு பழத்தையும் கொண்டுவா என்கிறான். சின்னஞ்சிறு பெண், அவனிடம் உண்மையைச் சொல்லலாமோ; கூடாதோ? என்று பயம். இன்னது செய்வது என்று தெரியாமல் தவிக்கிறாள். "எம் பெருமானே! என்ன செய்வேன்!" என்று துடிக்கிறாள். மறுவிநாடி எங்கிருந்தோ ஒரு பழம். அதே நிறம். அதே அச்சு. கையில் வந்து நிற்கிறது. இது என்ன? ஜாலமா? மந்திரமா? என்று திகைத்தவளாய் கொண்டுவருகிறாள். அந்தப் பழத்தைச்சாப்பிடும்பொழுதே சந்தேகம் அவனுக்கு; அப்படியிருந்தது அதன் சுவை, 'இது நான் கொடுத்த பழமன்று. இது ஏது?' என்று கேட்கக் கணவனிடம் ஒன்றையும் ஒளிக்கக்கூடாதென்று எல்லாவற்றையும் சொல்லிவிடுகிறாள். ஆச்சரியமும்சந்தேகமும் ஒருங்கேதோன்ற'தெய்வத்தின் திருவருளால் மாங்கனி கிடைக்குமா? ஆனால் இன்னொரு பழம் கொண்டுவா' என்றான் பரமதத்தன். மற்றொன்றும்கொணர்ந்துவிட்டாள் அவள்; கையிலே வாங்கினான். அவ்வளவுதான். பழம் பறந்துவிட்டது. "என்ன? எங்கே போய்விட்டது?" என்று திகைத்தான். பழம் மாயமாய் மறைந்துபோயிற்று.

உடனே பரமதத்தன் தன் மனைவியின் உண்மை நிலையைக் கண்டு கொண்டான். அவளை மனைவியாய்க் கருத அஞ்சினான். அவள் தாள்களிலே வீழ்ந்து தொழுகிறான் தெய்வமென்று, இந்தப் பெண்ணரசியை 'கணவனும் தொழுத மனைவி' என்று சிவனடியார் குலம் போற்றிப் புகழுகிறது.

'காரைக்காலம்மையார்' என்று உலகம் போற்றுகிறது. அம்மையார் அறுபத்துமூவரோடு அறுபத்துநால்வராய் காட்சியளிக்கிறார் கோயில்கள் தோறும், விஷயமறியாத பலர், அறுபதும் பெற்ற ஔவையார் இன்னுமொரு குழந்தை வேணுமென்று வரங் கேட்பதாய்க் கதைப்பர். இவர் உடலுடன் கைலாயம் சென்றதாகவும், மனித உடலை நீத்து பேய் வடிவம் பெற்றதாகவும் புராணம் சொல்லும். உலகத்தை வெறுத்த இப் பெரியாரை காரைக்கால் பேயார் என்றும் சொல்லுவார்கள். இவரது அற்புதத் திருவந்தாதி, திருவாலங்காட்டுப் பதிகம், இரட்டை மணிமாலை, இம் மூன்று அழியாச்செல்வங்களையும் தமிழர், 'அம்மையார் அருளால் அழைத்த முக்கனிகள்' என்று பாராட்டுவதில் ஆச்சரியமென்ன? பரமதத்தனுக் களித்த இரு கனிகளைவிட சிறந்தவை இந்த முக்கனிகள் என்பது ரஸிகர் கொள்கை. ஆனி மாதத்துப் பூர்ணிமையில் காரைக்காலிலே, இந்த மாங்கனித் திருநாள் வெகு விமரிசையாய்க் கொண்டாடப்படுகிறது. அம்மையாருக்கு அருள் செய்த இந்தத் திருநாளால் ஆனி மாதமும், பூர்ணிமையுமே, ஒருபடி உயர்ந்துவிட்டது என்று சொல்லத் தடையென்ன?




வை. மு. கோ.

அன்புள்ள மங்களத்திற்கு! உபய க்ஷேமங்கள்.

உன்னுடைய வேதாந்தக் கடிதம் கிடைத்தது. "பொறுமைவேண்டும். எல்லாவற்றையும் சகிக்கும் பக்திவேண்டும். மனத்தைத் தளரவிடாதே! இதெல்லாம் கால வித்யாஸத்தின் கோலம்" என்றெல்லாம் நீயும் எழுதிவிடலாம்; நானும் படித்துவிடலாம். அவ்வளவுதான் முடியும். உண்மையில் என்னால் பொறுமையை வகிக்கவேமுடியவில்லை. நான் பொறுமையற்றவள்தான் என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். என்று நாம் நமது அழகிய பட்டணத்திற்குப் போகப் போகிறோம்? என்று அந்த ஆனந்த நகரின் அற்புதக் காக்ஷியைக் கண்டு களிக்கப்போகிறோம்? என்று என்னப்பன் ஸ்ரீ பார்த்தஸாரதியின் திவ்ய மங்கள விக்ரத்தை தரிசிக்கப்போகிறோம்? என்று புதிய புதிய காக்ஷிகளைக் கண்டு இன்புறப்போகிறோம்? என்று மனமகிழ மங்கள கானத்தை ரேடியோவில் கேட்டு உள்ளங் குளிரப்போகிறோம்? என்று உலகத்துச் செய்திகளைக் கேட்டு சந்தோஷப்படப்போகிறோம். என்று மனோல்லாசமான சினிமாப் படங்கள் பார்க்கப்போகிறோம்? என்று நமது ஸ்திரீகள் சங்கத்திற்குச் சென்று பழயபடி நாம் உத்ஸாகமாக இருக்கப்போகிறோம்?" என்று தான் சதா என் இதயம் ஏங்கித் தவிக்கின்றது.

வேதாந்தப் பழமே! உன் வேதாந்தம் என் மனத்தில் படவே இல்லை. மேள சப்தம் கேட்டு எத்தனையோ யுகங்களாகிவிட்டதுபோலிருக்கிற சமயத்தில் பெருமாள் மாட்டுக்காரன் இரண்டு மாடுகள் சகிதம் வந்தான். அவன் ஊதிய அபஸ்வர நாதஸ்வரத்தின் சப்தமும் அவன் பசுவுக்கும் எருதுக்கும் கல்யாணம் செய்துகாட்டிய காக்ஷியும் என் உலர்ந்து வரண்ட மனத்தில் சிறிது பசையை உண்டாக்கியது. நித்ய கல்யாணம், பச்சை தோரணம். என்பதுபோல் தினம் மேள சப்தம் கேளாத நாளே நம்ம பட்டணத்தில் இல்லை. அம்மாதிரி மறுபடியும் எப்போது கேட்போம் என்றுதான் மனது அலைகிறது. இப்போது இந்த கிராமத்தில் கங்கம்மா என்கிற தேவதைக்கு காப்பு கட்டியிருக்கிறார்கள். அதற்காக குடியானவர்களும், ஹரிஜனங்களும், கூத்துபோடுகிறார்கள்; கும்மியடிக்கிறார்கள். அதுவும் ஒரே மாதிரியான பாட்டும் ஆட்டமும் பார்த்துச் சலித்துவிட்டது. பொழுதுபோக்குக்கு மார்க்கமே இல்லை. பயித்தியம் பிடித்துவிடும்போல் இருக்கிறது. அந்த பார்த்தஸாரதிப் பெருமாள் கிருபை செய்து எங்களை சீக்கிரம் பட்டணம் அழைத்துக்கொண்டால் போதும். நீயும் எனக்காகப் பிரார்த்தனை செய்.

இங்ஙனம்:
உன் பிரிய
கோதாவரி.

# 45

## புலிசுடும் வீரரே! எலிப்பொறியில் வாரும்

ஜமீந்தாரின் நடுக்கலைக்கண்டு அதிரூபத்திற்குப் பின்னும் பதினாயிரம் மடங்கு பயமும் குலைப்பும் உண்டாகிவிட்டன. ஒருவரையொருவர் விழித்துப் பார்க்கும் பார்வையில் பயமும் அசட்டுத்தனமும் தாண்டவமாடுகின்றன. ஜமீந்தார் நின்ற இடத்திலிருந்தே ஒரு சோபாவில் சாய்ந்தார். அங்கமுத்து எங்கு பதுங்கினாளோ, தெரியவில்லை. அதிரூபத்திற்கு ஜமீந்தாரின் நிலைமையைக் கண்டதும் அதுவரையிலிருந்த ஜுரம்கூட எப்படியோ எகிரிப்போய்விட்டது.

"அடீ அங்கமுத்தூ ! எங்கு துலைந்துபோனாய்! கொஞ்சம் ஜலங் கொண்டுவா! எஜமானுக்கு மயக்கம் வந்துவிட்டது" என்று கத்தினாள்...'ஹஹ்ஹஹ்ஹஹ்ஹ அதிரூபம்! எஜமானுக்கு ஒன்றும்வராது பயப்படாதே. நான் மந்திர விபூதி கொடுத்துக் காப்பாற்றுகிறேன். உன் எஜமானர் உன் பொருட்டாகவே உயிரையே வைத்திருப்பதை நானறிவேன். அதனால்தான் இந்த மகா வீரர் பயங்கரமான கொலையைக்கூட செய்திருக்கிறார். தன் மனைவியை பரலோகம் அனுப்பிய பரமசாது. ஹி....ஹி...ஹி'...என்று கர்ஜனை செய்ததைக் கேட்டு அதிரூபம் நடுங்கினாள்.

ஜமீந்தாரின் உயிர் ஊசலாடுவதுபோலாகிவிட்டது "ஹா... கொலையா ! மனைவியைக் கொலை செய்தாரா !" என்று அதிரூபம் திகைத்தாள். ஜமீந்தார் சில நிமிஷங்கள் அசைவற்று இருந்து பின்னர் சற்று தெளிவு பெற்றார். பயம் எத்தனை நடுக்கினதோ அத்தனைக் கத்தனை ஆக்ரோஷமும் உண்டாகியது. பல்லைக்கடித்துக்கொண்டு சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு "டேய் ! சோதாப்பயலே ! இரு! இரு! இன்னும் சில நிமிஷத்திற்குள்ளேயே நீ படப்போகும் பாட்டை வெட்டவெளிச்சமாகிவிடுகிறேன். ராஸ்கல்! சாமியாராடா நீ! சாமியார் !" என்று கத்திக்கொண்டே தலைகால் தெரியாது வாசலுக்குப் போய் தன் கார் ட்ரைவரை அனுப்பி போலீஸாரை அழைத்துவரச் சொல்லிவிட்டு மாடிக்கு ஓடினார்.

அதிரூபத்திற்கு பயம் நடுக்குகிறது. "ஜமீந்தாரை எத்தனை தடுத்தும் அவர் கேளாததால் என்ன விபத்து நேருமோ ! என்னவாகுமோ !" என்று நடுங்கியபடி கூடவே ஓடினாள். ஜமீந்தார் மாடி முழுவதும் சுற்றிச் சுற்றி ஓடியலைந்தார். சாமியாரின் ஆவி பேசுவது மட்டும் காதில் விழுகின்றதேயன்றி பிம்பம் தெரியவில்லை.

மறுபடியும் சிறிது பீதியும் பயமும் உண்டாயின. "டேய் ! கபடச்சாமியே ! நீ சொல்கிறபடியே நீ உண்மைச்சாமியாயிருந்தால் மறைந்து மறைந்து ஏண்டா ஓடுகிறாய் ! என்னெதிரில் வாடா ! அயோக்ய சிகாமணியே !" என்று கர்ஜனை செய்தார்.

"அடாடா ! என்ன வீரம்! என்ன தீரம்!....இதோ வந்தேன்... நேராக, நன்றாக திருப்தியாகப்பாரு" என்று கூறியபடியே ருத்தி

ராக்ஷமும் விபூதியும், ஜடையும் காவி உடையும், தாடி மீசையுமாக
அசல் ரிஷியைப்போல் ஒரு இருட்டான இடத்தில் உருவம்தெரிந்தது
கண்டு அதிரூபம் நடுங்கி கீழேயே விழுந்துவிட்டாள்.

ஜமீந்தாருக்கும் கால்கள் விலவிலவென்று நடுங்கின. கண்கள்
மிரளமிரள விழிக்கின்றன. அடுத்த நிமிடமே, "டேய்...ஜமீந்தார்
புலியே! இதோ இன்னொரு கூடுவிட்டுக்கூடுபாயும் ஸ்வரூபத்தைப்
பாரடா!" என்று மொட்டைத்தலையுடன் ஆண்டியைப்போல் காக்ஷி
கொடுத்தார். அடுத்த நிமிடம் க்ரீடமும் பீதாம்பரமும் தரித்த தேவ
லோகத்து மனிதர்களைப்போல் காக்ஷிகொடுத்தார். அதற்கடுத்த
நிமிடம் வெறும் கோவணாண்டியாய் தேகம் பூராவும் விபூதியுடன்
தோன்றி மறைந்து, அடுத்தக்ஷணம் முதலில் காக்ஷிகொடுத்த காளிகா
தேவியைப்போல் கலகலவென்று பெரிதாகச் சிரித்தவாறு, உடனே
மறையாது எதிரில் நின்றார்.

சினிமாத்திரையில் காக்ஷிகள் தோன்றி மறைவதுபோல் விநாடிக்
கொரு உருவமாகத்தோன்றி மறைந்த விசித்திரத்தை ஜமீந்தார்கண்டு
இன்னதென்று கூற வியலாது கதிகலங்கிப்போனார். கடைசியில்
நிலைத்த உருவத்தைக்கண்டு முதலில் பயந்தார். எனினும், தான் சர்க்
காரிடம் லைஸென்ஸ் வாங்கிக்கொண்டு புலி சுடும் வீரன் என்பதை
நினைவுக்கு வரவழைத்துக்கொண்டார். ஆனால் துப்பாக்கி கைவச
மில்லை. "அத்தகைய சூரனா இந்த இந்திரஜால நாடகத்தைக் கண்டு
பயப்படுவது" என்று தனக்குள் மகத்தான தைரியத்தை வரவழைத்
துக்கொண்டு "டேய் ஜாலக்காரா! நீ யாரடா பயலே...செத்து
சுண்ணாம்பாகிய சாமி- ராவது உயிருடனிருப்பதாவது, இந்த பித்த
லாட்டங்களை நானடா நம்புகிறவன்!" என்று கூறியவாறு அந்த
சாமியாரின்மீது பாய்ந் கபக்கென்று கட்டிப் பிடித்து ஓடவிடாத
படி கைகளை கெட்டியாகப் பிடித்த சமயம் ட்ரைவர் போலீஸாரு
டன் உள்ளேவந்தான்.

போலீஸாரைப் பார்த்தவுடனே ஜமீந்தாரின் தைரியம் அதி
கரித்ததோடு தான் புலி சுடும் வீரன் என்கிற பட்டம் ஏற்கெனவே
பெற்றிருப்பது ன் இப்போதொரு பக்காத் திருடனைப் பிடித்துக்
கொடுத்த அபாரமான புகழும் தனக்குவந்துவிட்டது என்றேஎண்ணி
மகிழ்ந்தவாறு "நில்லடா ராஸ்கல்! உம்...நில்லடா...ஓடவா பார்க்
கிறாய்...இனி நீ ஒரே உலகத்திற்கு ஓடவேண்டியவன்தான்" என்று
பலத்த கோஷமிட்டுக் கூறி தடபுடல் செய்தார்.

சாமியாரோ, சிரித்துக்கொண்டே, "அடேயப்பா! செத்த
பாம்பை அடிக்கும் வீரன் நீதாண்டா! நான்தான் அசையாமல்
நிற்கிறேன். என்னைப் பிடிக்க பிரம்மப் பிரயத்தனம் செய்கிறாயே!
நான் ஏன் ஓடப்போகிறேன்? எனக்கென்ன பயித்தியமா!...
வாருங்கள் வாருங்கள். போலீஸ்காரர்களே! வாருங்கள்" என்று
போலீஸாரைப் பார்த்து சிரித்தபடியே கூப்பிட்டார்.

முதலில் இந்த உருவத்தைப் பார்த்ததும் போலீஸார் நடுங்கினார்கள். தம்மை அழைத்த அழைப்பைக் கண்டு பின்னும் சற்று அச்சமடைந்து நின்றார்கள். அவர்களுக்குள் தைரியசாலியாய் வந்துள்ள ஓர் புதிய சப்-இன்ஸ்பெக்டர் தாம் பயப்படுவதாகக் காட்டிக்கொள்ளாமல் தொண்டையை கனைத்துக்கொண்டு அசடு வழிய சாமியாரின் அருகில்போய் "இதோ வந்தேண்டா! சோதாப் பயலே!...இதோ வந்தேன்...டேய் முன்னூத்திநாலு! விலங்கை முதலில் கைகளில் மாட்டு. பிறகு பேசுவோம்'' என்றார்.

304 உடனே விலங்கை பயந்தபடியே மாட்டினான். சாமியார் அடங்கி ஒடுங்கி வெகு சாதுவாக நின்றுவிட்டார். நடந்த வரலாறுகள் பூராவும் ஜமீந்தாரும் அதிரூபமும் ஒரு நொடியில் சொல்லி முடித்து, "இம்மாதிரி கூடுவிட்டுக் கூடுபாய்வதாம். பாமர மக்களை ஏமாற்றி மோசம் செய்துகொண்டு ஒரு கூட்டமாகக் கிளம்பியிருப்பதாகத் தோன்றுகிறது. அதில் இந்த சாமியாரம்மா முக்யம்'' என்று ஜமீந்தார் ஆத்திரத்துடன் கூறியபடியே விழித்துப்பார்த்தார்.

'சாமியாரின் ஆவியா! கூடுவிட்டுக் கூடுபாய்ந்தாயா! எங்கே! இந்தக் கூடுவிட்டு இன்னொரு கூடுபாயடா பார்க்கலாம். டேய்... காளிப்பயலே'என்றுகூறியபடி இன்ஸ்பெக்டர் தலைமயிரைப்பிடித்து உலுக்கினார். அவர் கையோடுதலைமயிர் அப்படியேவந்துவிட்டது. அந்த மயிர் இருந்த தலையில் அழகான கிராப்புத்தலை இருக்கக்கண்டதும் இன்ஸ்பெக்டர், தான் முழு வெற்றியும் பெற்றதாக எண்ணி மகிழ்ந்தவாறு சாமியாரின் வளையல்களை ஒடித்தும் சேலையை தாதா வென்று இழுத்துக் கிழித்தும் நெற்றி குங்குமத்தை அழித்தும் சிறிது நேரத்திற்குள் த்வம்சம் செய்துவிட்டார்.

ஆனால் அரைக்ஷணத்திற்குமுன்பு இருந்த ஒரு அபாரமான சந்தோஷமும், வெற்றி பெற்ற ஆரவாரமும் சடக்கென்று மறைந்து போய் குலைநடுக்கலும், தலைசுற்றலும் உண்டாகி....'ஹா!...தாங்களா! நாயுடுகாருவா...ராஜாராம் நாயுடுவா!...ஐயையோ மோசம் போய் விட்டோமே...இதென்ன கூத்து...விவரம் ஒன்றுமே தெரியவில்லையே!'...என்று திகைத்துப்போனார்.

அங்கிருந்த அத்தனை பேர்களும் அப்படியே பிரமிப்பும், ஆச்சரியமும் அடைந்து, வைத்த கண் வாங்காது பார்த்துத் தம்பித்துவிட்டார்கள். நாயுடுகாரு கபகபவென்று பெரியதாக சிரித்தபடியே... "இன்ஸ்பெக்டர்வாள்! இதே விலங்கை வீணாக எடுத்துக்கொண்டு போகவேண்டாம்...அதோ! அந்த புலி சுடும் வீரரின் திருக்கரங்களில் மாட்டுங்கள்...ஓட எத்தனிக்கிறார். உம்...உம்...பிடியுங்கள்'' என்று கூறியபடியே அதே விலங்கை எடுத்துத்தானே ஜமீந்தாரின் கைகளில் மாட்டிவிட்டு பெரிய நகைப்பு ஒன்று நகைத்தார்.

இன்ஸ்பெக்டர் முதலிய போலீஸ்காரர்கள் நாயுடுவுக்குத் தமது வந்தனத்தைத் தெரிவித்துப் பின்னர் "இதென்ன விஷயம்!

எங்களுக்கு ஒன்றும் புரியவில்லையே! இந்த மனிதன் எப்படிக் கைதியானார்" என்று வணக்கமாகக் கேட்டார்கள்.

நாயு:—விவரம் தானே தெரியும். அருகில் எங்கேனும் டெலிபோன் இருந்தால் உங்கள் அதிகாரிக்கு, வேறு ஒன்றும் சொல்ல வேண்டாம். 'கொலைபாதகனைப் பிடித்துவிட்டேன்' என்று சொல்லி விட்டு வாருங்கள் போதும்—என்றார்.

அப்படியே இன்ஸ்பெக்டர் ஓடிப்போய் தெரிவித்துவந்தார். நாயுடு, "நான் மறுபடியும் மடத்திற்குப் போகவேண்டும்; நீங்கள் ஜெமீந்தாரை கவனித்துக்கொள்ளுங்கள்" என்று கூறிவிட்டு உடனே தனது சுயரூபத்துடன் மடத்திற்குச் சென்றார்.

'பணம் என்றால் பிணமும் வாய்திறக்கும்' என்கிற பழமொழி கூடப் பொய்யாகுமா! தங்க நாணயத்தைப் பார்த்தவுடனே ஒவ்வொருவர் இதயத்திலும் ஆசைப் பிசாசு தலைதூக்க வாரம்பித்தது. ஒருவருக்கொருவர் குசமசவென்று பேசிக்கொள்ளத் தொடங்கி, "ஏண்டா! சாமியார் உயிர் இருந்தாலும் இனி பகிரங்கமாக எதிரில் வந்து நம்மை ஒன்றும் செய்யமுடியாது. நாம் வீணாக இந்த பீடத்தில் சன்யாசிக் கட்டைகளாக ஆயுள்காலம்வரையில் காத்துக் கிடப்பதில் இனி லாபமென்ன? நாளையதினம் சாமியார் வருவதற்குள், இந்த தங்க நாணயத்தை ஆளுக்குக் கொஞ்சமாகப் பங்கிட்டுக் கொண்டு நாம் ஓடிவிடலாம். வெறும் சோம்பேறி மடமாக இருக்கட்டும். நாம் இத்தனை செல்வங்களையும் வைத்துக்கொண்டு சன்யாசிக் கட்டைகளாகவா காலம் கழிப்பது?" என்று பேசி முடிவு கட்டிக்கொண்டார்கள்.

எல்லோருக்கும் அந்த யோசனை மிகவும் உசிதமாகப் பட்டதால் ஒரே முகமாக ஒப்புக்கொண்டு தங்க நாணயங்களைப் பங்கிட்டுத் தனித் தனியே மூட்டை கட்டிக்கொண்டு, மடத்திலிருந்த மற்ற விலையுயர்ந்த விக்கிரகம் முதலிய சாமான்களையும் தூக்கிக் கொண்டு புறக்கடை வழியாக ஓட எத்தனித்தார்கள்.

புறக்கடைப்பக்கம் பத்து ஆட்கள் இவர்களை மடக்கியதால் வீதிப்பக்கம் வந்தார்கள். அங்கும் ஆட்கள் மடக்கியதால் மாடியில் ஏறி குதிக்கப் பார்த்தார்கள். அங்கும் ஆட்கள் மடக்கியவுடனே இவர்களுக்குப் பயம் பிடித்துக்கொண்டது. "சாமியாரின் ஆவியை நாம் பரிபூர்ணமாக நம்பினோம். காசாசையின் மோகத்தில் நம்பிக் கைக்குத் துரோகத்தை அடுத்தக்ஷணமே நினைத்ததால் ஸ்வாமிகளின் ஆவி பல உருவங்களில் புகுந்து நம்மைத் துரத்துகிறது." என்கிற எண்ணம் உடனே உண்டாகியது.

"ஐயையோ! சுவாமிகளே! சுவாமிகளே! மன்னிக்கவேணும் புத்தி பிசகிவிட்டது. ஆசைக்கு மனம் அடிமையாகிவிட்டது. இனிமேல் அப்படிச் செய்யமாட்டோம். எங்களை விட்டுவிடுங்கள்" என்று கத்தினார்கள். அவர்களைத் துரத்திய ஆட்கள் கலகலவென்று சிரித்தபடியே, "சிஷ்யர்களே! சுவாமிகளின் வித்தை தெரிந்ததா! இனி

வமாற்றமாட்டீர்களே''...என்றார்கள். மூட சிஷ்யர்கள் பயபக்தி யுடன் "இல்லை. இல்லை...கனவிலும் நினைப்பதில்லை" என்று அலறிய குரல்கள் காதுகளை செவிடுபடச் செய்தன.

OFFICE OF THE REGISTRAR ... 19 AUG 1942 MADRAS

## 46

## இன்பமும் இருளும்

குருசாமியின் குரலைக் கேட்டவுடனே கமலாவின் வயிற்றில் புளியைக் கரைத்தது. தன் முகத்தை விகாரம் செய்து கொண்ட ரகஸியத்தை எல்லோருக்கும் வேறுமாதிரியாகச் சொல்லி யதுபோல கணவனுக்கும் சொல்லியிருக்கிறோமே! என்றுமேவராத இந்த மனிதர் இன்று ஏன் வரவேண்டும். இங்கு என் பிராணகாந்தர் இருப்பது தெரிந்துவிட்டால் என்ன செய்வது" என்று தவிக்கிறாள்.

சோமு இவளைப் பார்க்கும் பார்வையில் மனது பின்னும் குழம்புகிறது. "கமலா! என்னைக் காட்டிக்கொடுத்து அவமானப் படச்செய்யாதே''....என்றுகெஞ்சுவதுபோல் தோன்றுகிறது. குரு சாமி கதவைத் தட்டும் சத்தத்தைக் கேட்டு எங்கே குழந்தைகளும் விழித்துக்கொள்வார்களோ! என்கிற பயமும் உண்டாகியதால் தன் கணவனைப் பார்த்து "ஸ்வாமீ! இப்படியே நீங்கள் படுத்திருங்கள். கதவருகிலேயேபோய் அவருக்குப் பதில் சொல்லிவிட்டு வந்துவிடு கிறேன். பயப்படவேண்டாம்" என்று உதடு பேசுகிறதேயன்றி அண்ணன் செய்த அக்கிரமம் அவருக்குத் தெரிந்துவிடப்போகிறதே என்ற பயம் கமலாவைக் கொன்று வதைக்கிறது.

குருசாமியோ, விடாது கதவைத் தட்டியதால் கமலா சோமு வைத் தலையணைமீது படுக்க வைத்துவிட்டு கதவருகில் வந்து அப் போது விழித்துக்கொண்டவள்போல் அபிநயித்த, 'யாரது!' என்றாள்.

குரு:—நான்தான் கமலா!...பல வருஷங்களாகிவிட்டதால் என் குரல்கூட மறந்துவிட்டதா! மகா பரிசுத்தவதியை, ஞான தீபச்சுடரை, உண்மையறியாது மதிகெட்டு அழகைக் குலைத்த பாதக் குருசாமி. கதவைத்திற. இன்னும் என்மீது சந்தேகப்படுகிறாயா! நீதான் என் அஞ்ஞானத்தைப் போக்கி ஞானக்கண்ணைத்திறந்த குரு வாயிற்றே. கமலா! கதவைத்திறவேன்—என்று உணர்ச்சியுடன் கூறினான்.

கமலா பயந்துகொண்டே "அண்ணா! இதென்ன வார்த் தைகள்! கதவுக்கு வெளியிலிருந்துகூட இம்மாதிரி பேச்சுக்களைப் பேசலாமா! வாருங்கள். ஊரில் குழந்தைகளெல்லாம் சௌக்கியமா! இந்த நேரத்தில் எங்கு வந்தீர்கள்!" என்று கூறியவாறு அவள் நமஸ்

கரிக்கப்போவதற்குள் குருசாமி உள்ளே வந்ததும் கமலாவின் கால்களில் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்துக் கண்ணீர் பெருக நாக்குழற "கமலா! இனிமேல் என்னால் தாளமுடியாது. என்னை க்ஷமித்து ரக்ஷித்து என் வேண்டுகோளைப் பூர்த்தி செய்தாகவேண்டும். நான் உனக்கு நினைத்த த்ரோகம் என்னைப் புரட்டிப்புரட்டி அடிக்கின்றது.

என்று ஏதேதோ சொல்வதைக் கேட்கும் கமலாவின் பயம் அதிகரிக்கின்றது. மனித ஸ்பாவத்திற்குப் பொருந்த தன் கணவனுக்கு எங்கே கோபம் வந்துவிடுமோ! என்ன நடந்துவிடுமோ! என்கிற பயம் நடுக்குகிறது. அதை மெல்ல அடக்கிக்கொண்டு "அண்ணா! பழங்கதைகளை ஏன் இன்னும் நினைத்துப் பேசவேண்டும். எல்லாம் அவன் செயல்...நீங்கள் ஏன் இப்படி உடம்பு இளைத்திருக்கிறீர்கள்? குழந்தை கண்ணம்மாளுக்கு விவாகமாயிற்றா? அவள் சௌக்யமாயிருக்கிறாளா" என்று வார்த்தையை மாற்றினாள்.

உள்ளே இருந்த சோமுவுக்கு குருசாமியின் செய்கைகளும், வார்த்தைகளும் அபாரமான ஆச்சரியத்தையும் சந்தேகத்தையும் கொடுத்தன; எனினும் வெகு பொறுமையுடன் பதுங்கிக்கிடந்தான்.

குரு:—உனக்கு நான் நினைத்த விபரீதமான த்ரோகத்தின் தீயானது என்னை உள்ளுக்குள் எரித்துக்கொண்டே வந்து என்னை அடியோடு தாக்கிவிட்டது. இனி என்னால் ஒரு நிமிடங்கூட இருக்கவே முடியவில்லை. எந்த நிமிடம் எங்கு ஓடிப்போய்விடுவேனோ! எந்த நிமிடம் பயித்தியம் பிடித்துவிடுமோ! எந்த நிமிடம் தற்கொலையே செய்துகொள்வேனோ! ஒன்றுமே தெரியவில்லை.

கமலா! நீ மகா பரிசுத்தவதி...வைராக்ய அக்னி. பரிசுத்தப் பதுமை என்று உன்னைப்பற்றி நான் அறிந்ததுபோல் உலகில் ஒருவருமே அறிந்திருக்கமாட்டார்கள். உன்னுடைய கற்பின் சக்தி நெருப்புக்கு நிகராகவிருப்பதைபரீக்ஷார்த்தமாய் அறிந்தஎன்னிடமே ஒரு சோதா, பொறாமைப் பேயன் உன்னைப்பற்றி இழிவாயும் அபாண்டமாயும் பேசிய வார்த்தைகளின் கொடுமைகளை என்னால் சகிக்கமுடியவில்லை. அவனிடம் நான் தாற்காணித்தேன். அவன் பெண்ணும் நம் ஜெயாவும் ஒரே பள்ளிக்கூடத்தில் படிக்கிறார்களாம். அவன் உங்களைப்பற்றி நன்றாக அறிந்தவனாம்.

வேண்டுமென்று நீ உன் பெண்ணை நாடகத்திலும் ஸினிமாவிலும் சேர்த்துப் பொருள் பறிக்கும் நோக்கத்துடன் முதல் முதல் தர்மத்திற்காக நடிக்கவிட்டதுபோல் ஜெயாவை நடிக்கச் செய்தாயாம். அந்த மூர்க்கன் இன்று ஜெயாவை நன்றாக ஆத்திரம் மிகுதியால் அடித்துவிட்டு கெட்டுப்போன தாயாரிடம் இருக்காதே என்று புத்தி சொன்னானாம். இந்த தகவல்களை அறிந்த பின்னர் எனக்கு மனது சகிக்கவில்லை.

குழந்தை எப்படியிருக்கிறாள் என்று பார்ப்பதற்காகவும், நீ இம்மாதிரி வீண் அபவாதத்திற்கு இனி இலக்காகாமல் தடுக்கும் பொருட்டுந்தான் நான் இப்போது இங்கு வந்தேன். நான் ஒருவா

மாக இதே ஊரில்தான் இருக்கிறேன். என்னுடைய பாபத்தின் பலனால் மனைவி இறந்தாள். வேலை போய்விட்டது. கண்ணம்மாள் விவாகமாகிபுக்ககத்திலிருக்கிறாள்.நான்ஒண்டிக்கட்டையாகினேன்.

கமலா! இன்னொரு ரகஸியம். உனக்குத் தெரிந்திருக்காது என்று நான் சொல்ல வந்தேன். சோமு எங்கேயோ ஓடிவிட்டதாக நீ எண்ணிக்கொண்டிருக்கிறாய். அவனைப்பற்றி மிகவும் பயங்கரமான விஷயம் என் காதிற்கு எட்டியிருக்கிறது. அவனுக்கு துர்வியாதி ஏதோ வந்திருப்பதாகவும் அதனால் எங்கோ ஓடி அலைவதாகவும் கேள்விப்பட்டு உள்ளம் துடிக்கிறது. உலகத்தில் எத்தனையோ வியாதிக்காரர்கள் இருக்கும்போது இவன் மட்டும் ஏன் இப்படிப் பிச்சைக்காரனாய் பாதேசியாய் அலையவேண்டும்.

எப்படியாவது அவனைத் தேடிப் பிடித்து தக்க வைத்தியம் செய்யவேண்டும். அவனையும் உன்னையும் சேர்த்து ஆதரவுடன் ஒரு இடத்தில் வைத்து உனக்கும் அபவாதமில்லாது தடுக்கவேண்டும் என்றுதான் நான் இப்போது இங்கு வந்தேன். சோமுவைப்பற்றிச் சொல்வது உண்மையாகவிருக்குமா!'' என்று கேட்டான்.

கமலாவின் குடல் நடுங்குகிறது. உள்ளே இருந்து கேட்கும் சோமுவின் இதயம் துடிக்கிறது. அண்ணன் கமலாவை துராக்ருதம் செய்ய எத்தனித்ததால்தான், கமலா தனியாக வந்துவிட்டாள் என்பதை அவர்களுடைய சம்பாஷணையே அறிவித்ததால் அண்ணன்மீது தீபோல் ஆத்திரம் ஒருபுறம் மூண்டெரிகிறது. கமலாவின் பரிசுத்தத்தைக் கண்டு உள்ளம் பரவசமடைவது ஒருபுறம், எங்கே ரகஸியம் வெளியாகிவிடுமோ! கமலா என்ன பதில் சொல்லிவிடுவாளோ! என்று பயம் ஒருபுறமாகத் தத்தளிக்கிறான்.

கமலா வெகு தைரியமாகப் பேசத் தொடங்கி, "அண்ணா! உங்களுக்குக் கிடைத்துள்ள தகவல் மிகவும் பொய்யானது. அவர் தங்கம்போல் இருக்கிறார். சென்ற சில மாதங்களுக்கு முன்புகூட அவரை நான் பார்த்தேன். ஒரு மலையாளப் பெண்ணுடன் குலாவிக்கொண்டு சென்றார். எப்படியாவது அவர் சந்தோஷமாயிருந்தால் போதும் என்று எண்ணினேன்...சரி! அகால வேளையாகிறது. நீங்கள் காலையில் வந்தால் குழந்தைகளைப் பார்க்கலாம். இன்று குழந்தையை எவனோ அடித்தது உண்மைதான். அவன் மகா கிராதகன். பொறுமையினால் செய்துவிட்டான். அந்த பலன் அவனையே தாக்கும். கடவுள் கூலி கொடுப்பார். நீங்கள் காலையில் வாருங்கள்'' என்றாள்.

காலையில் வாருங்கள் என்று கூறிய கருத்திலேயே இங்கு படுக்கவேண்டாம் என்று சொல்வது விளங்கிவிட்டதால் குருசாமி அகாலத்தை உத்தேசித்து எழுந்துபோய்விட்டான். கதவைத் தாளிட்டுக்கொண்டு கமலா உள்ளே வந்தாள். அவளைப் பார்த்த உடனே சோமுவுக்குச் சந்தோஷம் கரைபுரண்டது. கைகளில்

ரணம் அதிகமாகவிருந்ததேயன்றி விரல்கள் குறைய ஆரம்பிக்க வில்லே. அந்த ரணத்திற்காகத் துணியைக் கட்டியிருந்தான்.

கமலாவின்மீது ஏற்கெனவே பொங்கும் ப்ரேமை வெள்ளம் இப்போது அபாரமான நம்பிக்கையுடன் கரைபுரண்டதால் அவனே மீறியஉணர்ச்சியில் அவளேச் சேர்த்துக்கட்டிக்கொண்டான். "கமலா! நான் உன்னே மனேவியாய் அடைந்த பலனே இன்றே அடைந்தேன். கற்பிற்கரசி, உத்தமி என்றெல்லாம் படிக்கும் வீராங்கனேகளேக் காட்டிலும் சிறந்த நாரீரத்தினம் நீதான் என்பதை அறிய என் னுள்ளம் பூரிக்கிறது. என்னிடம் நீ ஒளித்த உண்மை விளங்கி விட்டது; எனினும் நடந்ததைச் சொல்லு" என்று கெஞ்சினுள்.

விஷயம் தெரிந்துவிட்டதால் கமலா நடந்ததை அப்படியே சொல்வதைக்கேட்ட சோமு தம்பித்துப்போனுன். தன்னழகைத் தான் குலேத்துக்கொள்வதென்றுல் சாமானியமான காரியமா! என்றுவியப்புக்கடலாடினுன். கமலாவின்பிம்பம்அவன் கண்களுக்கு சாதாரண மனுஷியாகத் தோன்றுமல் தேவத்தன்மை பொருந்திய புனித பிம்பமாகவே தோன்றியது. அவளே இமைகொட்டாது பார்த்துப் பார்த்து பூரித்து உள்ளம் களித்தாள். வெறிபிடித்தவன் போல் கமலாவைச் சேர்த்துக் கட்டிக்கொண்டான். நான் மகத் தான பாபத்தைச் செய்துவிட்ட பிண்டமாயினும் மலேபோன்ற புண்ணியத்தைச் செய்திருப்பதால்தான் இத்தகைய விலேயிலாத மாணிக்கம் போன்றும், ஞானதீபச் சுடராயும் விளங்கும் உன்னேப் பெற்றிருக்கிறேன். இந்த பெருமையே என்னே பத்து யானே பலங் கொண்டவனுகச் செய்துவிட்டது" என்றுன்.

'அண்ணன்மீது எங்கு ஆத்திரம் வந்துவிடுமோ, என்ன நடந்து விடுமோ!' என்று கமலா பயந்தபடியே, "ஸ்வாமீ! தாங்கள் என்னே அடைந்ததனுல்தான் இத்தகைய பீடைபிடித்து ஆட்டுகிறதோ! என்று நான் இராப்பகல் கவலேப்படுகிறேன். இத்தகைய பாவியி னிடம் நீங்கள் அளவிலாத ப்ரேமை வைத்திருப்பது தங்களுடைய உத்தமமான குணத்தின் சோபையைக் காட்டுகிறது. இந்த சம்ப வத்திற்காக நீங்கள் அண்ணுவிடம் கோபிக்கவோ, ஏதாவது கேட்கவோ கூடாது. அவரும் மன்னியும் அந்த சமயத்தில் இற கொடிந்த பறவையைப்போலிருந்த என்னே ஆதரித்திராவிட்டால் நானும் நம் குழந்தைகளும் எந்த கதியாகியிருக்குமோ, அவர்கள் செய்துள்ள மகத்தான உபகாரத்தை நினேத்து நீங்கள் பேசாதிருக்க வேண்டும்" என்று கெஞ்சினுள்.

சோமு ஒன்றுமே பதில் சொல்லாது வாளாவிருந்தானேயன்றி அவன் மனத்தில் உண்மையில் அண்ணன்மீது கடும் புயல்காற்று போல் கோபமும் வெறுப்பும் அடிக்கிறது. அதைக்கண்ட கமலா வுக்குப் பயம் அதிகரித்தது. சோமுவின் மார்பைத் தடவியவாறு, "ஸ்வாமீ! என்ன யோசனே செய்கிறீர்கள்? என்னுடைய வேண்டு

கோலை நீங்கள் மறுக்கமாட்டீர்கள் என்று நம்புகிறேன். ஒன்றைப் பற்ற வேண்டுமாயின் ஒன்றை விடவேண்டுவது நியதிதானே!

குணத்தைக் கொள்ளவேண்டுமாயின் குற்றத்தைத் தள்ள வேண்டும். தனது விலையிலாத கற்பைக் காக்கவேண்டுமாயின் விலையிலாத உயிரை விடவேண்டும். நான் உயிரை விட்டுவிட்டால் குழந்தைகள் கதி யாதாகும் என்றும், நீங்கள் கண்டு களிக்கும் இவ்வழகு உங்களைப் பிரிந்தபிறகு இருந்தென்ன, இறந்தென்ன" என்றும் தோன்றியது. அந்த அழகை நான் குலைத்துக் கொண்டதால் உங்கள் தமயனாரின் விகாரம் குலைந்தது. அவரவர்கள் செய்த குற்றங்களுக்குத் தண்டனை தாமே உணர்ந்து அனுபவிப்பது தான் சிறந்த தண்டனையாகும். இதை நீங்கள் அறியாததல்லவே நீங்கள் ஒருவேளை அண்ணாவைக் கண்டால்கூட எனக்காகப் பேசாமல்போய்விடவேண்டும்" என்று கெஞ்சினாள்.

சோமுவுக்கு முதலில் பதில் சொல்லவே தெரியவில்லை. கமலாவின் திடசித்தமும் வைராக்யமும் திரும்பத்திரும்ப அவன் இதயத்தில் பெரும் கிளர்ச்சியை உண்டாக்கியது. "கமலா! நீ செய்துள்ள த்யாகத்தைக் கண்டபிறகு நான் அதைக் குலைப்பதுபோல் செய்து உன் பெருமையைக் குலைக்கமாட்டேன். என் அண்ணனிடம் முதலில் எனக்குக் கடுங்கோபமே வந்தது. எனினும் அவன் குற்றத்தை உணர்ந்து வருந்துவதைக் கண்டபிறகு என் மனமும் மாறியது. உனக்காக நான்பேசாமலிருக்காது என்ன செய்யமுடியும்?... அது கிடக்கட்டும். நாளை அவன் வந்து உன்னைக் கூப்பிட்டால் என்ன பதில் சொல்லப்போகிறாய்? அந்த கிராதகப் பாவி உன்னைப் பற்றி உளறிய வார்த்தை பரவுமானால் வீண் கலகமாக முடியுமே.

கமலா:—உம்...கலகமென்ன இருக்கிறது. மகா பரிசுத்த மூர்த்தியாகிய உங்கள்மீது நானே என் வாயால் பழியைச்சுமத்திப் பிறரிடம் கூறிய வதை என்னைத் தாக்குகிறது. அதனால் என்ன முழுகிவிட்டது. நெருப்பு என்றாலே வாய் சுட்டுவிடுமா! என்னிதய பரிசுத்தத்தை என் இன்பக் கடவுளாகிய நீங்களறிந்தால்போதும். வேறு ஒருவருக்காகவும் நான் பயப்படவில்லை. நீங்கள் தினம் இதே போல இங்கு வந்து எனக்குப் பேரானந்தத்தை அளித்துக் காப்பாற்றுங்கள். நான் இந்த சொல்ப சந்தோஷத்தை உதறிவிட்டு எங்கும் போகப்போவதில்லை. டாக்டர் ரமாதேவி என்னைக் கைவிடமாட்டார்கள். நீங்கள் கட்டாயம் தினம் இங்கு வருவதை நிறுத்தவேகூடாது. இதைத்தான் வேண்டிக்கொள்கிறேன்" என்று கெஞ்சினாள்.

183069

சோமுவுக்கு, அதைத் தள்ளமுடியாது தவிக்கும்போது கமலாவினிடத்தில் இரக்கமும் [illegible] அன்பும் பச்சாத்தாபமும் ஒருங்கேகூடி அவனையோர் தெய்வமாகத் தோற்றுவித்தது. "உத்தமி...பரிசுத்தவதி...அப்பழுக்கற்ற ஆரணங்கு, வைராக்கியப் பதுமை...தெய்வீகப் பிறவி...உலகத்திலேயே இது பரியந்தம்

யாரும் இம்மாதிரியோர் புனிதப் பிறவி பிறந்திருக்கவேமாட்டார்கள்'...என்றெல்லாம் அவன் இதயக் கடலில் அலைகள்போல் மோதி அதன்உணர்ச்சிவேகத்தில் கமலாவைத்தழுவிக்கொண்டான்.

அந்த ஆனந்த நிலையில் சற்று நேரம் தம்மை மறந்திருந்தார்கள். "கமலா! தன் கற்பை யழிக்கவந்த சண்டாள அரக்கனாகிய ராவணனையும் ஸ்ரீலோகமாதாவாகிய ஸீதாபிராட்டி, "என் கணவனின் காலில் விழுந்து சரணாகதி செய்தால் உன்னை மன்னிப்பார்" என்று கூறியதையும், தன்னிடம் மகத்தான அபசாரத்தைச் செய்த காகாஸுரனையும்ரக்ஷிக்கும்படித்தன் கணவனிடம்சிபார்சு செய்த ஆச்சரியத்தையும் இப்போது நினைப்பூட்டுகின்றது. அந்த இனத்தைச் சேர்ந்தவளாதலால் உன்னுடைய இதயம் பரிபூர்ணமான பக்குவமடைந்து வைராக்யக் குன்றாக பிரகாசிக்கின்றது. எனக்குப்பதிலே சொல்லத் தெரியவில்லை.

கமலா! எந்த ஒருஆண் மகனுக்கும், தன்மனைவிக்குத் த்ரோகம் நினைத்தவன் யாராயிருந்தாலும் அவனை உடனே இனம் பார்க்காமல் பழிதீர்ப்பதிலேயேதான் அவன் மனது செல்லும். அந்த வேகத்தில் கொலைகூட செய்யத் துணிந்துவிடுவான். பழியோரிடம் பண்டமோரிடம் என்றிருப்பினும் முதலில் மனத்திலுள்ள ஆத்திரத்தின் வேகத்தில் பழிவாங்குவதைத்தான் முதலில் நினைப்பான். பிறகு தான் அந்த செய்கையின் விபரீதத்தை அறிவான். கமலா! அந்த விதிக்கு நானும் இலக்கானவனேயன்றி தேவனல்ல. குருசாமியின் குடலைக் கிழித்துவிடலாமா என்றுகூட ஒரு கணப்பொழுது நினைத்துவிட்டேன். பிறகு உனது சாந்தத்தின் ஜோதியால் என் ஆத்திர இருள் சிறிது தணிந்தது....

என்று முடிப்பதற்குள் கமலா பேசத் தொடங்கி, "ஸ்வாமி! தாங்கள் சொல்வதெல்லாம் உலகத்திற்கு ஒத்ததேயாகும். நான் ஒன்றும் மறுக்கவில்லை. அண்ணாவின் எண்ணமாகிய மாறுதலே எனக்கு ஞானகுருவா யமைந்தது என்று நான் தாராளமாகக் கூறுவேன். அந்த ஒரு நெருக்கடியான நிலைமையில் என்னழகு குலைந்திராவிட்டால் எனக்கு எத்தனை விபத்துக்கள் நேர்ந்திருக்கும் என்பதை நீங்கள் சற்று நினைத்துப் பாருங்கள். 'எல்லாம் நல்லத்திற்கே' என்கிற தேவவாக்கை நான் கனவிலும் மறப்பதில்லை.

ஸ்வாமீ! என்னுடைய மதியீனத்தினால் என்னழகைக் கண்டு நானே கர்வங்கொண்ட நாட்களை நீங்களறியமாட்டீர்களா! அந்த கையழகிற்கு எஜமானராகிய நீங்களே மறைந்த பிறகும்எனக்குச் சத்ரு என்பதை யறியாது இருந்து ஒருதரம் சத்ருவால் குட்டுப் பட்டேன் (நடந்ததைக் கூறி)" என்று முடிப்பதற்குள், சோமு வியப்புக் கடலாடினான். "ஹா!....ஹா!...சத்ருவா அப்படி எழுதினான். சத்ருவின் கையிலா நீ சூடுபோட்டாய்...கமலா!...ஒவ்வொன்றையும் கேட்கக் கேட்க எனக்குண்டாகியவியப்பும் திகைப்பும் கூறவே முடியவில்லை. இந்த ரகஸியத்தை இதுபரியந்தம் சொல்

லாதிருந்தாயே!....கமலா!...உண்மையில் நீ மனிதவடிவத்திலுள்ள தேவதைதான்; கட்டாயம் நீ தேவதைதான்...கமலா! நீ தேவதை மட்டுமல்ல. உனக்குத் தீங்கிழைத்த மூடர்களின் இதயத்தில் ஞான தீபத்தை ஏற்றிவைத்த ஞானகுரு நீதான். "மனைவியைப் பெற்ற பெருமையை புத்திரபாக்யத்தின்போது ஒருவன் அடைவான்" என்று பெரியோர்கள் சொல்வதுண்டு. அப்போதுகூட நான் அடையவில்லை. அந்த ஆனந்தசுகத்தை இப்போதுதான் அடைகிறேன். கமலா! என்னிதயம் எப்படித்தான் பூரிக்கின்றது என்பதை விவரித்துச்சொல்ல வழி தெரியவில்லை. அக் காலத்தில் நளாயினி தேவி பெரியவியாதி பிடித்த பர்த்தாவுடன் இன்பமாக இல்லறம் நடத்திய புனிதமான சரிதையைப் படித்திருக்கிறேன். அந்தசரிதையின் சாரத்தை உன்மூலம் நேரில் கண்டும் களித்தும்விட்டேன். பழய கமலா எப்படித்தான் புனர்ஜென்மம் எடுத்தாளோ என்று வியப்பாக விருக்கிறது!"

என்று சோமு மூச்சுவிடாது பேசிக்கொண்டே வருகையில் ஜெயா அன்று சாயந்திரம் அடிபட்டிருந்த காயங்களின் வலி தாங்காது "அம்மா! வலிக்கிறதே....அம்மா!...கொஞ்சம்ஒத்தடம் கொடுக்கிறயா! தூக்கமே வரலயேம்மா...கையாலடிபட்ட எனக்கே இப்படி வலிக்கிறதே...ஐயோ! பாவம். அந்த பிச்சைக்காரனை கல்லாலடித்துவிட்டானே பாவி. அவனுக்கு எப்படித்தான் வலிக்குமோன்னு தோன்றதேம்மா...அம்மா....அப்போ பிடிச்சு நீ யாரோடெயோ பேசிண்டே இருக்கயே, யாரம்மா!...எனக்கு வலி தாங்கவே முடியலேயே" என்று அழுதாள்.

தன்னைப் பிச்சைக்காரனாக எண்ணி தன்மீது அனுதாபத்துடன் கூறும் உயர்ந்த குணத்தழகைக்கண்டு சோமுவின் உள்ளம் பூரித்தது. ஓடிப்போய் ஜெயாவை வாரியணைத்துக்கொண்டு "கண்மணீ! நான் பிச்சைக்காரனல்ல; உன் தகப்பனார்தான். உன் தாயாருடன் நான்தான் பேசிக்கொண்டிருக்கிறேன்" என்று சொல்லிவிடலாமாவென்று மனது துடிக்கிறது.

அடுத்த வினாடியே குழந்தையின் பிற்கால க்ஷேமத்தை உத்தேசித்து மௌனம் சாதித்தபடியே தன்னாசைகளை அடக்கிக் கொண்டாள். "கமலா! குழந்தையை முதலில் கவனி....நான்போய் நாளை, இன்று வந்ததுபோல் இதே நேரத்தில் வருகிறேன். போ... போ...குழந்தை இங்கு வந்துவிடப்போகிறது என்று கமலாவை ஊக்கிக் குழந்தையிடம் அனுப்பிவிட்டுத் தானும் மெல்ல வெளியே வந்துவிட்டான். கமலாவுக்கு, "ஜெயாவின் தூக்கம் ஏன் கலைந்தது? அவள் தூக்கம் கலைந்ததனால்தானே எங்களுடைய ஆனந்தமும் கலைந்தது" என்று சற்று கோபமே உண்டாகியது.

## பழம்பெருச்சாளிகளின் வெட்டவெளிச்சம்

துஷ்டனாகிய கம்ஸனுக்கு எந்த பக்கம் நோக்கினும் ஸ்ரீகிருஷ்ணனுடைய உருவம் தோன்றி அவனை வதைத்ததுபோல் இந்த சிஷ்யர்களுக்கு எந்த திக்கில் நோக்கினும் ச்வாமிகளின் ஆவி கண் முன்பு தோன்றி மடக்கி அடிப்பதுபோல் எண்ணமும் பயமும் உண்டாகியது. "ஸ்வாமிகளே! புத்தி! புத்தி. இத்தனை பேர்களும் ஸ்வாமியின் ஆவியா! இத்தனை உருவத்தில் ஸ்வாமிகள் தரிசனமளிக்கிறார! சற்று முன்பு பெண்பிள்ளையின் ரூபத்தில் வந்தவர் இப்போது இத்தனை உருவங்களில் எப்படி வந்துவிட்டாரோ தெரியவில்லையே" என்று ஒருவருக்கொருவர் பேசியும் பயந்தும் நடுங்குகிறார்கள்.

அதே சமயம் நாயுடுகாரு வெகுசம்பிரமான நடையுடன் உள்ளே வந்து, இந்தமாதிரி வேடிக்கை நடக்குமென்று அவருக்கு ஏற்கெனவே தெரியுமாதலால் இதைப் பார்த்ததும் கடகடவென்று பெரிதாகச் சிரித்தார்.

இந்த சிரிப்பின் பிரம்மாண்ட த்வனியைக் கேட்டு நடுநடுங்கிய சிஷ்யர்கள் அப்படியே அசைவற்று நின்றதோடு சாமியார் இப்போது இம்மாதிரி ஒரு உருவத்தில் வந்திருப்பதாக எண்ணி நாயுடுவின் காலில் விழுந்து "ச்வாமிகளே! எங்களை மன்னிக்கவேண்டும். நாங்கள் இதுவரையில் த்ரோகம் நினைத்ததே இல்லை. பணத்தைப் பார்த்த உடனே எங்கள் மனது கலங்கிவிட்டது. இத்தனை செல்வத்தையும் எப்படி செலவழிப்பது? இதற்காக சம்சாரிகளாகிவிடலாம் என்கிற ஆசை உண்டாகியது. அதுவும் நீங்கள் பணத்தைக் கொடுக்காதிருந்தால் நாங்கள் மாறியே இருக்கமாட்டோம். ச்வாமிகளே! இனிமேல் நீங்கள் எப்படிச் சொன்னால் அப்படிக் கேட்கிறோம்" என்று கத்தினார்கள்.

நாயுடுவுக்குச் சிரிப்பை அடக்கமுடியவில்லை. "சிஷ்யர்களே! என்னுடைய தங்க நாணயம் உங்களுடைய வாக்கு நாணயத்தைப் போக்கிவிட்டதா! பேஷ்! ஆதிகாலத்தில் இம் மடத்திற்கு உங்களை எப்படி அழைத்துவந்தேன் என்கிற ரகஸியத்தை மறந்துவிட்டீர்களா! நீங்கள் இங்கு வருவதற்குமுன்பு எந்த இடத்திலிருந்தீர்கள்?" என்று நாயுடு கூறி முடிக்குமுன் அத்தனை பேர்களும் கண்களைப் பொத்திக்கொண்டு "ஐயையோ!...ஐயையோ! அதை இப்போது ஞாபகப்படுத்தவேண்டாம். உடல் நடுங்குகிறது" என்று கத்தினார்கள்.

நாயுடுகாரு மீண்டும் சிரித்துக்கொண்டே "மிஸ்டர் மோகன்ராவ்! மோகன்ராவ்! கொஞ்சம் தயவுசெய்து வெளியே வாருங்கள். சாமியாரின் ஆவியாக நடித்ததுபோதும். அச்சுதா! நீயும் வெளியே

வா!" என்றார். உடனே இருவரும் கம்பீரமாக வந்து நின்றார்கள். "நாடகம் எப்படியிருந்தது. நான் சொல்லியது சரிதானா! இந்த உண்மையைக் கண்டுபிடிக்க இத்தனை வேஷங்களும் கூத்துக்களும் எதற்கு? நேரில் சென்று உடனே கைதியாக்கி விடக்கூடாதா என்று கேட்டீர்களே! மிஸ்டர் மோகன்! உங்களைத்தான் சொல்லுகிறேன். திடீரென்று போலீஸாருடன் வந்து கைது செய்வது வாய் லேசான சுலப காரியந்தான். ஆனால் பழய ரகஸியங்கள் வெளியாகாது போய்விடும். உங்கள் ஆஸ்பத்திரி ஆட்களின் மகிமை தெரியாது போய்விடும். பழம் பெருச்சாளியான ஜமீந்தாரைப் பிடித்திருக்கவே முடியாது. இப்படி மாய நாடகம் நடித்ததால்தான் அந்த மனிதன் வீராப்புடன் தானாக வந்து வலையில் விழுவதற்கு வெகு சுலபமான வழியாக அமைந்தது. அப்படிக்கில்லையெனில் அவன் தப்பித்துக் கொள்வதில் ஆக்ஷேபனையே இல்லை" என்றார்.

மோகன்ராயர் இந்த ஆட்களைப் பார்த்தவுடனே முதலிலேயே பிரமித்தார். தற்போது அது நிச்சயமாகியது. மோகனராயர் பயித்தியக்கார ஆஸ்பத்திரியில் டாக்டர் வேலைபார்க்கிறவர். அங்கு அனேக வருஷங்களுக்கு முன்பு இவர்கள் ஒரு கூட்டமாக சிகிச்சைக்கு வந்தார்கள். சுமாராகக் குணமடையும் காலத்தில் சாமியாராகவிருந்த ஆசாமிக்குப் பயித்தியம் பிடித்துவிட்டது. தங்க நாணயம் எடுக்கும் பயித்தியம் முற்றி அது மூளைக்கோளாறாகவே ஆகிவிட்டது. அவனுடைய அண்ணன் அவனை ஆஸ்பத்திரி சிகிச்சைக்குக் கொண்டு விட்டான். சுமார் ஒரு வருஷத்திற்குள் அவனுக்கு நன்றாக குணமாகியது. மேற் சொன்ன பத்துப்பேர்களுக்கும் முக்கால்குணமாகியிருந்தது. சாமியார் எப்போதுமே கோணபுத்தியிலும் குட்ற யுக்தியிலும் சிறந்தவன். அந்த பத்து பேர்களுக்குச் சரியானபடி தூபத்தைப் போட்டு அவர்களைச் சரிப்படுத்தி எப்படியோ ஆஸ்பத்திரியிலிருந்து தப்பித்துக்கொண்டு வெளியே ஓடிவிட்டான்.

அதன்பிறகுதான் இவர்களை உண்மை சிஷ்யர்களாகச் செய்துத் தானும் சாமியார் கோலம்பூண்டு ஊர் ஊராய்த் திரிந்து கடைசியில் இந்த மடத்தில் சாச்வதமாகத் தங்கும்படிச் செய்துகொண்டான். இந்த பத்து பேர்களும் தனக்கு அடிமைபோல் இருப்பதற்கு வசிய மந்திரம் செய்ததோடு 'இந்த ரகஸியம் வெளிவந்தால் பயித்தியக்கார ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிடுவேன்' என்று பயமுறுத்திவந்தான்.

அதே பயத்தில் அவர்கள் மட்டும் சாமியாரை பரிபூர்ணமாக நம்பவும், அடிமைபோல் கிடக்கவும் தலைப்பட்டார்கள். சம்சார இச்சையே இல்லாது போய்விட இச்சாமியார் கொடுத்த பச்சிலை உடம்பி[illegible]பதில் வெறும் சாமியார் தாசனாகிவிட்டதால் இவர்களை[illegible] சாமியார் சட்டபுடல் செய்ய வாரம்பித்தான்.

என்னிடம் ஸ்ரீமதி ரமாதேவியும் கமலாவும் வந்து விஷயத்தைச் சொல்லுகிறவரையிலும் நான் இந்த கூட்டத்தைப்பற்றி அறியவே மாட்டேன். அதற்குப்பிறகுதான் அவர்களைக் கவனிக்கத்தொடங்கி

னேன். துப்பறியும் வேலையில் எத்தனைவிதமான கஷ்டங்கள், ஜால வித்தைகள், நாடகங்கள் இருக்கின்றன என்பதை உங்களுக்குக் காட்டுவதற்குத்தான் இந்த நாடகத்தை ஆரம்பித்தேன். இதற்குமுன் நான் பலவிதமான வேஷங்களில் வந்து செய்த ஆராய்ச்சியால் மேற் குறித்த விஷயங்களை சாமியாரின் பெட்டிக்குள்ளிருந்த சில குறிப்புகளால் கண்டுபிடித்தேன். சாதாரண மனிதராகவிருந்தால் இம்மாதிரி சிலந்திக்கூட்டு எழுத்தை நம்புவார்களா! பயித்தியக்கார மனிதர்கள், வசியத்திற்குக்கட்டுப்பட்ட முட்டாள்கள் என்பதை உங்களுக்குக் காட்டுவதற்கும் தாசியையும் ஜமீந்தாரையும்கூட இதில் சுலபமாக இழுப்பதற்கும் நான் இந்த நாடகத்தை நடித்துக் காட்டினேன்.

சுமார் இரண்டு மாதகாலமாக இங்குள்ள சமயல்காரனை ஒருவிதமாகக் கைக்குள் போட்டுக்கொண்டு அவர்கள் ஆகாரத்திலேயேஉங்களிடம் வாங்கிய மருந்தைச் சேர்த்துக்கொடுத்ததில் அவர்களுக்கும் சம்சாரத்தில் ஆசை உண்டாகும்படிச் செய்து பணத்தின் ஆசையையும் கூடக் காட்டி மனித சுபாவம் எத்தகையது பாருங்கள் என்று நிரூபித்தேன். பிறகு நடந்ததைத்தான் நீங்கள் பார்த்திருக்கிறீர்கள்'' என்றுநாயுடு மூச்சுவிடாது சொல்வதைக்கேட்டமோகனராயருக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. அந்த முட்டாள்கள் பத்துபேரும் தன்னிடம் வைத்தியம் செய்துகொண்ட மனிதர்கள் என்று திட்டமாகத் தெரிந்துவிட்டது. அவர் நாயுடுவின் கைகளைப் பிடித்துக்கொண்டு "நாயுடுகாரு! இந்த விநோதமெல்லாம் பார்க்கப் பார்க்க எனக்கு ஆச்சரியம் தாங்கமுடியவில்லை. இவர்கள் என்னிடம் இருந்த மனிதர்கள் என்பதை திட்டமாயறிகிறேன். அதிருக்கட்டும். சாமியார் இறந்து அனேக காலமாகிய பிறகு நீர் அவரைப்போல் வந்து நடிக்கவும் இவர்களை ருஜுப்படுத்தவும் ஜெமீந்தாரரைக் கைதியாக்கவும் என்ன சம்பந்தம்? கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட தம்பதிகளை என்னவோ தூக்கு தண்டனைக்குள்ளாக்கிவிட்டார்கள். அதற்கென்ன விமோசனம்!'' என்றார்.

நாயுடு:—அந்த சம்பந்தத்தைத் தெரிவிக்கத்தான் இத்தனை பாடு பட்டது. ஒரு தானியத்தை அடையவேண்டுமானால் நிலத்தை செப்பனிட்டு எவ்வளவு பாடுபடவேண்டியிருக்கிறது? அதற்கு எத்தனைவித உதவிகள் தேவை இருக்கிறது. அதேபோலத்தான் இதுவும் சாமியார் கொலை செய்யப்பட்டதென்னவோ உண்மை. ஆனால் இப்போது தீர்ப்பு செய்திருப்பதுபோல்குட்டியும் அவன் மனைவியும் கொல்லவில்லை. சாமியாரைக் கொலை செய்தது அந்த ஜமீந்தாரும் அங்கமுத்துவுந்தான்.

இதைக் கேட்ட எல்லோரும் "ஹா...ஜமீந்தாரா!... அங்கமுத்துவா!''....என்று வியந்து கூறினர்கள். மீண்டும் நாயுடு பேசத் தொடங்கி, "ஆம்; அவ்விருவருந்தான். சாமியார் மடத்தில் தாசி அதிரூபம் கைங்கரியம் செய்வதாக மட்டும் ஜமீந்தார் எண்ணியிருந்தார். சாமியாருக்கும் அதிரூபத்திற்கும் இருந்த ரகஸியத்தை முத

வில் அறியவில்லை. அறிந்தபின்னர் சாமியாரை ஒழித்துவிட்டால் அதிரூபம் தனக்கே சொந்தமாகிவிடுவாள் என்றும் அதோடு மடத்திலுள்ள உயர்ந்த பொருள்களையும் கவர்ந்துவிடலாம் என்றும் ஆசைப்பட்டு அங்கமுத்துவுக்கு ஆயிரம் ரூபாய் பணத்தைக் கொடுத்து சாமியாருக்குக் கொடுக்கும் பாலில் விஷத்தைக்கலந்து தாசியின் கையினாலேயே குடிக்கச் செய்திருக்கிறான்.

கிரகசாரம் போதாமல் அதே சமயம் குட்டி ஆத்திரப்பட்டு எறிந்த கல்லும் சாமியார்மீது லேசாகப்பட்டது. அதனால் மரணமே இல்லை. சிறிது காயத்தோடு நின்றுவிடும். விஷம் உடனே கொன்றுவிட்டது. சாமியாரின் மடத்திலிருந்த இன்னும் சிலர் குட்டிமீது த்வேஷங்கொண்டவர்களாதலால் அவர்கள் சேர்ந்து இந்த மூடர்களை கைக்குள் போட்டுக்கொண்டு கொலைக் கேஸ் ஜோடித்தார்கள்.

புதைத்துள்ள சாமியாரை கேஸ் வந்தவுடன் தோண்டிப் பரீஷை செய்த டாக்டருக்கு ஜெமீந்தார் 1000 ரூபாய் இனும் கொடுத்து கொலை என்று சாக்ஷி கூறச் செய்தார். அந்த டாக்டரையும் இப்போது கைது செய்திருக்கிறேன். விஷம் கொடுத்து உதவியவரையும் பிடித்துவிட்டேன். மூலப் பொருளாகிய ஜமீந்தாரையும் பிடித்தாகிவிட்டது. சர்க்காருக்கு நான் ப்ரத்யேக மனு போட்டு கொலைக்குற்றவாளிகளாக தண்டிக்கப்பட்டவர்களை தூக்கிவிடாது தவணைவாங்கியிருக்கிறேன். இப்போது விஷயம் புரிந்ததா!

அதே ஜமீந்தார் தன் மூத்த மனைவி ஒரு சமயம் தன் குற்றத்தை ஒன்றுகண்டுபிடித்துவிட்டதற்காக விஷம்வைத்துக்கொன்றுவிட்ட ரகஸியமும் இப்போது வெளியாகிவிட்டது. அந்த விஷந்தான் சாமியாருக்கும் கொடுத்தது. இந்த இரண்டுக்கும் உளவு அங்கமுத்துவேதான். அதையும் கண்டுபிடித்தாயிற்று. இனி எந்த சந்தேகமிருக்கிறதோ, அதைக் கேளுங்கள் சொல்கிறேன் என்றார்.

இதற்குள் போலீஸ் அதிகாரிகளும் அங்குவந்து சேர்ந்தார்கள். அவர்களுக்கும் ஆதியோடந்தமாக நாயுடு எடுத்துச் சொன்னார். கூறத்திறமற்ற பிரமிப்புண்டாகிய அதிகாரி "என் சார்! இதற்கெல்லாம் உளவு ஆசாமி யாரைக்கண்டுபிடித்தீர்கள்" என்று கேட்டார்.

நாயுடு:—அதில்லாமல் காரியம் நடக்குமா! முதல்முதல் ஜோஸியம் சொல்லும் வெறும் பைராகி வேஷத்தில் அங்கமுத்துவையும் தாசியையும் தனித் தனியே பார்த்தேன். தாசி சாமியாரைத் தன் கையால் கொலைசெய்ததை இன்னும் அறியவில்லையென்பதைத் தெரிந்துகொண்டேன். பிறகு அங்கமுத்து ஹ...தியிலேயே என்னிடம் பேசினாள். அவளுக்கு கொலைப்பாதக தோஷமிருப்பதாயும் பரிகாரம் செய்தால் தப்பலாம் என்றும் கூறி சில வேர்கள், மந்திரித்த எலுமிச்சம்பழம் ஏதேதோ கொடுத்தேன். பலவித வேஷங்களில் வந்து அவள் மூலமாகவே ரகஸியத்தை அறிந்துகொண்டு மேலே காரியத்தைச் செய்தேன். விஷம் கொடுத்த டாக்டரையும் அங்கமுத்துவால்தான் அறிந்தேன். இத்தனையும் வெளியாகியபிறகு திடீ

றென்று ஜமீந்தாரைக் கைதியாக்கினல் காரியங்கள் கெட்டுவிடும். அவன் கொன்ற மனிதனே ஆவியாக வந்து தடபுடல் செய்கிறது என்று காட்டினல் அவனுக்கு பயம், ஆத்திரம், பீதி எல்லாம் உண்டாகும். தானே போலீஸாரை வரவழைக்கும் நிலைமை வரையில் கொண்டுவந்து விட்டால் எலிப் பொறியில் விழுவதுபோல் விழுந்து விடும் என்றுதான் இம்மாதிரி ஜோடித்தேன். இத்தகைய நாடகம் நடித்ததற்கு இன்னொரு காரணமும் உண்டு. எனக்கு வயது அதிகமாகிவிட்டதால் நான் முன்போல் வேலைக்கு ஒப்புக் கொள்வதில்லை. என்னுடைய சகாக்கள் எப்போது இம்மாதிரி ஒன்று அகப்படும் என்று காத்திருக்கிருர்கள். அதோடு அச்சுதன் இந்த உத்யோகத்தில் மிகவும் ஆசையுள்ளவராக இருப்பதால் அவர் அறிந்துகொள்வதற்காக ஜமீந்தாரின் முன்பு பலபேர்களை பல வேஷத்தில் தயார் செய்து ஜமீந்தாரை ஏமாற்றி பொறி கலங்கச்செய்து உடனே பிடித்துவிட்டேன். எனக்குக்கீழ்க்களைகள் இத்துறையில் பிரஸித்தியடைவதற்காக நான் தள்ளாமையைக் கூட கவனிக்காது செய்துவருகிறேன். விவரங்கள் போதுமா! இதோ, இந்தக் குறிப்பு காகிதங்கள் சாமியார் பெட்டியில் கிடைத்தவைகள். இவைகள் ஜமீந்தாரிடம் கிடைத்தவைகள். ஜமீந்தாரின் சட்டைப் பையில் எப்போதுமுள்ள புலிசுடும் துப்பாக்கி இருப்பது வழக்கம் அது புலிசுடுவதற்காகமட்டுமில்லை. துர்ப்ரயோகஞ்செய்யவும் ஜமீன் குடிகளுக்கு அதைக் காட்டி மிரட்டி பயமுறுத்தவும் உபயோகப் படுவதால்அதையும்அபகரித்துவிட்டேன். இதோ துப்பாக்கி. தாசியின் கையால் பாலைக் கொடுத்தது உண்மையேயன்றி தாசிக்கு விஷமிருப்பது தெரியாது. அங்கமுத்து இரண்டிடத்திலும் சுரண்டும் குணமுடையவளாதலால் அவள் தாசியிடம் ரகஸியத்தை இன்றளவும் சொல்லியதில்லை என்பதும் உண்மை. ஆகையால் நிரபராதிகளான காமாக்ஷியையும் அவள் கணவனையும் விடுதலை செய்ய சர்க்கார் தயவு காட்டவேண்டும்'' என்ருர்.

இத்தனை சிக்கல்களையும் விடுவித்துக் கூறியதைக் கேட்டபிறகு யாருக்குத்தான் வியப்பும் பிரமிப்பும் உண்டாகாது? நாயுடுவின் மூச்சுத் திணரும்படி அவரை அச்சுதன் சேர்த்துக் கட்டிக்கொண்டு தன் சந்தோஷத்தைத் தெரிவித்தான். அரைப் பயித்திய சிஷ்யர்கள் விழிக்கிருர்கள் பாவம்! மறுபடியும் பைத்தியக்கார ஆஸ்பத்திரி தனக்குக் கிடைத்துவிடுமோ! என்று பயம் நடுங்கியதால் நாயுடுவின் காலில் விழுந்து "ஐயா! எங்களுக்கு ஏதோ தலை சுற்றுகிறது. ஒன்றுமே தெரியவில்லை. எங்களை மறுபடியும் பயித்தியக்கார ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிடாதீர்கள். நாங்கள் எங்காவது ஓடிப்போகிறோம். சாமியாரும் வேண்டாம். மடமும் வேண்டாம். எங்களைக் காப்பாற்றுங்கள்'' என்று கத்தினர்கள்.

அவர்களைப் பார்த்தால் நாயுடுவுக்குப் பரிதாபமாகவே இருந்தது. அவர்களைத் தேற்றி சமாதானப்படுத்திப் பின் ஜமீந்தார் வீட்டிற்கு

அழைத்துச் சென்று மடத்துப் பொருள்கள் அங்கிருப்பதை பொருக்கி எடுக்கச் சொல்ல, அதிகாரிகளின்முன்பே அவைகளை எடுத்துக்கொடுத்தார்கள். அதிகாரிகள் அங்கமுத்துவின் வாக்குமூலம் நேரில் பெற்று உண்மையை அறிந்து எல்லோரையும் கைதியாக்கிச் சென்றார்கள்.

ஜமீந்தாரைச் சேர்ந்தவர்களின் ஆச்சரியமும் விசனமும் கரை புரண்டது. உயர்ந்த ஜமீந்தார் வம்சத்தில் தோன்றிய மனிதன் பெரிய கொலைகாரன் என்று நிர்ணயமாகியதைக் கேட்க யார்தான் ஆச்சரியப்படாமலிருக்கமுடியும்? தாசியின் இதயம் அப்படியே இந்த அதிர்ச்சி தாங்காது நின்றே போய்விட்டது.

## 48

## கவலைக்குமுன்பு களிப்பும் கசப்பே!

தன் இன்பவள்ளல் எழுந்து சென்றதும் கமலாவுக்கு மிகவும் வருத்தமாகிவிட்டது. "மறுபடியும் நாளைக்கு வரவேண்டுமே" என்று பிரார்த்தனை செய்தபடியே குழந்தையைச் சமாதானம் செய்தாள். நீ இத்தனை நேரம் யாரிடம் பேசிக்கொண்டிருந்தாய் என்று மீண்டும் ஜயா கேட்டாள். முதலில் கமலா சற்று அசந்துபோனாள். மறுபடியும் குருசாமி வந்தது நினைவிருந்ததால் அதைச் சொல்லி சமாதானம் செய்தாள்.

மறுதினம் காலையில் குருசாமி சொல்லியபடியே வந்தான். ஜெயாவுக்கு அவனைக் கண்டதும் சந்தோஷம் தாங்கவில்லை. தனக்கு நாடகத்தில் வந்த பதக்கத்தைக் காட்டிச் சந்தோஷமடைந்தாள். குருசாமி கமலாவை ஊருக்கு எவ்வளவு அழைத்தும் அவள் வருவதற்கு மறுத்துவிட்டாள். "அண்ணா! டாக்டர் ரமாதேவி எனக்குப் பரிபூர்ணமான ஆதரவு கொடுத்து வருகிறார். அவருடைய துணையில் நான் கடவுளுக்குப் பொதுவாக இருக்கிறேன். எனது இதய பரிசுத்தத்தை ஆண்டவனறிவான். அது போதும். பொறாமை ஜனங்களின் வீண் வார்த்தையால் எனக்கு ஒருவிதமான பயமும் இல்லை. ஆதலால் கவலைப்படவேண்டாம். யார் யார் தலையில் பகவான் எப்படி எழுதியிருக்கிறானோ, அப்படித்தான் யாவும் நடக்கும். நான் ஒருவிதமான குறைவுமின்றி காலக்ஷேபம் செய்துவருகிறேன். அதுவே போதும்" என்றாள்.

குருசாமிக்கு அதற்குமேல் ஒன்றுமே பதில் சொல்லமுடியவில்லை. குழந்தைகளுடன் சற்று கொஞ்சினான்; விளையாடினான். கண்ணீர்விட்டான். "உம்... கமலா! ஒரே தாயின் வயிற்றில் 5

பேர்கள் பிறந்தோம். ஒருவன் மக்கள் மனிதர்களை உதறித் தள்ளி விட்டுப் போய்விட்டான். ஒருவன் மகாலக்ஷ்மி போன்ற உன்னையும் குழந்தைகளையும் விட்டுக் கெட்டலைந்துபாழாகிவிட்டான். நான்தான் மகத்தான பாதகத்தைச்செய்து பாபத்தைச் சுமக்கும் சுமைதாங்கி யாகக் கிடக்கிறேன். ஒரு பெண் கொலைகாரி என்று பட்டந் தாங்கி தூக்குமரத்தில் தொங்கப்போகிருள். ஒரு பெண் பணப் பேராசை பிடித்து எல்லோரையும் துறந்து அலைகிருள். போதுமா நாங்கள் பிறந்த பிறவியின் அலங்கோலம்?'' என்று கண்ணீர்விட்டான்.

கமலாவுக்கும் துக்கம் தாங்கமுடியவில்லை. காமுவுக்குத் தூக்கு தண்டனை ஆகிய விவரம் தெரியாதாகையால் துள்ளினுள். "ஐயோ! காமுவுக்கு தண்டனையா ஆகிவிட்டது! என்ன செய்வது? இதற்கு நிவர்த்தி மார்க்கமே இல்லையா!" என்று கண்ணீர்விட்டாள்.

குரு:—உம்....நிவர்த்தியாவது பிரவர்த்தியாவது, வெளியில் சொன்னல் வெட்கக்கேடு. எனது மூத்த அண்ணன் வடநாட்டவன் போலவே ஆகிவிட்டானும். அவனேதான் காமுவையும் அவள் கணவனையும் வேண்டுமென்று பிடித்துக்கொடுத்தானும். தனது சகோதரி என்று எங்கே தெரிந்துவிடப்போகிறதோ, அதனல் தனக்கு எங்கே அவமானம் வந்துவிடுமோவென்ற கெட்ட எண் ணத்தினல் கைதியாக்கி அனுப்பிவிட்டானும்.

இந்த ரகஸியத்தை அறிந்தபிறகு அவனிடம் போவதற்கும் மனம் பிடிக்காது சும்மா இருந்துவிட்டேன். எனக்கு எதை நினைத் தாலும் வெறுப்பும் விசனமும் தாங்கவில்லை. மகா உத்தமியான உன்மீது வீண் அபவாதம் சொல்வதைமட்டும் கேட்கச் சகியாது உன்னை அழைக்கவந்தேன். சரி. நான் போகிறேன். இனி எப் போது பிராப்தமோ, பார்க்கலாம்'' என்று கூறிவிட்டுப்போனுன்.

கமலாவுக்கு எத்தனை துன்பந்தான் தாங்கமுடியும்? தான் ரமா தேவிக்கு அடிக்கடி தொந்தரவு கொடுப்பதென்றாலும் சரியல்ல. என்ன செய்வது? காமுவை கடைசீதரமாகப் போய்ப் பார்த்து விட்டு வரவேண்டுமென்று ஆவல் அடித்துக்கொண்டது. அன்று தன் கணவன் சொல்லியபடியே வருவானுவென்று சமயத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள்.

சோமுவும் சொன்னபடியே தோட்டத்து ஜன்னலருகில் வந்து கமலா என்று கூப்பிட்டான். கமலா சந்தோஷத்துடன் ஓட்டமாக ஓடி அவனைமுன் நாளேயப்போலவே அழைத்துவந்து ஸ்நானஞ்செய்து வைத்து ஆகாரம்கொடுத்து மகிழ்ந்தாள். திருட்டுத்தனமாகவாவது தனக்குக்கிடைக்கும் இந்த ஆனந்தத்தை கடவுள் என்றும் கொடுக்க வேண்டுமென்று இதயம் பரிபூர்ணமாக வேண்டியது.

தன் கணவனுக்குள்ள அத்தனைக் கவலையிலும் ஒரு சிறிது சந் தோஷமாகவிருக்கும்போது காமுவின் விஷயத்தைக் கூறினல் அவர் சந்தோஷத்திற்கு ஹானி உண்டாகிவிடுமே! என்ன செய்வது, என்று தோன்றியது. அதேபோல் காமுவின் விஷயம் சோமுவுக்கும்

தெரியும். அதை எப்படிக் கூறுவது, என்று அவனும் சிறிது தயங்கினன். "எப்படி சொல்வது"என்கிற எண்ணத்திலேயே இருவரும் அன்று பொழுதையோட்டிவிட்டார்கள்.

"சீச்சீ!...என்றைக்கும் தெரியவேண்டிய விஷயத்தைச் சொல்லாமலேயே இருந்தால் திடீரென்று காமுவைத் தூக்கிலிட்டுவிட்டால் என்ன செய்வது. பிறகு பார்க்கவேமுடியாது போய்விடுமே" என்று கமலா மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு மறுதினம் சோமு வந்தபோது விஷயத்தைக் கூறினள்.

அதற்குப் பிறகுதான் பரஸ்பரம் இதே எண்ணத்தில் தயங்கியதை அறிந்து வியப்புற்றார்கள். "கமலா!...நான் பத்து தினங்களுக்குமுன்புகூட நாயுடுவின் வீட்டிற்கே நேரில் போய் பார்த்தேன். அவர் தமது கோஷ்டியுடன் இதே கேஸ் விஷயமாக மும்முரமாய் வேலை செய்வதாயும் நாயுடுவுக்கே ஜெயம் வருமென்றும் அவருடைய வேலைக்காரன்மூலம் அறிந்துகொண்டேன். நீ இப்போது போவதால் லாபமில்லை. ஒண்டியாக ஒரு பெண்பிள்ளை சென்று கொலைக்குற்றத்தாரைப் பார்ப்பதென்றால் ஒன்றுமே முடியாது. அதிகார வர்க்கத்தின் அட்டகாஸம் பலமாகவிருக்கும் ஆதலால் நான் மறுபடியும் போய் நாயுடுவின் ஆளிடம் தகவலை விசாரித்து வருகிறேன். கவலைப்படாதே. எனக்கும் இதே வேதனையாயிருக்கிறது. நான் கூடப்பிறந்தும் ஒரு தூசிக்கும் உதவாக் கட்டையாகிவிட்டேன். நாளையதினம் நான் வரமாட்டேன். நீ பயந்துவிடாதே" என்று சமாதானப்படுத்தினன்.

வழக்கம்போல் விடியற்காலை கமலாவிடம் பிரிய மனமின்றிப் பிரிந்து சென்றான். கமலாவும் முக்கியமான விஷயமாகையால் ஒப்புக்கொண்டு அனுப்பினள். இரண்டு நாட்களில் வருவதாகச் சொல்லிச் சென்றதால் சமாதானமாகவிருந்தாள்.

இரண்டு நாட்கள் இரண்டு வினாடியில் பறந்துபோய்விட்டன. மூன்றாவது நாள் வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டு ஜன்னலருகிலே நின்றாள். அன்று வராததால் "சென்ற காரியம் ஆகவில்லையோ!"என்று எண்ணிதன்னைத்தானே சமாதானம்செய்துகொண்டாள்.அடுத்த இரண்டு தினங்களும் கடந்துவிட்டன. பிறகு கமலாவின் பொறுமை இழந்துவிட்டது. "ஏன் இன்னும் வரவில்லையோ, தெரியவில்லையே!" என்கிற கவலை அதிகமாகிவிட்டதால் அதே ஏக்கமும் மனச்சோர்வும் உண்டாகியது. இவள் வேதனைக்கு ஏற்றபடி தகவலும் கிடைக்காது, நாட்களும் கழிந்துகொண்டேபோகின்றன.

"கண்ணிலான் பெற்றிழந்தான்" என்பதுபோல, பிறவிக் குருடனுக்குக் கண்கள் வந்ததுபோல் வந்து, மீண்டும் மறைந்துவிட்டால் எப்படியோ அப்படியாகிவிட்டது கமலாவின் நிலைமை. அவளுக்கு விவரம் தெரியாததால் குழம்பித் துடிக்கிறாள். ரமாதேவியின் உதவியால் நாயுடுவின் வீட்டில் விசாரிக்கையில் அங்கு சோமு வந்ததா

கவும் தெரியவில்லை. அதோடு நாயுடுகாரு ஊரிலேயே இல்லை. அவரைப்பற்றிய தகவலும் தெரியவில்லைஎன்ற செய்திதான் கிடைத்தது.

என்ன செய்வாள் பாவம்! எப்படியோ நாட்கள்மட்டும் ஒரு மாதத்திற்குமேல் ஓடிவிட்டன.

ஒரு தினம் ரமாதேவி பத்திரிகை யொன்றைக் கொண்டுவந்து கமலாவிடம் காட்டி "கமலா! உன் முயற்சி வீணாகவில்லை. பலனளித்துவிட்டது. நாயுடுகாரு நம்மிடம் சொல்லியபோது "இந்த வழக்கில் ஒன்றுமே இல்லையே!" என்று கூறி நம்மை இடுப்பை ஒடித்துவிட்டார். ஆனால், இதே வழக்கில் அவர் அபாரமான வெற்றி பெற்றிருக்கிறாராம். காமுவையும் அவள் கணவனையும் விடுதலை செய்துவிட்டார்களாம். நாயுடுவின் திறமை பூராவும் இதில் வர்ணித்திருக்கிறது. இதை நீயே படித்துப் பாரு. இத்தனை பெருமையாயும் திறமையாயும் வேலை செய்துள்ள நாயுடுவுக்கு நேரில்போய் வந்தனஞ் செய்யவேண்டும். கமலா! நாளையே போகலாம். தயாராக இரு. எனக்கு அர்ஜண்டு கேஸ் இருக்கிறது. நான் போய்வருகிறேன்" என்று கூறிச்சென்றாள்.

மகத்தான சந்தோஷ சமாச்சாரத்தைக் காதில் கேட்கும் கமலாவின் மனது சாந்தியடையவில்லை. இத்தகைய நல்ல விஷயத்தைக் கேட்டுக்கொண்டு வரச் சென்ற மனிதர் எப்படி இத்தனை நாட்கள் வராதிருக்கமுடியும்? அவருக்கு என்ன ஆபத்து வந்துவிட்டதோ, தெரியவில்லையே! என் மனது கலங்கித் தவிக்கின்றதே என்கிற கவலை அவளைக் கப்பிக்கொண்டது.

சோமு இங்கு ரகஸியமாக வருவது போவது ஒன்றும் ரமாவுக்குத் தெரியாதாகையால் அதைச் சொல்லவும் அச்சப்பட்டுப் பேசாதிருந்துவிட்டாள். இப்போது தன் கணவன் விஷயத்தை எப்படி யறிவது என்கிற ஏக்கத்தில் ரமாதேவிக்குப் பதில் சொல்லக்கூடத் தோன்றாதுபோயிற்று. குழம்பிய மனத்துடன் அப்படியே இடிந்து போனாள். அவள் வயிற்றில் செய்யும் சங்கடத்தை யார் அறியமுடியும்? பகவானுக்கே அர்ப்பணமாகியது.

## 49

### இழந்த புதையலைக் கண்டெடுத்த இன்பம்

மாலை நேரம் சிலுசிலுப்பான காற்று வீசுகிறது. குழந்தைகள் சிலர் ஒன்றாகக் கூடி தோட்டத்தில் ஓடி விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். குழந்தைகளின் ஆனந்தத்திற்கு முன்பு அவர்களின் கண்ணுக்கு எதுதான் தெரியும்? தன் கணவனின் செய்தி இன்னும் ஒன்றும் தெரியவில்லையே! என்கிற ஏக்கத்தினால் ஏங்கித் துவண்டுபோன கமலாவுக்கு உலகத்தில் ஒன்றுமே கண்ணுக்குத் தெரியாது, எல்லாம் அந்தகாரமாகத் தோன்றியது.

எந்த நேரமும் வெட்டவெளியை நோக்கிப் பெருமூச் செறிவதும், பகவானை வணங்குவதும், எண்ணுததும் எண்ணி ஏங்கிக் கண்ணீர் விடுவதுமான நிலையில் குழந்தைகளைக் கவனிப்பதைக்கூட மறந்துபோனுள். காமுவை விடுதலை செய்துவிட்ட க்ஷாத்திரத்தினல் அவளுக்கு விரோதிகளாயிருந்தவர்கள் இவனைக் கொன்றுவிட்டார்களோ! அவர்களால் ஏதாவது ஆபத்து உண்டாகிவிட்டதோ! என்று நினைக்கும்போது அவள் சரீரம் கபீரென்று பற்றி எரிவது போல் உணர்ச்சி உண்டாகி நெருப்பின்மீது புழுகெனத் துடித்தாள்.

காமுவும் அவள் கணவனும் விடுதலையாகியபிறகு நேரில் கமலாவின் வீட்டிற்கு வருவதற்காக எண்ணினுர்கள். சோமு காணுது போனதையும் கமலாவின் தனி வாழ்க்கையையும் கேள்விப்பட்டு மனமுடைந்துபோயிற்று. எனினும் கமலாதான் தம்முடைய விடுதலைக்காக நாயுடுவிடம் சொல்லி மகத்தான முயற்சி எடுத்துக்கொண்டாள் என்பதைத் தெரிந்ததும் கமலாவைப் பார்க்கவும் அவள் பிரியப்பட்டால் கூட இருக்கவும்கூட ஆசைப்பட்டுக்கொண்டு வரும்போது இவர்களைப் பார்க்கவேண்டுமென்கிற ஆவலால் சென்ற சோமு அங்கு சென்ருன்.

ஏற்கெனவே சோமு, தான் இன்னுன் என்று தெரியாதிருக்கும் பொருட்டு அடுத்த வீட்டு கோவிந்தன் என்று பொய் கூறி இருப்பதுபோலவே இப்போதும் கோவிந்தன் என்றே சொல்லிக்கொண்டு காமுவைக் கண்ணுரக் கண்டான். உங்களை பகவான் விடுதலை செய்ததுபற்றி மிக்க சந்தோஷப்படுகிறேன். நான் அன்று உங்களைப் பார்க்கும்போது மனது துடித்தது. உடனே உங்கள் கமலம்மாளிடம் சென்று விஷயத்தைக் கூறினேன். அவர்கள் தான் நாயுடுவிடம் மன்ருடிக்கொண்டார்கள். பகவானின் கருணையும் கைகூடியது" என்று சந்தோஷ மிகுதியினல் ஆனந்தக் கண்ணீர் பெருகியவாறு க்ஷேமம் விசாரித்தான்.

'உங்கள் கைச் செலவுக்கு வைத்துக்கொள்ளும்படியாக கமலம்மாள் கொடுக்கச்சொன்னுர்கள்' என்று 50ரூபாயைக்கொடுத்தான். காமுவுக்கு கமலாவிடம் உள்ள அன்பும் ஆர்வமும் சோமுவிடம் ஆத்திரமாக மாறியது. சோமுவிடமே சோமுவைப்பற்றித் தாறுமாருகத் திட்டினுள்.

இதைக் கேட்கக் கேட்க சோமுவின் நிலை தடுமாறிவிடும்போலாகிவிட்டது. உங்களை கமலா தன்னிடமே அழைத்துவரச் சொன்னுர்கள். இத்தனைகாலம் ஒவ்வொருவரும் பிரிந்திருந்து பட்ட துன்பம் போதுமாம். தான் பெண்பிள்ளையாதலால் தனியாக இத்தனை தூரம் வருவது சரியில்லை என்று என்னையே அழைத்து வரும்படியாகக் கூறினுர்கள். வடக்கே அனுதை நிலயத்திலுள்ள உங்கள் குழந்தைகளை அழைத்துக்கொண்டு வந்துவிடுங்கள்" என்ருன்

சோமுவின் அன்பும் ஆதரவும் காமுவின் மனத்தில் அவனிடம் அவளையறியாமலேயே அபாரமான ப்ரேமையை உண்டாக்கியது.

'அப்பா! கோவிந்தா! என் சோமுவுக்குப் பதிலாகக் கடவுள் உன்னை அனுப்பியிருக்கிறார் என்றே தோன்றுகிறது. நீ கமலாவைப் பார்த்து எங்கள் விஷயத்தில் இத்தனை சிரத்தை எடுத்துக்கொண்டு செய்த பேருபகாரத்திற்கு நாங்கள் என்னதான் கைம்மாறு செய்யப்போகிறோம்? உன்னுடைய நல்ல உத்தமமான குணத்திற்கும் இளகிய மனத்திற்கும் கடவுள் கருணை கூர்ந்து உன்னுடைய வியாதியைப் போக்கி ஆரோக்யத்தை அளிக்கவேண்டி பகவானை பிரார்த்திக்கின்றேன். என் சோமுவுக்கு இத்தகைய புத்திமாறுட்டம் வராதிருந்தால் அவன் எங்களுக்கு இத்தகைய பேராபத்தை வரவிட்டே இருக்கமாட்டான். அப்போதே அவன் எங்களை இக்கதிக்கு ஆளாக்கிய ஜமீந்தாரைப்பாம்படிப்பதுபோல் அடித்திருப்பான். உம். எல்லாம் வேளையின் கூற்று" என்று விசனித்தாள்.

தனக்கென்று செல்வதற்கு ஓர் இடம் இல்லாத அனாதைப் பறவைபோன்ற மனிதர்கள் எங்கு செல்வது என்ன செய்வது? என்று தெரியாமல் வெளியே வந்ததும் அவ்வூரைவிட்டு வேறொரு ஊருக்குச் சென்று அங்குள்ள ஒரு பாழும் சத்திரத்தில் இறங்கினார்கள்.

சோமுவுக்கு தான் கூடவிருந்தால் அவர்களுக்கு ஒருக்கால் வெறுப்பு உண்டாகுமோ, என்று அஞ்சிகையாயிருந்ததால் 'அம்மா! நான் போகிறேன்' என்றான். காமுவுக்கு இவன் தனது தமயன் என்று தெரியாமலிருந்தும் அவனிடம் அசங்கியமோ, வெறுப்போ ஒன்றும் தோன்றாததோடு அவன்கூடவே இருக்கவும் ஆசை உண்டாகியது. தானும் தன் கணவனும் மட்டும் தனியாக சத்திரத்திலிருக்கச் சற்று பயமாயிருந்ததால் 'கோவிந்தா! நீயும் எங்களுடன் இருப்பதில் நாங்கள் மிகவும் சந்தோஷப்படுகிறோம். வியாதிக்காக நீ கூசிக் கூசி நடப்பதாகத் தெரிகிறது. எதற்கும் நீ சற்றும் தியங்க வேண்டாம். வியாதி வருவதும் போவதும் பகவானின் செயல். நாம் செய்த கர்மாவின் பலன். நாங்கள் தனியாக இருக்க பயமாகவிருக்கிறது. எங்களுக்கு வேண்டிய மனிதர்கள் இருந்தும் அங்கெல்லாம் போவதற்கு எங்களுக்கு இஷ்டமில்லை.

என் சோதரியின் போதனையால் முதல் முதல் 5 ஆயிரம் ரூபாயுடன் அவள் பின்னால் சென்றதில்தான் என்தலைவிதியே மாறியது. பிறகு மூத்த அண்ணனே எங்களைப் பிடித்துக்கொடுத்து இக்கதிக்கு கொண்டுவந்தான். ஆசையால் நாங்கள் எந்த காட்டிலோ, மேட்டிலோ, எங்கள் காலத்தை ஒழிக்கவேண்டுமோ தெரியவில்லை. நீயும் கூடவே இருப்பதால் எங்களுக்கு ஒரு குறைவுமில்லை. அதோடு என் கணவருக்கு ஜுரமாகவிருக்கிறது. இச் சமயம் நீயும் எங்களைத் தனித்துவிட்டுச் செல்லாதே'' என்று கெஞ்சினாள்.

காமு என்றால் சோமுவுக்கு என்றுமே உயிராயிற்றே! அவளை இன்னிலைமையில் எப்படித்தான் விட்டுச் செல்வான்? குட்டிக்கும் அதிகமான ஜுரம் காய்வதால் இதே சத்திரத்தில் இரண்டொரு

நாள் தங்கிச் செல்வதென்று தீர்மானித்தான். குட்டிக்கு நாளைக்கு நாள் ஜுரம் அதிகமாகியதில் உள்ளூர சோமுவுக்குப் பயமே உண்டாகியது. கடவுளையெல்லாம் வேண்டிக்கொண்டு ஏதேதோ கை மருந்துகளைச் செய்துகொடுக்கச் செய்தான். ஆனால் சில தினங்களுக்குள்ளேயே குட்டிக்கு அம்மைத் தாயார், மகமாயி விளையாடுவதைக் கண்டார்கள். இது வெறும் பாழும் சத்திரமாகையால் எப்போதாவது வழிப்போக்கர்கள் தங்குவதுண்டு. மகமாயி விளையாடுகையில் ஒருவருமே வராது மிகவும் பரிசுத்தமாக இருக்கவேண்டுமாதலால் சோமு அந்த சத்திரத்து வீதியிலேயே காவல் புரிந்து யாரையும்விடாதபடி தடுத்ததோடு அம்மைத்தாயாரை பரிபூர்ணமான கிருபை செய்து காப்பாற்றும்படி வேண்டிக்கொண்டேயிருந்தான்.

அங்கு பக்கத்து வட்டாரத்திலிருந்த ஒரு வயது முதிர்ந்த கிழவியை, அனுபவசாலியை அழைத்துவந்து, காமுவுக்குத் துணை வைத்தான். சுமார் 10, 15 தினங்களில் குட்டிக்கு அம்மை நன்ருக சிரித்த முகத்துடன் பூரித்துப் பின் இறங்கிவிட்டது கண்டு, எல்லோரும் சந்தோஷப்பட்டார்கள்.

ஆனல் அதே மகமாயி சோமுவிடம் விளையாட வந்துவிட்டாள். சோமு அவன்தான் என்று காமாக்ஷிக்குத் தெரியாவிடினும் தனக்கு ஆபத்தில் சகலவிதத்திலும் உதவிய மனிதனுக்குத் தான் உபகாரம் செய்யவேண்டுவது மனித தர்மமல்லவா! அவனிடம் அளப்பரிய அன்புகொண்டு அவனுக்குச் சகலமும் தானே செய்துவந்தாள். கமலாவை வரவழைக்க அவனுக்கு இஷ்டமே இல்லை. வந்தால் ரகஸியம் வெளியாகிவிடுமே என்கிற பயத்தாலும் தன்னை இன்னிலையில் கமலா கண்டால் மிகவும் துக்கப்படுவாள்" என்கிற எண்ணத்தாலும் சொல்லாமலேயே இருந்துவிட்டான்.

மகமாயித் தாயிக்குச் செய்யவேண்டிய நைவேத்ய பிரார்த்தனை முதலியனயாவும் கிழவியைக்கொண்டு காமு செய்வித்து வெகு அக்கரையாகப் பார்த்துக்கொண்டு வரும்போது சோமுவுக்கு மனத்தில் ஒருமாதிரியான திகில் உண்டாகிவிட்டது. அம்மைத் தாயார் அவன்மீது அபாரமான முத்துக்களைச் சொரிந்து விளையாடுவதால் அவனுக்கு 'இனி நான் கமலாவைப் பார்ப்போமா!' என்கிற கவலை உண்டாகியதால் தன் ரகஸியத்தைக் காமுவிடம் சொல்லிவிடலாமா என்றும்தோன்றியது. இதேசந்தேகத்தில் அவன்குழம்பிப்போனன்.

சில சமயம் நினைவு தப்பியிருக்கும்போது அவனையறியாது அவன் 'கமலா!...ஜெயா!...ராஜு!' என்று வாய்ப் பிதற்றுவான். காமுவுக்கு இது மிகவும் சந்தேகமாகவிருந்தது. சோமுவைக் கேட்கவும் முடியவில்லை. சோமுவுக்குத் தனது நிலைமை மிகவும் அபாயகரமாகிவிடுமோ! என்கிற பயம்வந்து சூழ்ந்துகொண்ட வேகத்தில் அவனை யறியாது அவன் காமுவின் கைகளை கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, "காமு!...காமு!...இனி ஒளிக்கப்போவதில்லை.எனக்கு ஏதோ மிகுந்த பயமாகத் தோன்றுகிறது. அம்மைத் தாயாரை

வேண்டிக்கொள்ளு. நன்ருக வேண்டிக்கொண்டு கமலாவுக்கு மாங்கல்ய பிச்சையைக் கொடுத்து ரக்ஷிக்கும்படி பிரார்த்தனை செய். அம்மைத் தாயின் காலில் விழுந்து கமலாவுக்காக நீ கெஞ்சி பிச்சை கேளு...உன் சோமு வேறு யாருமில்லை. நான்தான்...கர்ம வியாதியின் கொடுமையால் அவமானமடைந்து என்னையே நான் மறைத்துக்கொண்டேன்...தாயே! மகமாயி! கமலாவுக்கு மங்களகரமான வாழ்க்கையைக் கொடு. கமலாவை அமங்கலமாகச் செய்யாதே! அவள் இதுகாறும் பட்ட துன்பம் போதும்.

காமூ! காமூ! ஏன் இப்படி விக்கி விக்கி அழுகிருய்? கமலா மகா உத்தமி. மகா பரிசுத்தவதி. அவளுடைய ஞான வைராக்யத்தின் ஜ்வாலையை உலகமே மெச்சும். அவளிடம் மகத்தான அபராதம் செய்தவர்களுக்கெல்லாம் அவள் ஞானகுருவாயிருந்து இதயத்திலிருந்த அழுக்கை, அந்தகாரத்தை, மாயையை நீக்கி பரிசுத்தமான ஞானதீபத்தை ஏற்றிய விந்தையை நீ அறிந்தால் ஆச்சரியப்படுவாய். அத்தகைய கற்பரசியின் சக்தியால் அவளுக்கு அம்மைத் தாயார் குறைவு செய்யமாட்டாள். அவளைக் கைவிடமாட்டாள். காப்பாற்றுவாள். மங்கல்ய பிச்சையைக் கொடுப்பாள். கொடுப்பாள். என் தாய், அம்மைத் தாயார் கொடுப்பாள்" என்று ஆவேசம் வந்தவனைப்போல் பேசியதைக் கேட்ட காமுவின் சரீரம் கிடுகிடென்று நடுங்குகிறது.

அவளால் இந்த ஆச்சரியத்தைத் தாங்கமுடியாது ஒருபுறம் சந்தோஷமும் ஒருபுறம் துக்கமும் சமமாகப் பொங்கி வழிகிறது. தன்னுயிருக்குயிரான சோமுவைப் பார்த்ததோடு அவனுக்குச் சரியான சமயத்தில், தானே பக்கத்திலிருந்து உதவிபுரிய சமயம் கிடைத்ததை எண்ணிப் பூரித்தாள்.

அண்ணு! மன்னிக்கு ஒரு குறைவும் வராது. பயப்படாதே. அம்மைத் தாயாரை நான் வேண்டிக்கொண்டே இருக்கிறேன். நீ கவலைப்படாதே. நீயும் மகமாயியை பிரார்த்தனை செய்தபடி இரு" என்று தேற்றினுள். தனது இதயக் கொந்தளிப்பை அப்படியே தெரிவித்தால் அவனுக்கு அதிர்ச்சி யதிகமாகும் என்பதை எண்ணி அப்படியே அடக்கிக்கொண்டாள். ஆனால் அவள் இதயத்தில் அலை மோதும் எண்ணங்களின் சிதறலை யாராலறியக்கூடும்? பகவானுக்கே, அம்மைத் தாயாருக்கே அர்ப்பணமாகியது.

57-வது மோகினி பிரசுரம்

**கலா நிலயம்**

துப்பறியும் நாவல்

"ஆத்மசக்தி" "கருணாலயம்" போல பல அழகிய கலர் படங்களுடன் கூடியது விலை ரூ. 1—4—0.

## கடிதமா! கடும்புயலா? கரைகாணா இன்பமா?

ராமாதேவி சொல்லிய பிரகாரம் கமலா, நாயுடு வீட்டிற்குப்போய் தனது வந்தனத்தைச் செலுத்திப் பின் தன் கணவன் தனக்குக்கொடுத்த பணத்தில் 200 ரூபாய் காணிக்கையாகச் சமர்ப்பித்துவந்தாள். இச்செய்கைகளெல்லாம் வெறும் பொம்மை நகர்வதுபோல் நகர்ந்து செய்தாளேயன்றி தன் கணவனின் நினைவே அவளை வதைத்தது. மாதம் ஒன்றாகி மேலும் ஆகிவிட்டது. கமலாவின் எண்ணங்கள் விபரீதமான நிலையில் புரண்டு ஓடுகின்றன. அதே ஏக்கத்தில் உட்கார்ந்திருக்கையில் ஒரு சுவாமியார் வெகு சாந்தமான முகத்தோடு அங்குவந்து வீதியில் உட்கார்ந்து 'பசிக்கு ஒரு கவளம் அன்னம்வேண்டும்' என்றார்.

கமலா பயபக்தியுடன் அவருக்கு வந்தனமளித்தாள். தீர்க்க சுமங்கலீ பவ!" என்று ஆசீர்வதித்தார். பிறகு ஸ்வாமிகளுக்கு அன்னம் பரிமாறினாள். அவள் மூளையே குழம்பிப்போயிருக்கும் வேகத்தில் "இந்தச் சாமியார் உண்மைச் சாமியாரா! போலீச் சாமியாரா!" என்றுகூட நினைக்கவில்லை. சாப்பாட்டைப் போட்ட பிறகு, அச் சாமியார் "அம்மா! கமலம்மாள் நீதானே!" என்றார். கமலாவுக்குத் தூக்கிவாரிப்போட்டது. "ஆமாம், ஸ்வாமி! தாங்கள் யார்?" என்று பயபக்தியுடன் கேட்டாள்.

அம்மணி! நான் நாடோடி. பகவானின் திருவருளைத் தேடிக் கொண்டு ஊர் ஊராக அலையும் சன்யாசி. இரண்டு தினங்களுக்கு முன்பு பாதிரி நகரத்திற்கு அடுத்த ஒரு பாழும் சத்திரத்தில் இளைப் பாறத் தங்கினேன். அங்கு சமீபத்தில் ஒரு சாமியார் கொலைக் கேஸுக்காகக் கைதியாகியிருந்து விடுதலை பெற்ற தம்பதிகளைக் கண்டேன். அந்தம்மாள் தங்களைப்போல் என்னை உபசரித்ததோடு இக் கடிதத்தைத் தங்களிடம் சேர்க்கச் சொன்னார்கள்" என்று கடிதத்தைக் கொடுத்துவிட்டுப் போய்விட்டார். கடிதம் என்றதும் பரபரப்புடன் கமலா அதைப் படிக்கவாரம்பித்தாள்.

"என் ஆருயிர் கமலாவுக்கு காமு எழுதுவது. க்ஷேமங்கள்.

நாம் ஒருவரை ஒருவர் இனி இந்த ஜென்மாவில் பார்க்கப் போவதே இல்லை என்று தீர்மானமாக நினைத்து மனத்தை முறியடித்துக்கொண்டேனெனினும் உன்னாலும் உன் கணவனாலுமே நாங்கள் விருத்திக்கு வந்ததுபோல் இன்று உங்களால் தான் நாங்கள் விடுதலையானோம் என்பதை என்னருமை சோமுவின் மூலமாகவே அறிந்தேன். தன்னை அன்னியன் என்றே சொல்லிக்கொண்டு எங்களுக்கு உதவிபுரிந்த என் ஆருயிர் அண்ணன் தற்சமயம் என்னிடம் இருக்கிறான். முதலில் என் கணவருக்கு மகமாயி விளையாடி இறங்

கினாள். தற்சமயம் சோமுவுக்கு மகமாயி அபாரமாக விளையாடிக்கொண்டிருக்கிறாள். நம் இந்துக்களின் முறைப்படி தற்சமயம் நீ இங்கு வரக்கூடாது. விஷயமறிந்தால் எங்கு வந்துவிடுவாயோ என்கிற பயத்தால் இதுகாறும் தெரிவிக்காதிருந்தேன். மகமாயியை நீ அங்கிருந்தே வேண்டிக்கொள். ஒரு பரமசாது, மகா உத்தம சன்யாசி ஒருவரை தரிசித்தேன். அவரிடமே இதை உனக்கனுப்புகிறேன். நீ அங்கிருந்தே மகமாயியை வேண்டிக்கொள்ளு. இங்கு வந்துவிடாதே. வந்தால் அதிகமாகிவிடுமாம். பயப்படாதே. நான் அருகிலிருந்தும் உனக்குத் தெரிவிக்கவில்லையென்று நீ குறை கூறுவாயே என்று இதை எழுதுகிறேன். அம்மைத் தாயாரை வேண்டிக்கொள்ளு பயப்படாதே. நற்காலம்பிறக்கும்நாமெல்லோரும்சந்திக்கலாம்.

இங்ஙனம்,

காமு.''

இதைப் படித்த கமலாவுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. ஆகாயமும் பூமியும் ஒன்ருகச் சுற்றுவதுபோல் தோன்றுகிறது. அருகிலிருந்த மாரியம்மன் கோயிலுக்கு ஓடினாள். பட்டினியாகவிருந்து பிரதக்ஷணம் செய்து நைவேத்யங்கள் செய்து வேண்டினாள். கண்ணீர்விட்டாள். "தாயே! மகமாயித்தாயே! என்னைக் கைவிடாதே. எனக்குக் குறைவுசெய்யாதே. பதிபிச்சைக்கொடு. மங்கல்ய பிச்சை கொடு. என்னை முதலில் உன் திருவடியில் சேர்த்துக்கொள்ளு'' என்று மனமுருகித் துதிக்கிறாள். கோயிலைவிட்டு வீட்டிற்கே வருவதில்லை. இரவும் பகலும் இதே பிரார்த்தனை செய்துகொண்டு வேண்டுகிறாள். தான் அங்கு ஓடிப்போய் விடலாமாவென்றும் துணிகிறாள். ஒருகால் அதனால் ஏதாவது அதிகமாகிவிட்டால் என்ன செய்வது? என்கிற பயத்தால் தத்தளிக்கிறாள். பின்னும் நான்கு நாட்கள் வரையில் ஒரு தகவலுமே தெரியவில்லையாகையால் கவலையும் திகிலும் அதிகமாயிற்று. "சோமுவின் நிலைமை மிகவும் மோசமாகவிருக்கிறது. அம்மைத் தாயை பரிபூர்ணமாக வேண்டிக்கொள்ளு. பிறகு எழுதுகிறேன்'' என்று மீண்டும் ஒரு கடிதம் தபாலில் வந்தது கண்டு, கமலாவின் உயிர் தானே பாதிக்குமேல் போய்விடும்போலாயிற்று. அம்மன் ஸன்னிதிக்கு ஓடினாள். "தாயே! மகமாயீ! உலகத்து நாயகியே!

தேடியுனைச் சரணடைந்தேன், தேச முத்து மாரி!
கேடதனை நீக்கிடுவாய், கேட்ட வரந் தருவாய்
பாடியுனைச் சரணடைந்தேன் பாச மெல்லாங் களைவாய்
கோடி நலஞ் செய்திடுவாய், குறைக ளெல்லாந் தீர்ப்பாய்.

என்ற பாரதி பாடலைப் பாடி துதித்துப்பலதரம் பிரதக்ஷணஞ்செய்து நமஸ்கரித்தாள். அவள் இதய வேகத்தின் ஓட்டத்தினால் ஆவேசம் கொண்டவளைப்போல் அம்மனை முறைத்து முறைத்துப் பார்த்துப் பல்லைக் கடிக்கிறாள். "தாயே! உன் செவிகளில் என் பிரார்த்தனை



விழவே இல்லையா! உன்னுடைய அழகிய முத்துக்களால் என் கணவனை அலங்கரித்து அழகு பார்த்துக் களித்ததோடு அவருடைய உயிரையுமா நீ பலி வாங்கப்போகிறாய்! ஏ மகமாயி! ஏ தாயே! லோகமாதா! நீ என் பிரார்த்தனைக்கு இரங்கி எனக்கு அபயம் தரவில்லையெனில் ஒரு உயிருடன்மட்டும் திருப்தியடையாதே.இந்தா இந்த உயிரையும் நீயே எடுத்துக்கொள். உன் திருவடிக்கே இதையும் முதல்முதல் அர்ப்பணம் செய்துவிடுகிறேன். ஏற்றுக்கொள்ளு. எனக்கு இவ்வுலக வாழ்க்கையைக் கொடுத்தாய். சாரமற்ற சக்கை வாழ்வானாலும் மங்களகரமாகக் கழியும்படிக்கு நடத்திச்சென்றாய். அதற்கும் நீ பங்கத்தை விளைவிப்பதாயின் இந்தா! நீ கொடுத்த இந்த உயிரை முதலில் நீயே எடுத்துக்கொள். எனக்கு என் உயிரைப் போக்க அதிகாரமில்லையென்பதை அறிவேன். இருப்பினும் பெற்ற தாயின் அன்பைக் காட்டி உன் மகளை நீயே ரக்ஷிக்காதபோது நானும் என்னுடைய வரம்புமீறி உன் பாதத்தடியிலேயேதற்கொலை செய்துகொள்கிறேன். ஏ மகமாயி! ஒரு உயிருக்குப் பதிலாக இரண்டு உயிர்களைப் பெற்று இன்பமடை. இந்தா! இந்தா!" என்று ஒரு கூரிய கத்தியால் தன்னைத் தானே குத்திக்கொள்ளப்போனாள். அச்சமயம் சகல லோகரக்ஷகியாகிய அம்மைத் தாயாரின் சிலை கட கடவென்று சிரிப்பதுபோலும், கமலாவைக் கருணை நிறைந்த கண்களுடன் பார்ப்பது போலும் ஒரு உணர்ச்சி திடீரென்று தோன்றியது. "தாயே!...மகமாயித் தாயே!" என்று இவள் தன்னிரையழிந்து கூறும்போது, "கமலா!...கமலா!" என்று பின்னலிருந்து ஒரு குரல் வெகு பதைபதைப்புடனும் அன்பு மயமாயும் வந்ததுகண்டு திடுக்கிட்டாள்.

"பயப்படாதே! உனக்கு மங்கல்ய பிச்சையும் இன்ப வாழ்க்கையும் கொடுத்தேன். நீ தீர்க்கஸுமங்கலியாக இருப்பாய். பயப்படாதே" என்று அம்மனின் திருவாய் மலர்ந்து அபயப் பிரதான வார்த்தைகள் சப்திப்பதுபோல் கமலாவின் இதயத்தில் தோன்றியது. அம்மனை அப்படியே கட்டிக்கொண்டு மெய்மறந்த சமயம் கமலா வென்று கூப்பிட்டுக்கொண்டு வந்த குரல் அருகில் வந்து, "கமலா! இதென்ன செய்கை!...சோமுவுக்கு அம்மை நன்றாக இறங்கி அம்மைத் தாயார் பூர்ண கடாக்ஷத்துடன் சென்றுவிட்டாளாம். இச் சந்தோஷச் செய்தியை காமு உன்னிடம் தெரிவிக்க என்னை அனுப்பினாள்" என்று கூறினான்.

அப்பாடா! அமிருதத்தை அப்படியே குடத்துடன் கொடுத்ததுபோல கமலாவின் இதயம் குளிர்ந்தது. வந்த மனிதன் யார் என்பதையும் பார்க்காது அவன் காலில் விழுந்து வணங்கினாள். அம்மனின் பிம்பத்தைப் பலதரம் வணங்கினாள். ஆனந்தபாஷ்பத்தைச் சொரிந்தாள். 'தாயே! நீயே கண்கண்ட தெய்வம். நீயே என் ரக்ஷகி. நீயே என் தாய்!' என்று பலவாறு தோத்திரம் செய்தபடியே சற்றுநேரம் தன்னை மறந்து அப்படியே மயங்கிக்கிடந்தாள்.உணர்ச்சி

மிகுதியால் அவளுக்கு ப்ரக்ஞையே சிலநிமிடங்கள் அடங்கியிருந்தது. அங்கு வந்துள்ள மனிதன் அம்மனின் தீர்த்தத்தைக் கமலாவின் முகத்தில் தெளித்தான். பிறகு கண் திறந்து உற்றுப் பார்த்தபோது தான், குருசாமி தன்னெதிரில் நிற்பதை யறிந்தாள்.'அண்ணா! நீங்கள் அவரைப் பார்த்தீர்களா ! நல்ல குணம் உண்டாகியதா ! எனக்கு இனி குறைவு ஒன்றுமில்லையே ! என் வயிற்றில் அம்மைத் தாயார் பாலை வார்த்தாளா!" என்று அடுக்கடுக்காகக் கேட்டாள்.

குரு:—கமலா ! மகமாயித் தாயே ! உன்னுடைய சீலத்திற்காக மெச்சி அவளுடைய பரிபூர்ண கருணையைசோமுவின்மீது சொரிந்து தனது அன்பாகிய பரம அவுஷதத்தால் அவனுக்கிருந்த துர்வியாதியைக்கூட நீக்கி பழய சோமுவாகச் செய்துவிட்ட பெருமையை நினைக்க நினைக்க உள்ளம் பூரிக்கின்றது. முத்துமாரியம்மாள் தனது முத்துக்களால் அலங்கரித்து விளையாடியதோடு உன் கற்புக்கிரங்கி அவனை ஆரோக்யவானுகச் செய்துவிட்டாள் என் தாயின் கருணையே ! கருணை...

என்று முடிப்பதற்குள்"என்ன!என்ன!....வியாதிகூட நீங்கிவிட்டதா!...நிஜமாகவா...என் ப்ராணகாந்தர் பழய நிலைமையில் இருக்கிறாரா!...நீங்கள் பார்த்தீர்களா !"என்று பதறப் பதறக் கேட்டாள்.

குரு:—ஆம். கமலா ! நான் கண்ணால் கண்டேன். கை விரல்கள் கால் விரல்கள் நன்றாக நீண்டு என் கைகளைப்போலாய்விட்டன. எந்த விதமான வியாதியின் கூறே இல்லை. மகமாயியின் விளையாட்டின் வடுவுதானிருக்கிறது. இந்த ஆச்சரியத்தை அன்று வந்த ஸ்வாமிகளே கண்டு வியந்தார். சோமுவின் பூரிப்பு சொல்லமுடியாது. என்றதும் கமலாவுக்கு ஆனந்தம்கரைபுரண்டது. அம்மனுக்கு குளிர இளநீரும் பாலும் அபிஷேகஞ்செய்து நிவேத்யங்கள் செய்து அன்று பெரிய திருவிழாவைப்போலவே கொண்டாடினாள். 'அண்ணா ! நான் இனி அங்கு வரலாமா ! நீங்கள் எப்படி அவரைப் பார்த்தீர்கள்' என்றாள்.

குரு:—அன்று வந்த ஸ்வாமியாரிடம் நான் தீக்ஷை பெறுவதற்காக அவரிடம் சில தினங்களாக இருக்கிறேன். அவருடன் நானும் அந்த சத்திரத்தில் தங்கினேன். அங்கு காமு முதலியவர்களையும் கண்டு சகலமான ரகஸியமும் அறிந்தேன். சோமுவுக்கு நானும் காமுவும்தான் சகலமும் செய்து வந்தோம். ஸ்வாமிகள் தகவலாக உன்னிடம் கடிதம் கொடுப்பார் என்கிற நம்பிக்கையால் அவரிடம் நான்தான் கடிதம் அனுப்பினேன். சோமு இப்போது பழய சோமுவாகவே இருக்கிறான். இன்னும் ஒருமாதம் எப்படியாவது ஓடிவிடும். அதுவரையில் நீ பார்க்காதிருந்தால் நலம் என்று கிழவி சொல்கிறாள். அதற்குப் பிறகு அவனையே இங்கு அழைத்து வந்துவிடுகிறேன். பயப்படாதே. நீ, தகவல் ஏதுவுமே தெரியவில்லையேயென்று என்ன செய்துகொண்டு விடுவாயோ என்கிற பயம் தோன்றிதான் நான் இப்போது ஓடிவந்தேன். சோமுவும் என்னைத்

துரத்தினன். இனி அவனுக்கொருவிதமான குறைவுமில்லை. இந்த ஒருமாதமும் நீ மெல்ல கழித்துவிடு. அம்மைத் தாயின் கிருபையால் ஆனந்தமாக ஒன்று சேரலாம். நான் போய்வருகிறேன் ஜாக்ரதையாக இரு. எனக்கு உத்திரவு கொடுக்கிறாயா!'' என்றான்.

கமலாவின் வாழ்க்கை அடியோடு இருண்டுவிட்டதென்று நினைத்திருந்தது மாறி ஆனந்தமான இன்பச் சூரியன் இனிது உதயமாகிவிட்டதைக்காண அவள் இதயம் பூரித்ததை அளவிட்டுக் கூறவேமுடியாது. குருசாமிக்கு தன் கையால் விருந்து செய்து பின்னர் விடைகொடுத்தாள். எப்போது ஒருமாதம் செல்லும் என்று நாட்களை எண்ணிக்கொண்டிருந்தாள். அவள் இதய வேகத்திற்குச் சரியாக நாட்கள் செல்லாததுகண்டு ஆத்திரமடைந்தாள். கமலாவின் தோற்றமே ஓர் புதிய ஜோதியுடன் பிரகாசித்தது.

## 51

### இருளுக்குப்பின்பு இன்பஜோதி

எப்படியோ சிரமப்பட்டு நாட்களைக் கடத்தியாகிவிட்டது. ஒரு மாதமென்பது மேலும் சில நாட்களாயின. சோமுவுடன் எல்லோரும் தன் வீட்டிற்கு வருவதாக ஒரு சுபச் செய்தி காமுவிடமிருந்து கிடைத்ததைக் கண்டு கமலா குதூகலித்தாள்.

ஜெயாவுக்குத் தன் தாயின் புதிய உத்ஸாகத்தின் காரணம் தெரியாது திகைத்தாள். கமலாவே ஜெயாவைக் கட்டியணைத்து "கண்ணா! உங்கப்பா நாளையதினம் வருகிறாராம். முன்போல் இனி நம்மைவிட்டுப் போகவேமாட்டாராம். கடிதம் வந்திருக்கிறது. இனி மற்ற பசங்களைப்போல் நீயும் உன் தகப்பனருடன் சந்தோஷமாக இருக்கலாம்" என்று கூறினள்.

குழந்தையின் தளிர்போன்ற இதயத்தில் தந்தையின் அன்பு ஊற்று சுறந்தது. "நிஜமாகவாம்மா! அப்பாவே கடிதம் எழுதியிருக்கிறார! இனி நம்மை இப்படிவிட்டுப் போகமாட்டாரே. அம்மா! அப்பாவை நாம் வரவேற்க ஸ்டேஷனுக்குப் போகலாமா! எனக்கு வந்த மெடலை நான் ஸ்டேஷனிலேயே அப்பாவுக்குக் காட்டப் போகிறேன்...அம்மா! நல்ல பாவாடை சொக்காய் இன்னிக்கே வாங்கித் தா! அதையே உடுத்திக்கொண்டு போகலாம்மா. அம்மா! அப்பா வந்ததும் நான் ஆடிய நாடகத்தை அவருக்கு நடித்துக்காட்டி எனக்குத் தெரிந்த பாட்டுக்களையெல்லாம் பாடி அப்பாவை சந்தோஷப்படுத்துவேன். எம்மா! அப்பா மட்டுமா வருவா! கூட ஒத்தரும் வரமாட்டாளா?" என்றாள்.

கமலா:—அப்பாவுடன் உங்க அத்தை, அத்திம்பேர், பெரியப்பா எல்லோரும் வரப்போகிறார்கள். இனிமேல் நாம் எல்லோரும் சேர்ந்து ஒன்றாகத்தான் இருக்கப் போகிறோம். உங்க அத்தை ரொம்ப நல்லவர், உன்னிடம் வெகு ஆசையாயிருப்பார். அவருடைய குழந்தைகளும் வருவார்கள். நீங்கள் சேர்ந்தாற்போல் விளையாடலாம்; சாப்பிடலாம்; பள்ளிக்கூடம் போகலாம்; எல்லாம் செய்யலாம்.

ஜெயா:—அம்மா! கேட்கும்போதே சந்தோஷமாயிருக்கும்மா! தினம் நான் பள்ளிக்கூடம் போய் வந்ததும் அப்பாவோடே பீச்சுக்கு போவேன். கோயிலுக்குப் போவேன். சினிமாவுக்குப் போவேன். இனுமே என்னை மற்ற பசங்கள் கேலியே பண்ண மாட்டா இல்லையா!...நான் இப்பவே போய் என் சினேகிதைகளிடம் சொல்லிவிட்டு வருகிறேன்—என்று கூறிக்கொண்டே ஓடினாள்.

கமலாவின் பூரிப்புக்கு ஒரு எல்லைவகுக்கவே முடியவில்லை. தன்னுடைய கணவன் பழய திவ்ய ஸௌந்தர வடிவத்தில் கண் முன்பு காக்ஷி கொடுப்பதுபோல் ஒரு சந்தோஷம் பொங்கியது. இந்த ஆனந்தச் செய்தியை தனக்கு மிகவும் உபகாரம் செய்த ரமா தேவியிடம் கூறினாள். அவளுடைய ஆதரவும் அன்பும்தான் தனக்கு மீண்டும் புதிய வாழ்க்கையை அளித்தது என்று கூறி மகிழ்ந்தாள்.

தானும் தன் கணவனும் ஆதியில் ஒரு தினம் வஸந்த உத்ஸவத்திற்குச் சென்றதும், தான் அங்கு நடந்துகொண்டதும் சரேலென்று நினைவுக்குவந்தது. அதே வஸந்த உத்ஸவ தினத்தில் தன் ஆருயிர் ஜீவனை ஆரோக்யத்துடன் காணப்போகிறோம் என்று நினைக்கும் போது அவள் உள்ளம் பூரித்துப் புலகிதமடைந்தது. குன்றிப்போன தனது அழகுகூட மறுபடியும் உயிர்பெற்று ஆயிரம் பங்கு சோபையை அடைந்ததாகத் தோன்றி பேரானந்தத்தை அளித்தது.

குழந்தையின் சுபாவத்தின்படி ஜயா தன்னுடைய சினேகிதைகளுக்கெல்லாம் 'எங்கப்பாவரப்போகிறார்; எங்கப்பாவரப்போகிறார்' என்று பறைசாற்றிப் பெருமையடைந்தாள். அதன் விருப்பப்படியே கமலா புதிய பாவாடை சொக்காய் தைத்துக்கொடுத்தாள்.

மறுதினம் அதிகாலையில், கையில் புஷ்பமாலையுடன் கமலா ரமாதேவி சகிதம் ரமாவின் காரிலேயே ஸ்டேஷனுக்குச்சென்றாள். வண்டி வரும் நேரத்திற்கு வெகு நேரம் முன்னதாகவே போய் விட்டதால் இன்னும் வண்டி வரவில்லையே என்று துடித்தது உள்ளம். குறித்த நேரத்தில் வண்டி வந்து நின்றது.

காமு கதவுக்குமுன்பு தலையை நீட்டிப் பார்த்துக்கொண்டே வந்ததால் கமலாவைப் பார்த்து "மன்னீ! மன்னீ! இதோ இருக்கிறோம் என்று தன் அன்பு பூராவையுங் காட்டிக் கூப்பிட்டாள். கமலா ஓடோடிச்சென்று கதவைத் திறந்து ரயிலுக்குள்ளேயே தாவிக் குதித்து ஏறித் தன் கையிலிருந்த மாலையை,—ப்ரமிக்கத்தக்க விதம் ஸ்வர்ண விக்ரகம்போல் ஸௌந்தர வடிவத்துடன் வீற்றிருக்கும்

தன் கணவனைக்கண்டு கட்டுக்கடங்காது பூரித்தபடியே, தனக்கு இப்போதுதான் புனர்ஜன்ம விவாகம் நடப்பதாக எண்ணி—கணவனின் கழுத்தில் போட்டு, அவன் இரு திருவடிகளிலும் மலர்களைத் தூவி காலைப்பிடித்துக்கொண்டு வணங்கி முகத்தை காலில் பதித்துக்கொண்டாள். அவள் இதயத்திலிருந்து பொங்கும் இன்ப அலைகள் மோதலின் வேகத்தில், அவளை அறியாமலேயே, "ஆனந்தம் பரமானந்தம், நித்யானந்தம், ஜீவானந்தம், ஆனந்தம் பிரமானந்தம்; நேத்ரானந்தம், ஹ்ருதயானந்தம்" என்கிற பாட்டு அவளுடைய வாயினின்றும் அபார இனிப்புடன் கிளம்பியது.

இந்த காக்ஷியைக் கண்ட ரமா தேவிக்கு ஆதியில் ஆஸ்பத்திரியில் தான் கண்ட காக்ஷியின் நினைவு தோன்றி அவள் கண்முன்பு தாண்டவமாடியதோடு அன்யோன்ய தம்பதிகளின் புனர்ஜென்ம வாழ்க்கையைக் கண்டு ஆனந்தக் கண்ணீர் பெருகியது. இதைக் கண்ட யாருடைய உள்ளந்தான் கரையாது?

அதே சமயம் ஜெயா, "அப்பா!...எங்களை இனிமே விட்டுட்டுப் போகமாட்டயே!" என்று தாவிக் குதித்துஅவனைக் கட்டிக்கொண்டாள். சோமுவின் ஆனந்தபாஷ்பம் கன்னத்தில் வழிந்து ஓடிச் சிதறியது. அந்த உணர்ச்சி உச்சத்தை எட்டியதால் பேசவே தெரியாது உணர்ச்சி பிம்பமாகமாறி, குழந்தைகளைச் சேர்த்துக் கட்டிக்கொண்டு பல முத்தங்களிட்டான். இந்த ஆனந்தத்தைப் பகிர்ந்துகொள்ள நாயுடுவும் வந்து சேர்ந்தார்.

இந்த காக்ஷியைக் காண்போரின் உள்ளம் அப்படியே பூரித்து ஆனந்தக்கண்ணீரைக் கக்கியது என்றால் இதைவிட கமலாவுக்கு நித்ய கல்யாண மங்கள வைபவ சுகம் வேறு என்ன இருக்கிறது? புத்துயிர் ஜோதியில் புனித வாழ்க்கை தொடங்கியது. மங்களம்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

"பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின்" —திருக்குறள்.

18369

ஞானதீபம்
முற்றிற்று.

'ஜகன்மோகினி' பிரஸ், வெங்கடாபுரம் (௯௭௪௨.)

**31—8—1942 வரையில்**

பல அன்பர்களது வேண்டுகோளின்படி

# "மோகினி" பிரசுரங்கள்

# குறைந்த விலைக்கு

## கொடுக்கப்படும்

## • விசேஷ சலுகை திட்டம் •

1. "மோகினி" பிரசுரங்கள் எல்லாவற்றையும் ஒரே சமயத்தில்—முழு செட்டாக—வாங்குபவர்களுக்கு 40% தள்ளி தரப்படும். உங்களது ரயில்வே ஸ்டேஷனுக்கு எங்கள் செலவில் ரயில்வே பார்ஸல் மூலம் (தபாலில் அல்ல) அனுப்பப்படும். **40%**

2. "மோகினி" பிரசுரங்களில் ஏற்கெனவே சில வற்றை வாங்கியுள்ளவர்களுக்கு, மற்ற புத்தகங்களை வாங்கு வதற்கு இதுவே சமயம்.

(i) ரூ. 15/-க்கு மேல் வாங்குபவர்களுக்கு மூன்றி லொரு பங்கு தள்ளிக்கொடுக்கப்படும். தபாற்செலவு இனாம். **33⅓%**

(ii) ரூ. 5/-க்கு மேல், ரூ. 15/-க்குள் வாங்குபவர் களுக்கு 25% தள்ளி தரப்படும். தபாற்செலவு இனாம். **25%**

(iii) ரூ. 5/-க்கு குறைந்து வாங்குபவர்களுக்கு 12½% தள்ளி தரப்படும். தபாற்செலவு இனாம். **12½%**

* தற்சமயம் ருக்மிணீகாந்தன், தயாநிதி, பரிமளகேசவன், புகழ்மாலை, கோபாலரத்னம் முதலியவை கைவசமில்லாததால், மற்றைய புத்தகங்களுக்குமாத் திரம் ஆர்டர் செய்யவும்.

முன் பணம் (மணியார்டராக) அனுப்பவும். வி. பி. கிடையாது.

ரயில்- -தபாற்செலவு இனாம்

## உடனே முந்துங்கள்

ஜகன்மோகினி ஆபீஸ், சிங்கப்பெருமாள் கோவில், B. O.

Regd. No. M. 2210.

# ஜகன்மோகினி

ஆசிரியை: வை. மு. கோதைநாயகி அம்மாள்

இப்போது 19-வது ஆண்டு நடைபெறுகிறது

வருஷசந்தா: ரூ. 1-8. தனிப் பிரதி: அணா. 2.

**ஜீவியசந்தா: ரூ. 25.**

ஜீவிய சந்தாதாரருக்கு சஞ்சிகையை அனுப்புவதுடன் இனிமேல் நமது ஆசிரியையால் எழுதப்பட்டு நம்மால் வெளியிடப்படும் எல்லா நாவல்களும் இனாமாக அளிக்கப்படும். முன்பணமனுப்பவும்; வி. பி. கிடையாது.

## ஸ்ரீமதி. வை. மு. கோ. எழுதிய 57 நாவல்கள்

ரூ. 2-8
வைதேகி
ராதாமணி
சாருலோசனா
பத்மசுந்தரன்
காதலின் கனி

ரூ. 2
நவநீதகிருஷ்ணன்
ருக்மிணீகாந்தன்
சாமளநாதன்
தியாகக்கொடி
மங்களபாரதி

ரூ. 1-12
சண்பகவிஜயம்
கௌரீமுகுந்தன்
ஸாரமதி
தயாநிதி

ரூ. 1-8
சோதனையின்
கொடுமை
உணர்ச்சி வெள்ளம்
சந்தோஷ மலர்

ரூ. 1-4
பரிமளகேசவன்
உத்தமசீலன்
இன்பஜோதி
ராஜமோஹன்
அநாதைப்பெண்
வானக்குயில்
ஜீவியச்சுழல்
கஸ்தூரி திலகம்
கானல் நீர்
ஆத்மசக்தி
புகழ்மாலை
கலாநிலயம்

ரூ. 1
சுகந்தபுஷ்பம்
சாந்தகுமாரி
மாயப்ரபஞ்சம்
சந்திரமண்டலம்
கருணாலயம்

அணா 14
கோபாலரத்னம்
புத்தியே புதையல்

அணா 12
கதம்பமாலை *

அணா 10
பட்டமோ பட்டம்
மகிழ்ச்சி உதயம்

அணா 8
நளினசேகரன்
வீரவஸந்தா
மூன்று வைரங்கள்
படாடோபத்தின்
பரிபவம்
பிச்சைக்காரக்
குடும்பம்
ஆனந்தஸாகர்
ப்ரேமப்ரபா
வத்ஸகுமார்
மாலதி
படகோட்டி

அணா 6
பக்ஷமாலிகா
சுடர் விளக்கு

அணா 4
மாதவமணி
ஜெயஸஞ்சீவி
சுகுணபூஷணம்
அம்ருததாரா
அன்பின் சிகரம்
ஸரஸராஜன் *
உளுத்த இதயம்

**"ஜகன்மோகினி" ஆபீஸ்,**

சிங்கப்பெருமாள் கோவில் போஸ்ட், (செங்கல்பட்டு ஜில்லா.)

PRINTED & PUBLISHED BY V. M. PARTHASARATHY
AT "JAGANMOHINI" PRESS, VENKATAPURAM, SINGAPERUMAL KOIL, B. O.